# திருமறைத்தீபம்



சீர்திருத்த காலாண்டிதழ்

BIBLE LAMP
திருமறைத்தீபம்

Issue No.1 of 2008
ISBN 1173-7255

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Mt. Wellington, Auckland 1641
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# வாசகர்களே!

*உங்கள் அனைவருக்கும் பத்திரிகை குழுவின் சார்பாக என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கர்த்தர் கடந்த ஆண்டில் நம்மை வழிநடத்தி சத்தியத்தின் மூலம் ஆசீர்வதித்திருக்கிறார். சத்தியத்தைவிட்டு விலகிப்போகாதபடியும் காத்திருக்கிறார். நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து சத்தியத்தில் நிலைத்திருப்பவர்களைத் தேடிப்பிடிப்பது அரிதாக இருக்கும் இந்த நாட்களில் போராட்டத்துடன் சத்தியத்தைப் பின்பற்ற கர்த்தர் நமக்கு கிருபை பாராட்டியிருப்பதற்கு அவருக்கு நன்றி கூற வேண்டியவர்களாக இருக்கிறோம்.*

*இந்த இதழில் தலைப்பு ஆக்கமாக "சத்தியப் போர்" என்ற கட்டுரை வருகிறது. பின்நவீனத்துவத்தின் தாக்கத்தினால் எழுந்துள்ள "இமர்ஜிங் திருச்சபை" என்ற பிசாசின் கைக்கூலி இயேசுவின் பெயரில் ஒழுக்கக்கேடுள்ள சமுதாயத்தோடு ஒத்துப்போய் அது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு திருச்சபையை நிலைநாட்ட முயல்கிறது. ஏற்கனவே வேத சத்தியங்களை அறியாது தடுமாறிக்கொண்டிருக்கும் தமிழினத்தில் வைரஸைப் போல இதுபரவி மேலும் ஆபத்துக்களை விளைவிக்கு முன் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காக இதை வெளியிடுகிறோம். கண்களை மூடிக் கொண்டிருக்கும்போதே நம்மைக் கவிழ்க்கப் பார்க்கிற கடமையில் ஈடுபட்டிருக்கும் பிசாசின் இந்த நவீன தந்திரத்திற்கு இடங்கொடுத்துவிடாதீர்கள்.*

*இந்த இதழில் "ஜோன் நியூட்டன்" பற்றிய இரண்டாம் பாகம் வந்திருக்கிறது. "கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியம்" என்ற தொடர் இந்த இதழில் நிறைவு பெறுகிறது. ஊழியத்தில் இருப்பவர்களும், திருச்சபைகளும் படித்து சிந்திக்க வேண்டிய தொடரிது. ஆவியானவர் இதன் மூலம் உங்களோடு பேசி சத்தியத்தின் வழியில் உங்களை நடத்துவாராக. கிறிஸ்தவ கோட்பாடுகள் நிறைவுபெற இன்னும் ஒன்பது கேள்விகள் மட்டுமே உள்ளன. அவை நிறைவுபெற்றபின் தொகுத்து நூலாக வெளியிட எண்ணியிருக்கிறோம். வேதத்தில் ஆத்துமாக்களை வளர்த்தெடுக்க திருச்சபைகளுக்கு பயனுள்ள தொகுப்பாக இது அமையும். எங்களுக்காகவும், எங்களுடைய பணிகளுக்காகவும் தொடர்ந்து ஜெபித்து வருகிற உங்களுக்கு எங்களுடைய இதயபூர்வமான நன்றிகளும், வணக்கங்களும். இந்த இதழ் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கட்டும் - ஆசிரியர்.*

# சத்தியப் போர்!

யூதா புத்தகத்தில், "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று எழுதி உணர்த்துவது எனக்கு அவசிய மாய்க் கண்டது" என்று யூதா 3ம் வசனத்தில் எழுதுகிறார். பல விதமான போலிப் போதனைகளும், சத்தியத்தைவிட்டு விலகிப்போகின்ற ஆபத்துக்களும் சபையைத் தாக்கிக்கொண்டிருந்த வேளையில் இப்படி எழுதி விசுவாசிகளுக்கு அவர்களுடைய சத்தியப் போராட்டப் பணியை உணர்த்தும் அவசியம் யூதாவுக்கு ஏற்பட்டிருந்தது. சத்தியத்துக்கும், விசுவாசத்திற்கும் ஏற்படுகின்ற இப்படிப்பட்ட ஆபத்துக்கள் இருந்திருந்து எப்போதோ அல்லது கடைசிக் காலத்திலோ மட்டும் வருவதில்லை. இவை திருச்சபை தன் வாழ்நாளில் அன்றாடம் எதிர்நோக்கும் ஆபத்துக்கள்.

இன்றைய காலகட்டத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் நாம் அடிக்கடி கேட்கக்கூடிய வார்த்தைகள் அன்பும், ஐக்கியமுமே. எல்லோர் மீதும் நாம் அன்பு காட்டவேண்டும், எல்லோரோடும் ஐக்கியமாய் இருக்க வேண்டும் என்ற வார்த்தைகள் இன்றைக்கு நாம் கேட்டுக்கேட்டுப் புளித்துப்போன வார்த்தைகளாக இருக்கின்றன. இதற்காக அன்பையும், ஐக்கியத்தையும் நாம் அலட்சியப்படுத்திவிடுவதாக எண்ணிவிட வேண்டாம். அன்பும், மெய்யான ஐக்கியமும் அவசியந்தான். ஆனால், அன்பையும், ஐக்கியத்தை யும் பற்றி மட்டுமே பேசுகிறவர்கள் சத்தியத்திற்கும், விசுவாசத்திற்கும் ஏற்பட்டிருக்கின்ற ஆபத்தை இன்று உணர்கிற நிலையிலில்லை. ரோம் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தபோது மன்னன் நீரோ பிடில் வாசித்துக் கொண்டிருந்தானாம். அதுபோலத்தான் இன்று வந்திருக்கின்ற ஆபத்தை உணராமல் பலர் அன்பு, ஐக்கியம் என்று அலறிக்கொண்டிருக்கிறார்கள்.

### போராட்ட வாழ்க்கை

மனந்திரும்பியிருக்கின்ற பாவிகளாகிய நம்மைக் கர்த்தர் போராட்ட வாழ்க்கைக்காகவே அழைத்திருக்கிறார். இதை விபரிக்கின்ற வேத வசனங் கள் வேதம் முழுவதும் நிரம்பியிருக்கின்றன. உதாரணத்திற்கு சிலவற்றைப் பார்ப்போம். மத்தேயு 11:12ல் இயேசு சொல்லுகிறார், "யோவான் ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்." தேவராஜ்யத்தை நாம் பலவந்தமாக எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதை இயேசு இதன் மூலம் உணர்த்துகிறார். இது நாம் இந்த உலகத்தில் ஈடுபட வேண்டிய போராட்டத்தைக் குறிக்கிறது. மத்தேயு 16:18ல், இயேசு பேதுருவைப் பார்த்து, "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை." என்கிறார்.

பாதாளத்தின் வாசல்கள் சபையை மேற்கொள்ளாமல் இருக்கச் செய்வ தெப்படி? கைகட்டி உட்கார்ந்திருந்து அதைச் செய்ய முடியாது. பிசாசோடு போராடி மட்டுமே அதை நிறைவேற்ற முடியும். அதைத்தான் இங்கே இயேசு விளக்குகிறார். மத்தேயு 12:28-29ஐப் பார்ப்போம். இங்கே பரிசேயர்கள் இயேசுவைப் பார்த்து பிசாசுகளின் தலைவனாகிய பெயெல் செபூலின் மூலமாக நீ பிசாசுகளைத் துரத்துகிறாய் என்று குற்றஞ் சாட்டி னார்கள். அதற்கு பதிலளித்த இயேசு, "சாத்தானை எப்படி சாத்தான் துரத்த முடியும்" என்று கேட்டு அவர்களுடைய வாயை அடைத்ததோடு, "பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில் அவன் வீட்டைக் கொள்ளையிட முடியும்." என்று விளக்குகிறார். இந்த உலகத்தில் தேவ ராஜ்யத்தைக் கட்ட வந்த இயேசு போராடியே அதைச் சாதிக்க நேர்ந்தது. தேவ ராஜ்ய ஊழியம் போராட்டத் தின் மத்தியிலேயே இந்த உலகத்தில் இறுதிவரையில் நடக்கும் என்பதை இயேசு இதன் மூலம் விளக்குகிறார்.

தன்னுடைய விசுவாச வாழ்க்கையைப் பற்றி விபரிக்கின்ற பவுல், "நல்ல போராட்டத்தைப் போராடினேன்" என்கிறார் (2 தீமோ. 4:7). பவுலுக்கு விசுவாச வாழ்க்கை போராட்டமாகத் தெரிந்திருந்தது. அது வெறும் உலக சுகங்களையும், போலி சமாதானத்தையும் கொண்டதாக இருக்கவில்லை. அவரே மறுபடியும் தீமோத்தேயுவுக்கும் நமக்கும் அறிவுரை செய்யும்போது, "நல்ல போராட்டத்தைப் போராடு. . . . அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்" என்கிறார் (1 தீமோ. 6:12). விசுவாச வாழ்க்கையை சிலம்பச் சண்டைக்கு ஒப்பிடும் பவுல், நான் "ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம்பண்ணேன்" என்கிறார். அதாவது, வெறும் காற்றை விளாசுவதற்காக நான் சிலம்பம் பண்ணமாட்டேன். அடித்தால் அது எதிரியைத் தாக்கி வெல்லுவதற்காக இருக்கும் என்கிறார். இது விசுவாச வாழ்க்கைப் போராட்டத்தை விளக்கு வதற்காக சொல்லப்பட்டது. மக்கெதோனியாவுக்கு சுவிசேஷப் பணி செய்யத் தன்னுடைய நண்பர்களோடு பவுல் வந்தபோது அவர் போராட் டத்தை எதிர்நோக்கியிருந்தார். அதுபற்றி விபரிக்கும் பவுல், "எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திர வப்பட்டோம். புறம்பே போராட்டங்களும், உள்ளே பயமும் இருந்தன" என்றார். கிறிஸ்துவின் பெயரில் உலக சுகங்களை (prosperity) மட்டும் நாடிப் போராட மனதில்லாமல் ஒதுங்கியிருந்து போலிச் சமாதானத்தோடு வாழப் பார்க்கிறவர்களுக்கும் பவுல் விபரிக்கும் விசுவாச வாழ்க்கைக்கும் எந்தத் தொடர்புமில்லை என்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா.

இதுவரை நாம் பார்த்துள்ள கிறிஸ்தவ வாழ்க்யையில் நாம் ஈடுபட வேண்டிய சத்தியப் போராட்டத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டு கிரேக்க வார்த்தைகள் "போராட்டம்" என்ற தமிழ் வார்த்தையால் வர்ணிக்கப்படுகின்றது. இதைக் குறிக்க "போர்" என்ற பதமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு பவுல் தீமோத்தேயு வைப் பார்த்து, "நீ . . . நல்ல போராட்டம் பண்ணும்படி (அதாவது போர் செய்யும்படி), உனக்கு இந்தக் கட்டளையை ஒப்புவிக்கிறேன், . ." என்கிறார்.

வெளிப்படுத்தல் விசேஷத்தில் கர்த்தருக்கும் (சபைக்கும்) சாத்தானுக்கும் இடையில் நடக்கும் போராட்டத்தைக் குறிக்கும் "போர்" என்ற பதம் எட்டு தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

மேலும் பவுல் அப்போஸ்தலன் எபேசியர் 6ம் அதிகாரம் 11ம் வசனத்தில் "பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்கிறார். இது விசுவாசிகளாகிய நாம் இந்த உலகத்தில் பிசாசோடு போராடுவதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. அத்தோடு பவுல் தொடர்ந்து நமது எதிரிகள் எப்படிப்பட்டவர்கள் என்பதைத் துல்லியமாக 12ம் வசனத்தில் விளக்கி, நாமணிந்துகொள்ள வேண்டிய ஆயுதங்களையும் படிமுறையாக 14ம் வசனத்தில் இருந்து 17ம் வசனம் வரையிலும் விபரமாக விளக்குகிறார். இத்தனைக்கும் மத்தியில் நாம் ஜெபத்தோடு விழித்திருக்கவும் வேண்டும் என்பதையும் 18ம் வசனத்தில் குறிப்பிடுகிறார்.

பவுல் 2 கொரிந்தியர் 10ம் அதிகாரத்தில் இதுபற்றி விளக்குவதையும் நாம் கவனிக்க வேண்டும். அங்கே 2ம் வசனத்தில் மாம்சத்தின்படி நடக்கிற சிலரைக் குறித்து நாம் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று எச்சரிக்கிறார் பவுல். புவுலின் இந்த வார்த்தைகள் போருக்குரிய பேச்சு. மாம்சத்தோடு இந்த உலகத்தில் நாம் ஈடுபட்டிருப்பது வெறும் உரையாடலல்ல; இரத்தம் சிந்தும் போர் என்பதைப் பலர் உணராதிருக்கிறார்கள். அதாவது, இதில் இழப்புக்கள் இருக்கும், பாதிப்பு இருக்கும், மனம் கஷ்டப்படும். ஆனால், வெற்றிமட்டும் நிச்சயம். தொடர்ந்து பவுல், "மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும் மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல" என்கிறார். அதாவது இந்த உலகத்தில் வாழ்கிற மனிதர்களாக நாம் (கிறிஸ்தவர்கள்) இருந்த போதும் இந்த உலகத்து வழிகளில் நாம் போரிடுவதில்லை என்கிறார் பவுல். நாம் ஈடுபட்டிருப்பது போராயிருந்தபோதிலும், நமது வேலை பிசாசின் அரண்களைத் தகர்ப்பதாயிருந்தபோதும் நமது ஆயுதங்கள் உலகத்து ஆயுதங்களாக இருக்காமல் தேவபலமுள்ளவைகளாக இருக்கின்றன என்கிறார் (10:4). அவர் தொடர்ந்து, "அவைகளால் நாம் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" என்கிறார். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வதென்ன? எது என்னவாக இருந்தபோதும் கிறிஸ்தவ வாழ்க்கையிலும் திருச்சபை வாழ்க்கையிலும் தவிர்க்க முடியாதது மாம்சத்தோடும், மாம்சத்துக்குரியவர்களோடும் நாமீடுபட வேண்டிய போர். இந்தப் போராட்டத்தின் மத்தியில் இந்த உலகத்தில் வளர்வதே தேவ ராஜ்யம்.

இதையெல்லாம் நான் விளக்குவதற்குக் காரணம் நாம் சத்தியப் போராட்டங்கள் நிறைந்த கிறிஸ்தவ வாழ்க்கையை சரிவரப் புரிந்து கொள்ளாமல் வெறும் உலக சுகத்தையும், போலிச் சமாதானத்தையும் மட்டும் நாடிப் போய் சாத்தானுக்குப் பலியாகிவிடக்கூடாது என்பதற்காகத்தான். இப்படி இன்று அநேகர் பிசாசின் கரத்திற்கு தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்.

*பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்னதை மறுபடியும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். "நீயும் கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய் தீங்கனுபவி. தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும் (போரில் ஈடுபடுகிற) தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக் கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ள மாட்டான்."*

## போராடும் திருச்சபை (Church Militant)

*பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இரண்டையும் உள்ளடக்கிய திருமறையின் போதனைகளின் அடிப்படையில் இறையியல் ரீதியில் திருச்சபையை விளக்குகிறபோது அதன் குணாதிசயங்களை விளக்குவதற்காக பல பெயர்களை இறையியலறிஞர்கள் பயன்படுத்தியுள்ளனர். இதன் மூலம் திருச்சபை பற்றிய முழுமையான போதனைகளை நாம் பெற்றுக்கொள்ள முடிகின்றது. உதாரணத்திற்கு இந்த உலகத்தில் காணப்படும் திருச்சபையை உள்ளூர் திருச்சபை* (Church Local), *கண்ணால் காணக்கூடிய திருச்சபை* (Church Visible), *போராடும் திருச்சபை* (Church Militant) *என்ற பெயர்களில் அழைப்பார்கள். இவற்றில் இறுதியாகக் குறிப்பிட்ட போராடும் திருச்சபை பிசாசோடும், உலகத்தோடும் திருச்சபை இந்த உலகத்தில் நடத்திவரும் போராட்டத்தைக் குறிப்பிடுகின்றது. இதை நாம் நினைவுகூறுவது அவசியம். இந்தப் போராட்டம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது தான் நிறைவு பெறும். விசுவாசிகள் அனைவரும் இத்தகைய போராட்டத்திற்காகவே சுவிசேஷத்தின் மூலம் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இதை ஏற்கனவே பவுலின் போதனைகளில் இருந்து பார்த்திருக்கிறோம். இந்தப் போராட்ட மனப்பான்மையும், போராடும் தன்மையும் திருச்சபையின் அடிப்படைக் குணாதிசயமாகும். இதுவே கர்த்தரின் பிள்ளைகளில் இருந்து பிசாசின் பிள்ளைகளை வேறுபடுத்திக் காட்டுகின்றது. இந்தப் போராடும் குணத்தைக் கொண்டு போராட்டத்தில் ஈடுபடாதது சபையாக இருக்க முடியாது. இந்தப் போராட்டமே சபையைப் பரிசுத்தமாக வைத்திருக்கும்.*

*"எதையும் எதிர்த்து நிற்கத் தயங்குகின்ற மனப்பான்மையை வளர்த்துக் கொண்டிருக்கும் ஒரு காலப்பகுதியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். போலிப்போதனைகளை எதிர்த்து நிற்பதைவிட அவற்றிற்கு இடங்கொடுத்து இருகரம் நீட்டியும் வரவேற்கின்றன இக்காலத்து சபைகள்" என்கிறார் இறையியலறிஞர் ஆர். பீ. கயிப்பர்* (R. B. Kuiper). *ஒழுக்கக் கேட்டை இன்று சபைகள் எதிர்த்து நிற்பதில்லை. ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதையும் அவை அடியோடு கைவிட்டுவிட்டன. எல்லோரோடும் பொருந்திப் போகவேண்டும் என்ற போலிச் சமாதான மனப்போக்குடன் போலி ஐக்கியத்தை சேரக்கூடாதவர்களோடு அவை வளர்த்துக்கொள்கின்றன. திருச்சபைப் பரிசுத்தத்தை நாடி அதை நிலைநாட்ட நடவடிக்கை எடுப்பவர்களை சமாதானத்தின் எதிரிகளாகக் கருதி புறந்தள்ளிவிடுகின்றன இக்காலத்து சபைகள். இவைகளுக்கு திருச்சபை இந்த உலகத்தில் போராடுவதற்காக அழைக்கப்பட்டிருக்கிறது என்ன அறிவோ, உணர்வோ இல்லை.*

*இந்தப் போராட்டம் பற்றி இயேசு கிறிஸ்து சொல்லுவதைக் கேளுங்கள். எழுபது பேரை சுவிசேஷ ஊழியத்துக்காக நியமித்து அவர்களை அனுப்பு*

முன் அவர்களைப் பார்த்து இயேசு சொன்னார், "ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல இதோ, நான் உங்களை அனுப்பு கிறேன்." இந்த வார்த்தைகள் ஊழியம் செய்யப்போகிறவர்களை எதிர் நோக்கியிருக்கும் ஆபத்துக்களையும், போராட்டத்தையும் விளக்குகின்றன. எழுபது பேரும் அந்த ஊழியத்தை நிறைவேற்றிவிட்டு திரும்பிவந்து இயேசு வைப் பார்த்து, "உங்களுடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்கு கீழ்ப்படிகிறது" என்றார்கள். அவர்களைப் பார்த்து இயேசு, "சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்" என்றார். இதற்குப் பொருளென்ன? இந்த வார்த்தைகளைப் புரிந்து கொள்ளாத வர்கள் இயேசுவின் நாமத்தில் நாமும் பிசாசுகளை விரட்டலாம் என்று இயேசு சொல்லுகிறார் என்று கூறுவார்கள். அப்படிச் சொல்லு கிறவர் களுக்கு வேதம் தெரியவில்லை. உண்மையில் இயேசு சொன்ன வார்த்தை களின் அர்த்தம் என்ன தெரியுமா? அதாவது, சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பிசாசின் கரத்திலிருப்பவர்களை விடுவிக்கும் போராட்டத்திற்கு உங்களை அனுப்பினேன். அதில் இப்போதைக்கு நீங்கள் வெற்றி அடைந்திருக் கிறீர்கள். இது தொடர்ந்து நடக்கப்போகிற போராட்டம். சாத்தான் வானத்திலிருந்து விழப்போகிறான். இந்தப் போராட்டத்தில் அவனுக்கு தோல்வி நிச்சயம் என்றுதான் இயேசு விளக்கினார்.

திருச்சபை இந்த உலகத்தில் ஈடுபட்டிருக்கிற போராட்டத்தை மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிற நூல் வெளிப்படுத்தல் விசேஷம். திருச்சபைக்கும் பிசாசுக்கும் எதிராக நிகழ்ந்துவருகின்ற போராட்டத்தைக் குறிக்கும் பதங்கள் அதிகமாகவே இந்நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அதில் பன்னிரெண்டாம் அதிகாரத்தில் கிறிஸ்துவுக்கும் பிசாசுக்கும் இடையில் நடக்கும் போர் பற்றி விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு ஆண்குழந்தையான கிறிஸ்துவைப் பெற்றெடுத்த பெண்ணாக சபை உருவ கிக்கப்பட்டிருக்கிறது. சபையின் குழந்தைகளாக விசுவாசிகள் விளக்கப்பட் டிருக்கின்றனர். சபையையும் அதன் குழந்தைகளையும் சாத்தான் அழிக்க எடுக்கும் முயற்சிகளையும் அதற்கெதிராக சபை போராடி வெற்றி பெறு வதையும் இதில் வாசிக்கிறோம்.

இந்த வகையில் திருச்சபை இந்த உலகத்தில் நடத்தும் போராட்டம் மூன்று வகையானது:

1. திருச்சபை பாவத்திற்கும், உலகத்திற்கும் எதிராகப் போராடி வருகிறது. அதாவது, விசுவாசிகள் தனிப்பட்ட முறையிலும், சபையோடு கூட்டாக வும் பாவத்திற்கும், உலகத்திற்கும் எதிராகப் போராடும் பணிக்காக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இதை புதிய ஏற்பாடு முழுவதிலும் வாசிக்க லாம். பவுல் மட்டுமல்லாமல் (ரோமர் 6; கலாத்தியர் 5:13-6:11), பேதுருவும் (1 பேதுரு 2-5), யாக்கோபுவும் (1-4), யோவானும்கூட (1 யோவான் 2) பாவத்திற் கும் உலகத்திற்கும் எதிரான இந்தப் போராட்டத்தைப் பற்றி விளக்கியிருக் கின்றனர்.

2. விசுவாசிகள் திருச்சபை மூலமாக சுவிசேஷத்தை அறிவிக்கும்போது

*பிசாசின் எதிர்ப்புகளுக்கு முகங்கொடுத்துப் போராட்டத்தின் மத்தியில் ஊழியம் செய்ய வேண்டும்.*

*சுவிசேஷ ஊழியத்தை பிசாசு ஒருபோதும் விரும்புவதில்லை. அதைத் தடை செய்ய அவன் பெருமுயற்சியெடுத்து வருகிறான். அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது அவர்களுக்கு ஏற்பட்ட அத்தனைத் தடைகளையும் அப்போஸ்தல நடபடிகளில் நாம் வாசிக்கிறோம். அதே போல் இன்றும் பிசாசு திருச்சபையின் சுவிசேஷ, மிஷனரி ஊழியங்களுக் கெதிராகத் தொடர்ந்து தன்னுடைய தந்திரோபாயங்களைப் பயன்படுத்தித் தாக்கி வருகிறான். போதகர்களும், சபை நிறுவும் பணியில் ஈடுபட்டிருப்ப வர்களும், சபை மக்களும் சுவிசேஷத்தைப் பரப்புகிறபோது பிசாசின் எதிர்ப்புகளுக்கு முகம் கொடுத்து தைரியத்தோடு தங்களுடைய பணியைச் செய்துவர வேண்டும்.*

*3. திருச்சபை உள்ளும், புறமும் பிசாசின் பலவிதமான எதிர்ப்புகளுக்கு முகங்கொடுத்து அவற்றைத் தாக்கியும், தன்னைப் பாதுகாத்தும் கொள்ள வேண்டும்.*

*திருச்சபை இந்த உலகத்தில் உள்ளும் புறமும் எதிர்ப்பைச் சந்தித்து போராட்டத்தில் ஈடுபடுகிறது. பிசாசு திருச்சபையை அமைதியாக இருக்க என்றுமே விடமாட்டான். போலிப்போதனைகளாலும், போலிப்போதகர் களாலும் அதைத் தொலைக்கப் பார்ப்பான். அத்தோடு, சபை மூப்பர் களுக்குள்ளேயும் தன்னுடைய ஆட்களைத் திணித்து சபையைக் குலைக்கப் பார்ப்பான். சபை ஆத்துமாக்கள் சத்தியத்தைவிட்டு விலகிப்போக அவர் களைத் தாக்குவான். இதையெல்லாம் புதிய ஏற்பாடு தெளிவாக விளக்கு கிறது. இதனால் திருச்சபை ஒருபோதும் இந்த உலகத்தில் போராட்டத்தில் ஈடுபடாமல் இருக்க முடியாது. அதற்கு ஒரு நிமிட அமைதி இந்த உலகத்தில் கிடைப்பது அரிது. போராட்டமில்லாமல் வாழ முயற்சி செய்யும் திருச் சபை ஒருபோதும் கர்த்தரின் திருச்சபையாக இருக்க முடியாது.*

## நமது நவீன எதிரிகள்

*இத்தனை தூரம் திருச்சபையின் போராட்ட வாழ்க்கை பற்றி நான் விளக்கி வருவதற்குக் காரணமென்ன என்று நீங்கள் ஏற்கனவே சிந்திக்க ஆரம்பித்திருக்கலாம். அதற்குக் காரணம் சாத்தான் நமக்கெதிரான இந்தப் போராட்டத்தில் புதிய புதிய தந்திரங்களைப் பயன்படுத்தி வருவதுதான். போராட அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பது தெரியாமல் உலக சுகத்துக் கும்* (Prosperity), *சரீர சுகத்துக்கும்* (Physical healing), *அலைந்து கொண்டிருப் பவர்களுக்கு பிசாசைப் பற்றிய கவலை இருக்காது. அவர்களுக்கு வேதம் போதிக்கும் இந்தப் போராட்டம் பற்றிய அறிவும் இல்லை. அவர்கள் இலகு வாக பிசாசின் தந்திரங்களுக்கு இடங்கொடுத்து விசுவாசக் குறைவுடன் வாழ்வார்கள்; அல்லது சத்தியப் புரட்டர்களாக மாறிவிடுவார்கள்.*

*ஆனால், சத்திய வாஞ்சையுடன் வேதபூர்வமான, வரலாற்றுக் கிறிஸ் தவத்தைப் பின்பற்றி அதன் அடிப்படையில் திருச்சபை வாழ்க்கைக்கு தங்களை உட்படுத்திக்கொண்டிருப்பவர்கள் பிசாசின் தந்திரங்களை அறியாதிருந்தும் அல்லது அறிந்திருந்தும் அவற்றை அசட்டை செய்தும்*

வாழமுடியாது. காலத்தை நாம் உணர்ந்து நடக்க வேண்டும் என்கிறது வேதம். எதிர்கால சந்ததிக்கு இப்போதே வழியெற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்கிறது வேதம். நமது பொறுப்புகள் அதிகம். போராட்டம் நடந்து கொண்டிருப்பது மட்டுமல்ல, போராட்ட நிலைகள் அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்றன. போர்முறைகளும், போராயுதங்களையும் பிசாசு மாற்றிக் கொண்டிருக்கிறான். அவனுடைய ஆயுதங்கள் நவீனமானவைகளாக இருக்கின்றன. சிந்திக்கும் கிறிஸ்தவர்கள் அசட்டையாக இருந்து இவற்றை அலட்சியப்படுத்திவிட முடியாது. நம்மைத் தாக்கி வெற்றி கொள்ளும் எண்ணத்திலும், நடவடிக்கைகளிலும் பிசாசு ஒரு போதும் தளர மாட்டான்; ஓயவும் மாட்டான்.

நமக்கெதிராக பிசாசு இதுவரை பயன்படுத்தியுள்ள சில ஆயுதங்களை இனி ஆராய்வோம்.

### நவீனத்துவம் (Modernism)

இன்றைய பின்நவீனத்துவ காலத்துக்கு முன்பு நவீனத்துவம் மனிதர்களின் சிந்தையை ஆட்சிபுரிந்து வந்தது. நவீனத்தும் சத்தியம் என்று ஒன்றிருப்பதை ஏற்றுக்கொண்டது. ஆனால், அதை விஞ்ஞான அடிப்படையில் மட்டுமே விளக்க வேண்டும், முடியும் என்பது அதன் கொட்பாடாக இருந்தது. அதாவது, மனித சிந்தனையைப் பயன்படுத்தியே சத்தியத்தை ஆராய்ந்து அதற்கு விளக்கமளிக்க வேண்டும் என்றது நவீனத்துவம். ஆகவே, வேதம் போதிக்கும் கர்த்தரின் கிரியைகளான அற்புதங்களை அது விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் பார்த்து அவற்றை மனித சிந்தனையால் ஏற்றுக் கொள்ள முடியாததாக தீர்மானித்து நிராகரித்தது. மனித சிந்தனையை மட்டும் பயன்படுத்தி உண்மையை அறிந்துகொள்ள முடியும் என்று நவீனத் துவவாதிகள் நம்பினர்.

இத்தகைய நவீனத்துவ எண்ணப்போக்கு வரலாற்றில் மார்க்சிஷக் கோட்பாடுகளுக்கும், சோஷலிசக் கோட்பாடுகளுக்கும், பொதுவுடமைக் கோட்பாடுகளுக்கும் வழிவகுத்தன. இதெல்லாம் ஒரு கால அளவுக்கு மனித சிந்தனைகளை ஆண்டபோதும் ஜெர்மனியில் பெர்லின் மதில் தகர்ப்போடு அடியோடு தகர்ந்தன. அதற்கு முன் நவீனத்துவம் பரந்தகோட்பாட்டுக்கும் (Liberalism), பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டிற்கும் (Evolution), புரோய்டின் உளவியல் வாதங்களுக்கும் (Froydian psychology) இடம் கொடுத்து திருச்சபையை ஆட்டிப்படைத்தது என்பதை மறுக்க முடியாது. இவையெல்லாம் பிசாசு பயன்படுத்திய தந்திரங்களேயல்லாமல் வேறென்ன? பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டால் கர்த்தரின் சிருஷ்டியை ஏற்றுக் கொள்ள மறுத்து இறையியல் கல்லூரிகளெல்லாம் வேதத்தை இன்றும்கூட தலைகீழாக மாற்றிப் போதித்து வருவதை நாமறிவோம். பரந்த கோட்பாட்டினால் (Liberalism) பாரம்பரிய சபைகளெல்லாம் ஜீவனை பிசாசுக்கு அடகுவைத்து செத்த பிணங்களாக இன்றும் நடமாடி வருவதையும் எவரால் மறுக்க முடியும். வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் பெர்லின் மதில் சுவரைத் தகர்த்து நவீனத்துவ எண்ணங்களுக்கு சாவுமணி அடித்தது.

*இதனால் பிசாசு தளர்ந்துவிட்டதாக நாம் எண்ணிவிடக்கூடாது. அவன் என்றுமே உறங்குவதில்லை; தன்னுடைய வேலைகளில் தளர்ச்சியடைவ தில்லை. இன்றைக்கு பிசாசு புதிய உத்திகளைப் பயன்படுத்தி வருகிறான். அவன் இன்று பயன்படுத்துகிற மனித சிந்தனைப் போக்கிற்குப் பெயர் பின்நவீனத்துவம். அதை இனி ஆராய்வோம்.*

## பின்நவீனத்துவம் (Post-Modernism)

*பின்நவீனத்துவம் இன்றைக்கு பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வார்த்தை. நவீனத்துவம், சத்தியம் என்று ஒன்றிருப்பதை ஏற்றுக் கொண்டபோதும் அதை விஞ்ஞான ரீதியில் மட்டுமே விளக்கவேண்டும் என்றது. ஆனால், பின்நவீனத்துவமோ உறுதியான. தெளிவான, நிலையான சத்தியமென்றொன்றில்லை என்று சாதிக்கிறது. சத்தியமென்று எதையும் உறுதியாக சொல்ல முடியாது என்றும், எதனாலும் நிரூபிக்க முடியா தென்றும் சாதிக்கிறது பின்நவீனத்துவம். அந்தவிதமாக எதைப்பற்றியும் தெளிவான விளக்கத்தைக் கொடுத்து அதுவே சத்தியம் என்று சாதிப்பவர் களை பின்-நவீனத்துவம் அகங்காரம் பிடித்தவர்கள் என்றும் அறிவு குறைந்த வர்களென்றும் அறிவிக்கிறது.*

*நவீனத்துவம் சிந்தித்து ஆராய்வதை ஒருபோதும் தவிர்க்கவில்லை* (Rational reasoning)*. காரண காரியங்களோடு ஆராய்ந்து எதைப்பற்றியும் ஒரு முடிவுக்கு வருவதைத் தவிர்க்கவில்லை* (logical reasoning)*. ஆனால், பின்நவீனத்துவமோ சிந்தனைபூர்வமாக, காரணகாரியங்களோடு எதையும் விளக்குவதை நிராகரிக்கிறது. அடிப்படை உண்மையென்று ஒன்றில்லை என்று சாதிக்கும் பின்நவீனத்துவம் எதையும் ஆராயந்து ஒரு முடிவுக்கு வருவதை நிராகரிப்பதில் ஆச்சரியமில்லை. இன்றைக்கு வேத அதிகாரத்தை நிராகரித்து, வேதத்தைப் பயன்படுத்துவதில் எந்தத் தீவிரத்தையோ, ஆர்வத் தையோ காட்ட மறுக்கும் பெந்தகொஸ்தே இயக்கம் வேத அடிப்படையில் எதையும் ஆராயத் தவறுகிறது. இது நேரடியாக பின்நவீனத்துவத்தால் வந்த ஆபத்தாக இல்லாமல் இருந்தாலும் வேத அதிகாரத்தை நிராகரித்து உணர்ச்சிகளுக்கு மட்டுமே இடங்கொடுத்துவரும் பெந்தகொஸ்தே இயக்கம் பின்நவீனத்துவத்திற்கு இலகுவாக இரையாவதை ஒருபோதும் தவிர்க்க முடியாது. வெறும் உப்புச்சப்பில்லாத தினத்தந்தி பத்திரிகை போன்றவற்றை மட்டும் வாசித்துவிட்டு நல்ல நூல்களை வாசித்து அறிவுபூர்வமாக சிந்திக் கும் வழக்கத்தையே கொண்டிராமலும், ஏற்கனவே வரலாற்றுக் கிறிஸ் தவத்தின்* (Historical Christianity) *அருமையை அறியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினம் பின்நவீனத்துவத்தின் கையில்; சின்னாப் பின்னமாகி சிதறிப்போகப் போவதை நினைத்தாலே கஷ்டமாகத்தான் இருக்கிறது.*

*பின்நவீனத்துவம் எதைப்பற்றியும் தெளிவான, உறுதியான விளக்கத்தைத் தருவதில்லை. உண்மையில் அத்தகைய தெளிவற்ற, உறுதியற்ற நாளுக்கு நாள் மாறிக் கொண்டிருக்கும் விளக்கங்களே பின்நவீனத்துவத்தின் சிறப்பம் சமாக இருக்கின்றன. பின்நவீனத்துவம் சத்தியமான ஒவ்வொன்றையும் அதனுடைய அத்திவாரத்திலிருந்து அகற்றி நொறுக்குவதைத் தனது*

பணியாகக் கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு, வேத சத்தியங்களெதையும் அது ஏற்றுக்கொள்ளுவதில்லை. சத்தியமென்றொன்றில்லை என்று சாதிக் கும் பின்நவீனத்துவம் வேத சத்தியங்களை அவை சத்தியங்களல்ல என்று விளக்குவதற்கான நடவடிக்கைகளையே எடுத்து வருகிறது. இதை ஆங்கிலத் தில் deconstructing and restructuring என்று அது விளக்குகிறது. இதைத் தமிழில் விளக்குவதானால் ஏற்கனவே சத்தியமென்ற பெயரில் இருப்பதை முற்றாக உடைத்துப் பிரித்தெடுத்து அதற்குப் புதிய விளக்கமளிப்பது என்று பெயர். உதாரணத்திற்கு ஒழுக்கநியதியென்றொன்றில்லை (Morality) என் கிறது பின்நவீனத்துவம். கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கோட்பாடு பத்துக் கட்டளைகள். அவை ஒழுக்கநியதிகளாக, கர்த்தரின் அதிகாரபூர்வமான கட்டளைகளாக, நம்மைக் கர்த்தரின் வழியில் வழிநடத்துகின்ற ஒழுக்கக் கோட்பாடுகளாக இருக்கின்றன. பின்நவீனத்துவம் அதை மறுக்கின்றது. இந்தக் கோட்பாடுகள், இதுதான் ஒழுக்கம் என்று வரையறுத்து தெளிவாகத் தரும் விளக்கம் பின்நவீனத்துவத்தின் அடிப்படை எண்ணப்போக்கிற்கு எதிரானதாக இருந்துவிடுகின்றன. அதனால் பின்நவீனத்துவத்தைப் பொறுத்தவரையில் இந்தக் கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவை யல்ல. ஆகவே, பின்நவீனத்துவ சிந்தனையாளர்கள் இந்த ஒழுக்க நியதிக் கோட்பாடுகளைத் தகர்த்து தத்துவ ரீதியிலான விளக்கங்களை அளித்து அவற்றின் அத்திவாரத்தையே உடைக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் பத்துக்கட்டளைகள் எதுவாக இருந்தபோதும் மனிதன் பின்பற்ற வேண்டிய அடிப்படை ஒழுக்க நியதிகளாக ஒருபோதும் இருக்க முடியாது.

பின்நவீனத்துவம் எதையும் அடிப்படைப் போதனையாக (Absolute truth) ஏற்றுக்கொள்வதில்லை. உண்மையில் அப்படியொன்றில்லை என்பது அதன் தீர்க்கமான வாதம். சத்தியம் என்பது தீர்க்கமாகவும், உறுதியாகவும் விளக்கமுடியாதது என்று பின்நவீனத்துவம் சாதிக்கின்றது. இத்தகைய எண்ணப்போக்கால் பின்நவீனத்துவத்தைப் பொறுத்தவரையில் அதிகார பூர்வமானதென்று எதுவுமே இருக்கமுடியாது. இதுதான் சத்தியம், இதுதான் உண்மை, இதைத்தான் எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்றெல்லாம் சொல்வது பின்நவீனத்துவத்தைப் பொறுத்தவரையில் அடிப்படையிலேயே தவறு. இத்தகைய எண்ணப்போக்கைக் கொண்டுள்ள பின்நவீனத்துவம் கிறிஸ்தவத்திற்கு இன்று தோன்றியுள்ள பெரும் எதிரி. கர்த்தர் மட்டுமே அதிகாரமுள்ளவர் என்றும் அவருடைய தெளிவான வார்த்தை மட்டுமே மனிதனுடைய பாவத்தை விளக்கி நேர் வழியில் அவன் நடக்க உதவ முடியும் என்றும் ஆணித்தரமாகப் போதிக்கும் கிறிஸ்தவம் பின்நவீனத்து வத்தின் பேரெதிரியாக இருக்கிறது. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று அடிப்படையிலேயே முரண்பாடானவை. என்றும் இணைய முடியாத பெரும் இடைவெளிகள். இன்று மேலைத்தேய நாடுகளின் சிந்தனைப் போக்கை வெகுவேகமாக ஆக்கிரமித்துவரும் பின்-நவீனத்துவம் கீழைத்தேய நாடுகளை சீக்கிரம் ஆக்கிரமிக்கத்தான் போகிறது. மேலைத்தேய கிறிஸ்தவர் களை பின்நவீனத்துவம் பெரிதும் ஆக்கிரமித்து அவர்களை சீரழிக்க ஆரம்பித்துவிட்டது. திருச்சபைகள் இதனால் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றன. பின்நவீனத்துவத்தின் கவர்ச்சியில் மயங்கித்

*தங்களைப் பலிகொடுத்துவிட்ட சபைகளும் அங்கு ஏராளம். கர்த்தரின் அதிகாரத்தையும், அவருடைய வார்த்தையையும் எதிர்த்து இன்று எழுந் திருக்கும் பின்நவீனத்துவம் எந்தவகையில் திருச்சபையைப் பாதித்திருக் கிறது என்பதை நாம் இனி ஆராய்வது அவசியம். அந்த வகையில் பின் நவீனத்துவ சிந்தனைப் போக்கு மேலைத்தேய நாடுகளில் பெற்றெடுத் திருக்கும் ஆத்மீகக் குழந்தைதான் "இமர்ஜிங் திருச்சபை"* Emerging Church.

## "இமர்ஜிங் திருச்சபை" (Emerging Church)

*பின் நவீனத்துவ சிந்தனைகள் வளர்ச்சியுற்ற நாடுகளான மேலைத்தேய சமுதாயங்களைப் பாதித்து கர்த்தருக்கு எதிரான சிந்தனைகளை அவர்கள் வளர்த்துக்கொள்ளும்படி செய்கின்றன. இந்த அடிப்படையிலே பாடசாலை களிலும், கல்லூரிகளிலும், ஏனைய இடங்களிலும் போதனைகள் வழங்கப் படுகின்றன. இந்த அடிப்படையிலேயே ஆட்சியாளர்களால் சமுதாய முன் னேற்றத்துக்கான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. அநேக மேலை நாடு களில் பாடசாலைகளில் வேதத்தைப் பயன்படுத்துவதற்கு தடை இருக் கின்றது. ஏனெனில், அது பின்நவீனத்துவ சமுதாய எண்ணங்களுக்கு தடையாக இருக்கின்றது.*

*இத்தகைய பின்நவீனத்துவ எண்ணப்போக்கு அது வளர்ந்து கொண் டிருக்கும் சமுதாயங்களில் திருச்சபையையும், கிறிஸ்தவர்களையும் தாக்காமல்விடாது. சமுதாயங்களில் உருவாகின்ற அத்தனை பாவகரமான சிந்தனைகளும் வரலாற்றில் கிறிஸ்தவத்தைத் தாக்காமல் இருந்ததில்லை. அதனால்தான் யோவான் அப்போஸ்தலன், 1 யோவானில் உலகத்தின் சிநேகம் கர்த்தருக்கு எதிரானது என்று தெளிவாக எச்சரித்திருக்கிறார். உலக சிநேகத்தின் ஆபத்துக்களையும், உலகத்தின் எண்ணப்போக்கும் கிறிஸ் தவத்திற்கு எதிரி என்பது யோவானுக்குத் தெரிந்திருந்தது. ஆனால், வேதத்தை அதிகாரமாக ஏற்று அதன் வழிப்படி நடக்காத கிறிஸ்தவர்களும், திருச் சபைகளும் எப்போதும் அசத்தியத்தை இருகரம் கூப்பி வரவேற் றிருப்பதையும் வரலாற்றில் நாம் பார்க்கிறோம். இதற்கு எதிரான போதனை களை புதிய ஏற்பாடு முழுவதிலும் நாம் வாசிக்கிறோம்.*

*சத்தியத்தின் அடிப்படையில் சுவிசேஷ ஊழியங்களையும், திருச்சபை ஊழியங்களை நடத்தாதவர்கள் இன்று மேலை நாடுகளில் பின்நவீனத்துவ சிந்தனைகளை வரவேற்று அவற்றின் அடிப்படையில் ஊழியம் செய்து வருகிறார்கள். பின்நவீனத்துவத்தால் ஏற்படுகின்ற பாதிப்பை உணராது இவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். இத்தகையோர் ஆரம்பித்திருக்கும் புதிய இயக்கம்தான் "இமர்ஜிங் திருச்சபை"* (Emerging Church). *இதற்குப் பொருளென்ன? திருச்சபையை, அதை நாம் இன்று புரிந்துகொண்டிருக்கும் முறையில் இருந்து முற்றாக மாற்றி, தாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் சமுதாயத்தின் கலாச்சாரத்திற்கு ஏற்றமுறையில் நடந்து, சத்தியத்தைப் பற்றி நாம் இதுவரை கொண்டிருந்த எண்ணங்களையும் மாற்றியமைத்துக் கொள்ளும் முயற்சியில் உலகத்தின் பல பாகங்களில் கூடி ஈடுபட்டிருக்கும் கிறிஸ்தவர்களின் கூடுகைக்குப் பெயர் தான் "இமர்ஜிங் திருச்சபை". இன் னொருவிதத்தில் இதை விளக்கினால், வரலாற்றுக் கிறிஸ்தவத்தின் அடிப்*

படையில் அப்போஸ்தலர்களால் நிறுவப்பட்ட திருச்சபையும், அப்போஸ் தலப் போதனைகளும் இன்றைய பின்நவீனத்துவ சமுதாயத்துக்கு ஒத்து வராது என்று முடிவுகட்டி இன்றைய சமுதாயத்துடன் பொருந்திப்போகும் வகையில் திருச்சபையை உருவாக்கும் பணியே “இமர்ஜிங் திருச்சபை”. இந்த இயக்கத்தின் முன்னோடிப் பேச்சாளர்களாக இருந்து அதன் போதனைகளை விளக்கிவருகிறவர்கள் பிராயன் மெக்லாரன் (Brian McLaren), டோனி கெம்போலோ (Tony Campolo) போன்றோர். இந்த இயக்கத்தின் போதனைகளை விபரித்து டேன் கிம்பல் (Dan Kimbell) எழுதியுள்ள “இமர்ஜிங் திருச்சபை” என்ற நூலுக்கு ரிக் வொரனும் (Rick Warren, Pastor of Saddleback Church, California, USA), பிராயன் மெக்லாரனும் வரவேறேபளித்து நூலில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ரிக் வொரன் ஏற்கனவே பின்நவீனத்துவ சிந்தனைப்போக்கைப் பின்பற்றி ஊழியம் செய்து வருகிறார். இவர்களுடைய பிரதான விளக்கம், “இந்த சமுதாயத்து மக்களை சுவிசேஷத்தின் மூலமாக அடையவேண்டுமானால் அவர்கள் எப்படி சிந்தித்து நடந்துகொள்ளுகிறார்களோ அதேபோல நடப் பதைத் தவிர வேறு வழியில்லை” என்பதுதான். இதை அடிப்படையாகக் கோண்டே “இமர்ஜிங் திருச்சபை” எல்லா விஷயங்களையும் அனுகுகிறது. உதாரணத்திற்கு பிராயன் மெக்லாரன் ஓரினச் சேர்க்கை (Homosexuality) பற்றித் தரும் விளக்கத்தைக் கவனியுங்கள். “நாம் இன்னும் ஐந்து வருடங் களுக்கு ஓரினச் சேர்க்கையைப் பாவமென்றோ பாவமில்லையென்றோ சொல்லக்கூடாது. இன்னும் ஐந்து வருடங்களில் இது பற்றி நமக்கு தெளிவு ஏற்பட்டால் அதைப் பற்றிப் பேசுவோம். அப்படி நமக்கு தெளிவு பிறக்கா விட்டால் மேலும் ஐந்து வருடங்களுக்கு அதுபற்றிப் பேசுவதைத் தள்ளிப் போடுவோம்” என்கிறார். (Truth War, John McArthur). பிராயன் மெக்லார னின் வார்த்தைகளின் பொருள் உங்களுக்குப் புரிகிறதா? அவர் விடுகின்ற பெரிய தவறைக் கவனியுங்கள். முதலில், ஓரினச் சேர்க்கை பற்றி வேதம் தெளிவாக அதைப் பாவம் என்று அறிவிக்கிறது. பிராயன் மெக்லாரன் தன்னுடைய பின் நவீனத்துவ சிந்தனையின்படி அதை நிராகரிக்கிறார். இன்று மேலை நாட்டு சமுதாயங்கள் ஓரினச் சேர்க்கையை ஆதரித்து நாடுநாடாக அதை அங்கீகரிக்கும் சட்டங்களைக் கொண்டு வந்து கொண் டிருக்கின்றன. மேலை நாட்டு சமுதாயம் அதை ஒழுக்க நடவடிக்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. பிராயன் மெக்லாரன், சமுதாயத்தின் அந்த சிந்தனையை நாம் கண்டிக்கக் கூடாது; நிராகரித்துப் பேசவும்கூடாது என்கிறார். இன்னும் ஐந்து வருடங்களில் சமுதாயம் எங்கு போகிறது என்று பார்த்துவிட்டு அதன் போக்கிற்கு எதிராக நடக்காமல் நாம் எந்த முடிவையும் எடுக்க வேண்டும் என்கிறார். இதுதான் “இமர்ஜிங் திருச்சபை” காட்டுகிற வழி.

இவை தவிர “இமர்ஜிங் திருச்சபை” இயக்க வழிகளைப் பின்பற்றி நடக்கிறவர்கள் சத்தியத்தை சத்தியமாக ஏற்றுக்கொள்ளாமல் அதை அக்கு வேறு ஆணிவேறாக சிதைத்து உலக வழியில் விளக்கமளிக்கும் செயலையும் செய்து வருகிறார்கள். அவர்கள் விசுவாச அறிக்கைகளையும், வினாவிடைப் போதனைகளையும் வெறுக்கிறார்கள். அவை பின்நவீனத்துவ சமுதாய

சிந்தனைகளுக்குப் பொருந்தாதவை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இதுதான் சத்தியம் என்று வேதத்தை ஆதாரமாகக் கொண்டு காரண காரியங்களுடன் ஆணித்தரமாக விளக்குகிற எதையும் சமுதாய மக்களின் மேல் அவர்களுடைய சிந்தனைக்குப் புறம்பான விஷயங்களைத் திணிக்கும் முயற்சியாக அவர்கள் கருதுகிறார்கள். "இமர்ஜிங் திருச்சபை" சத்தியத்தைக் கலந்துரையாடலுக்குரியதொன்றாக (Dialogue) மட்டும் கருதுகிறது. வேதம் சம்பந்தமான எந்த விஷயத்தையும் கலந்துரையாடி நாமெடுக்கும் எந்த முடிவையும் சத்தியமென்ற பெயரில் ஒருவர் மேலும் திணிக்காமல் அவரவருடைய வசதிக்கேற்ற முறையில் நடந்துகொள்ளும்படி விட்டுவிடவேண்டுமென்பது இந்த இயக்கத்தின் வாதம். இதுதான் சத்தியம் என்று எதையும் உறுதியாக ஒருபோதும் கூறக்கூடாது என்கிறார்கள் "பின் நவீனத்துவ சமுதாயத்திற்கேற்ற முறையில் இறையியலை உருவாக்குதல்" என்ற தலைப்பில் 2001ல் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூலில் ஸ்டென்லி கிரென்ஸூம் (Stanley Grenz), ஜோன் பிரேங்கியும் (John Franke). பரிசுத்த ஆவியானவர் பாரம்பரியம், கலாச்சாரம், வேதம் எல்லாவற்றின் மூலமும் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதால் இறையியலறிஞர்கள் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் கலாச்சாரத்திற்கேற்றபடி மாறுதலுக்கு தன்னை உட்படுத்திக் கொள்ளும்வகையில் இறையியல் விளக்கங்களைத் தர வேண்டும் என்கிறார்கள் இந்த இருவரும். இது எத்தனை பெரிய ஆபத்து என்பதை வாசகர்கள் புரிந்துகொண்டால் சரி.

கிரேன்ஸ், பிரேங்கி ஆகியோருடைய நூலால் கவரப்பட்டு தன்னுடைய இறையியல் கோட்பாடுகளை மாற்றிக் கொண்டிருக்கிறார் ஜோன் ஆம்ஸ்ட்ரொங் (John Armstrong). டாக்டர் ஜோன் ஆம்ஸ்ட்ரொங் சீர்திருத்தக் கிறிஸ்தவராக தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தவர். Reformation and Revival என்ற இறையியல் பத்திரிகையின் ஆசிரியர். சமீபகாலமாக இவருடைய இறையியல் கோட்பாடுகள் சீர்திருத்த கிறிஸ்தவத்திற்கு முரணான வழிகளில் போய்க்கொண்டிருக்கின்றன. இதை ஜோன் மெக்கார்தர் தன்னுடைய நூலில் (The Truth War) இணங்காட்டுகிறார். ஆம்ஸ்ட்ரொங் தன் கைப்பட எழுதியுள்ள நூலில் பின்வருமாறு தெரிவித்திருப்பதாக மெக்கார்தர் குறிப்பிடுகிறார். "சீர்திருத்த இறையியலறிஞர்களும், போதகர்களும் அசைக்க முடியாததும், உறுதியானதுமான உண்மைகளை நிலைநாட்டப்பார்க்கிறார்கள். . . 'ஆனால், கிரேன்ஸூம், பிரேங்கியும் அத்தகைய போக்கு காரணகாரியங்களுடன் ஆராய்ந்து முடிவுக்கு வருவதை மகிமைப்படுத்துகிறதே தவிர விஞ்ஞானத்தையல்ல என்கிறார்கள். எத்தகைய இறையியல் போக்கைக் கொண்டிருக்க வேண்டும் என்பது பற்றிய எண்ணுடைய எண்ணங்களை இப்போது நான் மாற்றிக்கொண்டு விட்டேன். நான் பிரேங்கியுடைய முடிவுகளை ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார் ஆம்ஸ்ட்ரொங். தொடர்ந்து அவர், "கிறிஸ்தவ இறையியலுக்கு அடிப்படையென்று ஒன்றிருக்குமானால் (அப்படியொன்றிருப்பதாக நான் நம்புகிறேன்), அது திருச்சபையிலோ, வேதத்திலோ, கலாச்சாரத்திலோ, பாரம்பரியத்திலோ இல்லை" என்கிறார். ஜோன் ஆம்ஸ்ட்ரொங், கிரேன்ஸ், பிரேங்கி, பிராயன் மெக்லாரன்

எல்லோருமே பின்நவீனத்துவ சிந்தனைப் போக்கைக் கையாண்டு சத்திய மென்று அழைக்கக்கூடிய நிலையான ஒரு கோட்பாடு இல்லை என்கிறார் கள். இவர்களுடைய வழிகளைப் பின்பற்றினால் கர்த்தரைப் பற்றி என்றைக்கும் நிலையானயான கோட்பாடுகளை வேதத்தில் இருந்து பெற முடியாது என்ற முடிவுக்கு வருகின்ற நிலைமைக்கு நம்மைத் தள்ளிவிடும். பின்நவீனத்துவ "இமர்ஜிங் திருச்சபைப்" போக்கும் போதனைகளும் மிகவும் ஆபத்தானவை. இன்றைக்கு பின் நவீனத்துவ எழுத்தாளர்கள் தங்களுடைய போதனைகளை இன்டர்நெட், நூல்கள், ஆடியோ சிடி என்று அனைத்தை யும் பயன்படுத்தி கிறிஸ்தவ சமுதாயத்தின் சிந்தனைப் போக்கை மாற்றியமைக்க முயன்று வருகிறார்கள். இந்த முறையில் சத்தியத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது "இமர்ஜிங் திருச்சபை".

"இமர்ஜிங் திருச்சபை" இயக்கம் இதையெல்லாம்விட இன்னும் கேவல மான வழிகளைப் பின்பற்றி வருகிறது. சமுதாய மக்களை இயேசுவைப் பின்பற்ற வைப்பதாக சொல்லி சுவிசேஷத்தை விற்கும் செயலை இந்த இயக்கம் செய்கிறது. இப்படி சுவிசேஷத்தை விற்கும் செயலை சுவிசேஷ இயக்கம் எப்போதோ ஆரம்பித்து வைத்துவிட்டது. Seeker sensitive, User friendly, reaching the unchurched என்ற சிந்தனைகளின் வழிகளில் கிறிஸ் தவத்தை எப்படியாவது சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் ஒரு சுமுகமான நிலையை உருவாக்கும் பணியில் அது தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. அதையெல்லாம் தாண்டி இன்னுமொரு படிமேலே போய் எந்தவித தயவு தாட்சண்யமும் இல்லாமல் "இமர்ஜிங் திருச்சபை" இயக்கம் சுவிசேஷத்தை விலைமாதாக்கி விற்றுக்கொண்டிருக்கிறது. இந்த இயக்கம் திருச்சபை போதகர்களை இனிப் போதகர்கள் என்று அழைக்கக்கூடாது என்கிறது. அவர்கள் "கதை சொல்லுகிறவர்கள்" என்ற பெயரிலேயே இது அழைக்க ஆரம்பித்திருக்கிறது. ஏனென்றால், சமுதாயம் அதிகாரம் என்ற பெயரில் வரும் எதையும் வெறுப்பதால் அதிகாரம் செலுத்துவதுபோல் தெரிகின்ற "போதகர்" என்ற வார்த்தை சமுதாயத்துக்கு ஒத்துவராது என்று இந்த இயக்கம் தீர்மானித்திருக்கிறது. இதுவரை கிறிஸ்தவர்கள் பயன்படுத்தி வந்த வார்த்தைகளையும், மொழிநடையையும்கூட மாற்றிக்கொள்ள வேண்டு மென்கிறது இந்த இயக்கம். ஏனென்றால், சமுதாயத்துக்கு அது பிடிக்க வில்லையாம், கெட்ட வார்த்தைகளையும், (filthy, vulgar language) பாலியல் சம்பந்தமான வெளிப்படையான பேச்சுக்களையும் (open sexual language) சமுதாயம் இன்றைக்கு தாராளமாக எல்லா இடங்களிலும் பயன்படுத்தி வருவதால் அவற்றையும் கிறிஸ்தவ போதகர்கள், அதாவது கதை சொல்லு கிறவர்கள் தாராளமாகப் பயன்படுத்த வேண்டும் என்கிறது இந்த இயக்கம். அப்படிச் செய்தால்தான் சமுதாய மனிதன் நம்மை அங்கீகரித்து சபையில் நமக்குப் பக்கத்தில் வந்து சங்கோஜமில்லாமல் உட்காருவானாம். சமுதாய மனிதன் நம்மை ஏற்றுக்கொள்ளும்விதமாக தங்குதடையில்லாமல் அவன் நடந்துகொள்ளுவதைப்போல எல்லாவிதத்திலும் நடந்து கொண்டால் மட்டுமே அவனுக்கு நம்மைப் பிடிக்கும்; நம்முடைய சுவிசேஷத்தையும் பிடிக்கும் என்கிறது "இமர்ஜிங் திருச்சபை" இயக்கம். இந்தப் போக்குக்கு முழு ஆதரவு தெரிவித்து அங்கீரித்திருக்கிறார் ரிக் வொரன் (Rick Warren).

## பிசாசின் தந்திரங்களை எதிர்த்துப் போராடவேண்டும்

*பிசாசு ஒளியின் தூதனாகத் தன்னை அடையாளம் காட்டிக்கொள்ளும் என்று வேதம் எச்சரிக்கிறது. முடிந்தால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் அது வஞ்சிக்கப்பார்க்கும் என்கிறது சத்திய வேதம். பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாயிருக்கும்படி பவுல் எபேசியர் 6ல் எழுதி நம்மை எச்சரிக்கிறார். பின்நவீனத்துத்தையும் அதன் குழந்தையான “இமர்ஜிங் திருச்சபையின்” போலிப்போதனைகளையும் நாம் எதிர்த்து நிற்பது அவசியமாகிறது. மேலை நாடுகளில் வாழ்ந்து வருகின்ற தமிழ் கிறிஸ்தவர்கள் இவற்றின் தாக்கங்களை உடனடியாக் காண்கிறவர்களாக இருக்கிறார்கள். கீழைத்தேய நாடுகளுக்கு இவை விஷத்தைப் போல சீக்கிரமே பரவ ஆரம்பிக்கும் (இதுவரை வந்திருக்காவிட்டால்). கிறிஸ்தவ திருச்சபைகளுடையதும், போதகர்களுடையதும் சிந்தனைகளை மாற்ற ஆரம்பிக்கும். பெந்தகொஸ்தே இயக்கத்தினாலும், தனிநபர் ஊழியங்களாலும், சத்தியவாடையே இல்லாத ‘கிறிஸ்தவ’ ஊழியங்களாலும் பாதிக்கப்பட்டு வலிமை இழந்து காணப்படும் தமிழினக் கிறிஸ்தவம் பின்நவீனத்துவ போதனைகளுக்கு அடிக்கக கொண்டுபோகும் ஆட்டைப் போல இலகுவாக இரையாகும் பலவீனத்தோடு இருக்கிறது. காரண காரியங்களோடு வேத அடிப்படையில் எதையும் ஆராய்ந்து தண்ணீரிலிருந்து பாலைப் பிரித்தெடுக்கும் அன்னப்பறவைபோல இருக்கக் கற்றுக்கொள்ளாமல் உணர்ச்சிக்கும், மனித மாயைக்கும் அடிமையாகி, உலக சுகபோகத்தை நாடி நிற்கும் தமிழினத்துக் கிறிஸ்தவம் பின்நவீனத்துவ சுனாமியை எதிர்த்து நிற்கும் எந்த வலிமையையும் கொண்டிருக்கவில்லை. தற்காப்பு அரண்களையும், போரிடும் ஆயுதங்களையும் வைத்திருக்கக் கற்றுக்கொள்ளாத தமிழ் கிறிஸ்தவம் பின்நவீனத்துவத்தின் முன் சின்னாப் பின்னமாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் இன்றைக்கு சிந்திக்க ஆரம்பித்திருக்கும் சீர்திருத்தக் குழந்தைகளும், இங்குமங்குமாக தவழ்ந்து வளர்ந்து வருகின்ற சீர்த்திருத்த கிறிஸ்தவ ஆர்வலர்களும் பின்நவீனத்துவப் போக்கில் இருந்து தங்களைக் காத்துக்கொள்ள பின்வரும் சத்திய ஆயுதங்களைக் கையிலெடுத்து போராடத் தயாராகும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.*

**1. வேதத்தின் அதிகாரத்தையும், போதுமான தன்மையையும் அது மட்டுமே எல்லா விஷயங்களிலும் இறுதி முடிவை எடுக்கக் கூடியது என்பதையும் நாம் ஆணித்தரமாக விசுவாசித்துப் போதிக்க வேண்டும்.**

*வேதத்தை கையில் வைத்துக்கொண்டே அதை மறுத்தும், அதற்கெதிராக நடந்தும், அதன் அடிப்படையில் எதையும் செய்யாமலும் தமிழ் கிறிஸ்தவம் தொடர்ந்தும் வாழ்ந்து வருகிறது. பாரம்பரியப் பிசாசையும், இந்துக் கலாச்சாரக் குட்டிப் பிசாசின் கையாளான தமிழ் கலாச்சாரத்தையும் பின்பற்றி இயேசுவின் பெயரில் போலிக்கிறிஸ்தவ வாழ்க்கை நடத்தி வருகிறது தமிழினக் கிறிஸ்தவம். சாதியும், சடங்கும் இன்றும் அதைவிட்டபாடில்லை. இந்த 21ம் நூற்றாண்டிலும் உலகமெங்கோ போய்க் கொண்டிருக்க தமிழினக் கிறிஸ்தவம் சாதியைப்பின்பற்றி கர்த்தரை அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கிறது. நயவஞ்சகப் போதகர்கள் சபைகளை*

விட்டு சாதி அகல முடியாதபடி அதற்கு வேலியாய்த் தொடர்ந்து இருந்து வருகிறார்கள். இதெல்லாம் பின்நவீனத்துவத்தை மாலை போட்டு வரவேற்கக் கூடிய நயவஞ்சகச் செயல்கள். சத்தியத்தை மறுக்கும் பின்நவீனத்துவம் இத்தகைய போலித்தனங்கள் தொடர்ந்து நிலைத் திருக்கவே வழிவகுக்கும். கொஞ்ச நஞ்சமிருக்கும் சத்தியத்தையும் இல்லாம லாக்கிவிடும்.

தமிழினப் பெந்தகொஸ்தே இயக்கம் வேதத்திற்கு மதிப்புத் தருவதில்லை. வேத அதிகாரத்தை உணர்ந்து அதைப் புரிந்துகொண்டு ஊழியம் செய்வதில்லை. வேதம் மட்டுமே எல்லா விஷயத்திலும் இறுதி முடிவெடுக் கக் கூடியதென்று அது ஒத்துக்கொள்ளுவதில்லை. இந்தப் போக்கு பின்நவீனத்துவத்திற்கு வசதியானது. பெந்தகொஸ்தே இயக்கம் வேதத்தின் படி நடக்காவிட்டாலும் வேதத்தை முற்றாக இன்னும் நிராகரித்து விட வில்லை. ஆனால், வேதத்தின் தன்மை பற்றிய தெளிவான எண்ணங் களையும், விசுவாசத்தையும் அதுகொண்டிராததால் பின்நவீனத்துவத்திற்கு அது சுலபமாக இரையாகிவிடும்.

சத்தியம் உறுதியானது (concrete). அது கர்த்தரிடம் இருந்து வெளிப்பட்டு இன்று பூரணமாக எழுத்தில் இருக்கிறது (handed over in writing). அது மட்டுமே சத்தியம். வெளிப்படுத்தப்பட்டு எழுத்தில் இருக்கும் சத்தியம் மட்டுமே எந்தவிஷயத்திலும் இறுதித் தீர்மானம் எடுக்கக்கூடியது (final authority in all matters of faith and practice). அதன் முடிவே கர்த்தரின் முடிவு. சத்தியம் தெளிவானது (clear); புரிந்துகொள்ள முடியாததல்ல. கர்த்தர் வேதத்தில் தெளிவாக தன்னைப் பற்றியும், இரட்சிப்பு பற்றியும், விசுவாச வாழ்க்கை பற்றியும் விளக்கியிருக்கிறார். சாதாரண மனிதர்களும் அவற்றைத் தங்களுடைய சொந்த மொழியில் வாசித்து விளங்கிக்கொள்ள முடியும். பேதுரு சொல்லுவதுபோல் பவுலுடைய சில போதனைகள் கடினமாக இருக்கலாம். ஆனால், ஆராய்ந்து படிக்கும்போது அவற்றை எல்லோரும் விளங்கிக் கொள்ள முடியும். பின்நவீனத்துவம் கூறுவதுபோல் வேதம் தெளிவற்றதல்ல. நாம் தெரிந்துகொள்ள அவசியமற்றவற்றை மட்டுமே கர்த்தர் நமக்குத் தரவில்லை. நமக்குத் தேவையான, அவசியமான அத்தனையையும் தெளிவாகக் கர்த்தர் வேதத்தில் விளக்கியிருக்கிறார்.

சத்தியம் போதுமானது (sufficient for all matters of faith and practice). சத்தி யத்தைத் தவிர நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், சபை வாழ்க்கைக்கும் வேறு எதுவும் அவசியமில்லை. காலமும், சமுதாயமும் மாறிக்கொண் டிருந்தாலும் சமுதாயப் பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வு என்றும் மாறாத, மாறவும் முடியாத கர்த்தரிடமும், அவருடைய வேதத்திலும் மட்டுமே உண்டு. கர்த்தரின் வேதம் தருகின்ற முடிவுகள் எக்காலத்துக்கும் போது மானவை. அவை மட்டுமே வாழ்வும் வளமும் அளிக்கக் கூடியவை என்ற உறுதியான சத்தியங்கள் இன்றைக்கு ஆணித்தரமாகப் போதிக்கப்பட வேண்டியவை. இதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் பின்நவீனத்துவத்திற்கு பலி யாகப் போகிறார்கள்.

**2. காரண காரியங்களுடன் சத்தியத்தைத் தகுந்த வேத ஆதாரங்களுடன் விளக்கும், போதிக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொண்டு அத்தகைய போதனைகளைத் தரும் வரலாற்று விசுவாச அறிக்கைகளையும், வினாவிடைப் போதனைகளையும் நமது சபை மக்கள் கற்று வளரும்படிப் போதிக்க வேண்டும்.**

*பின் நவீனத்துவம் சத்தியத்தை சத்தியமாகக் காரண காரியங்களுடன் படிமுறையில் ஆணித்தரமாக விளக்குவதை நிராகரிக்கிறது* (denies all propotitional truth). *அடிப்படையில் சத்தியமென்றொன்றில்லை என்று சாதிக்கும் பின் நவீனத்துவம் இதை எதிர்ப்பதில் ஆச்சரியமில்லை. சத்திய மானது, உறுதியான தெளிவான போதனை என்று எதையும் விளக்கக் கூடாது என்கிறது பின்நவீனத்துவம். அத்தகைய மனப்போக்கிற்கு திருச் சபைகள் இடங்கொடுக்காமல் இருக்க என்றுமில்லாதவகையில் இன்றைக்கு சத்தியம் காரண காரியங்களுடன் படிமுறையாக முறைப்படுத்தப்பட்டு* (logical systematic teaching) *விளக்கப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது. 1689 விசுவாச அறிக்கையும், இந்த இதழ்களில் நாம் தொடர்ந்து "கிறிஸ்தவக் கோட்பாடுகள்" என்ற தலைப்பில் விளக்கமளித்து வருகின்ற வினாவிடைப் போதனைகளும் இதை நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் அவசியம். இந்த அடிப்படையில் நமது மக்களை நாம் வளர்க் கும்போது அவர்கள் வேத சத்தியத்திலும், கர்த்தரை அறிகின்ற அறிவிலும் வளருவார்கள். இதற்காக வெறும் அறிவு மட்டும் போதும் என்று நான் சொல்ல வரவில்லை. இந்த வேத அறிவு அறிவுபூர்வமாக மட்டுமல்லாமல், இரட்சிப்பின் அடிப்படையில் உணர்வுபூர்வமாக நடைமுறையில் நம்முடைய வாழ்க்கையில் இருக்கவேண்டும். கர்த்தரின் அன்பில் வளர அது உதவுவதாக இருக்க வேண்டும். பின்நவீனத்துவம் சமுதாயத்தில் முதலில் தனக்கு இரையாக்கிக்கொள்ளப்போவது வாலிபர்களைத்தான். இளம் வயதில் இருப்பவர்களை விசுவாச அறிக்கை, வினாவிடைப் போதனைகள் ஆகியவற்றில் வளர்த்து வருவது அவர்களைக் கர்த்தரில் பாதுகாத்து வளர்க்க உதவும்.*

**3. வேதத்தை சரியாக விளங்கிக் கொள்ள அவசியமான வேதவிதிமுறைகளை நாம் கற்றுக்கொண்டு நமது மக்களுக்கும் கற்றுத் தர வேண்டும்.**

*வேத போதனை, பிரசங்கம் என்ற பெயரில் இன்றைக்கு தமிழினத்தின் வேதம் தலைகீழாகப் போதிக்கப்பட்டு வருவது சகலரும் உணர்கிற ஓர் உண்மை. இதற்குக் காரணம் பெரும்பாலான பிரசங்கிகள் வேதத்தை எப்படி விளங்கிப் போதிப்பது என்பதைக் கற்றுக்கொள்ளவில்லை. பின்நவீனத்துவ எண்ணப்போக்கு நமது சமுதாயத்தில் காலூன்றி வளர்கிறபோது இந்த நிலைமை இன்னும் மோசமாகும். சத்தியம் என்று எதுவும் இல்லை என்று சாதிக்கும் பின்நவீனத்துவ சிந்தனைப் போக்கு வேதத்தில் இதுவரை இருந்து வந்த நம்பிக்கைகளையும் சுக்குநூறாக்கிவிடும். வேதத்தின் அதிகாரத்தையும், அதன் போதுமான தன்மையையும் நமது மக்கள் விளங்கிக் கொண்டு அதில் தொடர்ந்து நம்பிக்கைவைக்க வேண்டுமானால் வேதத்தைக் கையாளு வதில் போதகர்களும், பிரசங்கிகளும் இதுவரை இருந்ததைவிடக் கவனமாக இருக்கவேண்டும். வேதத்தை வெறும் கலந்துரையாடலுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் அதன் போதனைகளின்படி நாம் வாழ்வது*

அவசியமல்ல என்று சாதிக்கும் பின்நவீனத்துவத்தை வேதமறியாதவர்களால் எதிர்த்து நிற்க முடியாது. வாளைக் கையில் வைத்துக்கொண்டிருந்தால் மட்டும் எதிரியைத் தாக்கி விட முடியாது. வாளைப் பயன்படுத்தத் தெரிந்து அதை லாவகமாகக் கையாளத் தெரியவேண்டும். வாளாகிய வேதத்தைக் கையாளத் தெரியாமல் பிசாசை எப்படி எதிர்த்து நிற்க முடியும்? இதற்கு நாம் வேதவிளக்க விதிகளை நன்றாகப் படித்து வேதத்தை விளக்கும் முறை களைக் கற்றுக் கொள்ள வேண்டும். நமது மக்களும் வேதத்தை இப்படித்தான் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்துவைத்திருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**4. திருச்சபை சரித்திரத்தை நம்முடைய மக்களுக்கு கற்றுத் தந்து வரலாற்றுக் கிறிஸ்தவப் பாரம்பரியத்தை அவர்கள் அறிவுபூர்வமாக உணர்ந்து தங்களுடைய விசுவாசத்தைப் பாதுகாத்துக்கொள்ள உதவ வேண்டும்.**

பின்நவீனத்துவம் கிறிஸ்தவத்தை சின்னாப்பின்னமாக்கிவிடக்கூடிய பெரிய எதிரிகளில் ஒன்று. அது வரலாற்றுக்கு மதிப்பளிக்காது. கிறிஸ்தவ வரலாறு தெரியாமல் வாழ்ந்து வருகிற தமிழ் சமுதாயம் கிறிஸ்தவத்தில் உறுதியான நம்பிக்கை வைத்து வளர கிறிஸ்தவ வரலாற்றறிவு தவிர்க்க முடியாததொன்றாக இருக்கிறது. புதிய எதிரியான பின்நவீனத்துவத்தின் அசட்டுத்தனமான சிந்தனைகளை இனங்கண்டுகொள்ள கிறிஸ்தவ வரலாறு உதவும். நமது சத்தியங்கள் வளர்ந்துவந்த ஆத்மீக சூழலையும் விளங்கிக்கொள்ள கிறிஸ்தவ வரலாறு உதவுகிறது. கிறிஸ்தவ வரலாறு நமது விசுவாசத்தில் நாம் மேலும் உறுதியாக இருக்க உதவுகிறது. அதை நாமும் நன்றாகப் படித்து நமது மக்களும் அறிந்திருக்குமாறு செய்வது அவசியம்.

**5. ஆத்மீக வளர்ச்சியில் பலவீனமாக இருப்பதைத் தவிர்க்கும் சகல முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.**

பின்நவீனத்துவம் சத்தியத்தைத் தொலைப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டிராமல் விசுவாசிகளின் பரிசுத்தத்தையும் இல்லாமலாக்கும் முயற்சியில் ஆக்ரோஷமாக ஈடுபட்டிருக்கிறது. ஒழுக்கத்திற்கு உலகப்பிரகார மான முறையில் விளக்கம் கொடுக்கும் பின்நவீனத்துவ “இமர்ஜிங் திருச் சபை” பாவத்தைப் பாவமாகப் பார்ப்பதில்லை. அந்த சிந்தனைப் போக்கு கிறிஸ்தவர்கள் மத்தியில் வளர்கிறபோது பரிசுத்த வாழ்க்கைக்கு பேரா பத்து ஏற்படுகிறது. ஏற்கனவே மேலைநாடுகளில் வளர்ந்து வருகின்ற “இமர்ஜிங் திருச்சபை” அசிங்கமான பேச்சை பிரசங்க மேடைப் பேச்சாக்கி யும், ஓரினச் சேர்க்கையைப் பாவமாகப் பார்க்கக்கூடாதென்று விளக்கியும், பத்துக் கட்டளையை வெறும் தத்துவமாகப் பார்த்தும் வருகிறபடியால் கிறிஸ்தவர்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். ஆத்மீக வாழ்க்கையில் பலவீனமாக இருப்பவர்கள் பின்நவீனத்துவத்தை எதிர்த்து நிற்கமுடியாது. பரிசுத்த வாழ்க்கையின் அவசியத்தை வேத அடிப்படையில் இன்று போதிப்பது மட்டுமல்லாமல் அந்த முறையில் நடைமுறையில் வாழ்ந்து வருவது பேரவசியமாகிறது. சமீபத்தில் என் கையில் கிடைத்த, பின்நவீனத் துவப் போக்கைப் பின்பற்றும் நியூசிலாந்திலுள்ள ஒரு சபையின் அறிக்கை யில் “புத்தகத்தில் உள்ளதை நாம் போதிப்பதானால் அதன்படி முதலில் வாழ வேண்டும்” என்று எழுதியிருந்தது. இந்தப் பின்நவீனத்துவப்

போக்கைப் பின்பற்றும் சபை வேதத்தை வேதம் என்ற பெயரில் அழைக் காமல் வெறும் புத்தகமாக மட்டுமே கருதுகிறது. அதுமட்டுமில்லாமல் பரிசுத்த வாழ்க்கையை இன்று அநேக கிறிஸ்தவர்கள் வாழ்வதில்லை என்று கிண்டலடிக்கவும் செய்கிறது. அதில் உண்மையிருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இருந்தாலும் நாம் பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கு பெரும் எதிரியாக இருக்கப்போகும் பின்நவீனத் துவம் நம்மைக் கேலி அளவுக்கு பரிசுத்த வாழ்க்கையில் இன்றைய சபைகள் பின்தங்கியிருப்பது மாறவேண்டும். வைராக்கியத்துடன் பரிசுத்த வாழ்க் கையை பத்துக் கட்டளைகளின் அடிப்படையில் ஒழுக்கத்தோடு வாழ்வதே கிறிஸ்தவம். அதில் குறைகிற எதையும் கிறிஸ்தவமாகக் கருதமுடியாது. பின்நவீனத்துவ "இமர்ஜிங் திருச்சபை"யின் சிந்தனைப்போக்கு இன்றைக்கு கிறிஸ்தவர்களின் பரிசுத்த வாழ்க்கைக்கு சவாலாக வந்திருக்கிறது. அதை எதிர்த்து எதிர்நீச்சலடிக்க வேண்டிய நிலையில் நாமிருக்கிறோம்.

**6. கண்ணிருந்தும் குருடர்களாக இருக்காமல் காலத்தை உணர்ந்து நமது பிள்ளைகள் பின்நவீனத்துவ சிந்தனைப் போக்கிற்கு உட்பட்டு அழிந்துவிடாதபடி வேத சிந்தனைகளோடு வளர முன்னேற்பாட்டோடு வழியேற்படுத்தித் தர வேண்டும்.**

பின்நவீனத்துவ சிந்தனைப் போக்கிற்கு உடனடியாகப் பலியாகப் போகும் முதல்கட்ட நிலையில் இருக்கிறவர்கள் நமது குழந்தைகளும், வாலிபர்களும்தான். இந்த சிந்தனை மேலை நாடுகளில் பாடசாலைகளி லும், கல்லூரிகளிலும் பரவிவருகிறது. அவர்கள் மூலம் அது நமது வீட்டுக் குள்ளும், சபைகளுக்குள்ளும் பரவும். "இமர்ஜிங் திருச்சபை" வளர்த்துவிடப் போகிற எதிர்கால சந்ததி எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்ப தற்கே பயமாக இருக்கிறது. வேதத்தில் அடியோடு எந்த நம்பிக்கையும், உணர்வும் இல்லாமல் வளர்ந்த சந்ததியாகவே அது இருக்கும். நமது பிள்ளைகளை வேத நம்பிக்கைகளோடு வளர்க்க வேண்டிய பெரிய பொறுப்பு இன்று நம்கையில் இருக்கிறது. பண்பாடு, பாரம்பரியம் என்று காலத்தை வீணாக்கிவிடாமல் நமது பிள்ளைகளுக்கு வேதப்பாலூட்டி, தேவ பயத்தோடு வளருமாறு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். வேதத் தைப் பயன்படுத்தி எந்த விஷயத்திலும் அவர்களுடைய அணுகுமுறை வேத சிந்தனைகளின் அடிப்படையில் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அசட்டுத்தனமாகவும், அறிவில்லாமலும் நடந்து டீ. வியையும், இன்டர் நெட்டையும் பிள்ளைகள் இளம் வயதில்லேயே வசதியாகப் பார்த்து வளர வழியேற்படுத்தி அவர்களுடைய இருதயம் சீரழியப் பெற் றோர்கள் காரணமாக இருந்துவிடக்கூடாது. பிள்ளைகள் என்ன செய்கிறார்கள், எப்படிப் படிக்கிறார்கள், எங்கே போகிறார்கள், யாரோடு பழகுகிறார்கள என்றெல் லாம் பக்குவமாகப் பார்த்து நல்ல நண்பர்கள் போல் அவர்களோடு பழகி யோபுவைப் போல நடந்து பிள்ளைகள் விசுவாசத்தோடு வளர வழியேற்படுத்திக் கொடுக்க முடியாதவர்களுக்குப் பெயர் நல்ல பெற்றோர்களல்ல. கிறிஸ்தவர்களே, எச்சரிக்கையாயிருங்கள். சாத்தான் ஒளியின் தேவனைப் போல நடந்து நம்மைத் தொலைக்கப் பார்க்கிறான். நமக்கெதிராக அவன் இன்று பயன்படுத்துகிற புதிய எதிரி பின்நவீனத்துவ "இமர்ஜிங் திருச்சபை".

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

***கேள்வி 106***: *கர்த்தர் ஏற்றுக்கொள்ளுகிற ஜெபம் எது?*

***பதில்***: *கர்த்தருடைய சித்தத்திற்கு உகந்தவிதத்தில் நீதிமான்கள் தங்களுடைய விருப்பங்களை பாவ அறிக்கையுடனும் கர்த்தருடைய இரக்கங்களுக்கான நன்றியறிதலுடனும் கிறிஸ்துவின் நாமத்தில், பரிசுத்த ஆவியின் துணையோடு கர்த்தருக்கு முன்பாக ஏறெடுப்பதே ஜெபமாகும்.*

*(நீதி 15:8; 28:9; சங். 62:8; 1 யோவான் 5:14; யோவான் 16:23; ரோமர் 8:26; சங். 32:5–6; பிலி. 4:6.).*

**விளக்கக் குறிப்பு:**

**நீதிமான்களின் ஜெபத்தைக் கர்த்தர் கேட்கிறார்**

*மெய்யான விசுவாசத்திற்கும், போலி விசுவாசத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை ஜெபத்தைப் போல வேறு எதுவும் அடையாளம் காட்டு வதில்லை. ஜெபத்தின் அருமையை விளக்கும் இந்த வினாவிடை முதலில் யாருடைய ஜெபங்களைக் கர்த்தர் கேட்கிறார் என்பதை விளக்குகிறது. நீதிமான்களுடைய ஜெபத்தையே கர்த்தர் கேட்கிறார் என்று அது கூறுகிறது. நீதிமொழிகள் 15:8, "துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது; செம்மையானவரின் ஜெபமோ அவருக்குப் பிரியம்" என்கிறது. கர்த்தர் துன்மார்க்கரின் ஜெபங்களைக் கேட்பதில்லை. புதிய ஏற்பாட்டில் பரிசேயர்கள் யூத மதத்தின் பாதுகாவலர்கள் போல் நடந்து இருதயத்தில் எந்தவித மனமாறுதலும், விசுவாசமும் இல்லாமல் அன்றாடம் ஜெபித்து வந்தார்கள். அது போலி ஜெபம் என்பதை இயேசு அடையாளம் காட்டி மத்தேயு 6:1-13 வரையிலுள்ள வசனங்களில் மெய்யாக ஜெபிப்பது எப்படி என்பதை விளக்குகிறார். எவர் வேண்டுமானாலும் கர்த்தருக்கு முன் ஜெபிப்பதற்கு அனுமதியிருந்தபோதும் அக்கிரமக்காரர்களின் ஜெபத்தை அவர் ஒருபோதும் கேட்பதில்லை.*

**ஜெபம் இருதயத்தோடு சம்பந்தப்பட்டது**

*அடுத்ததாக, ஜெபம் இருதயத்தோடு சம்பந்தப்பட்டது என்று இந்த வினாவிடை விளக்குகிறது. கத்தோலிக்க மதம் ஜெபத்தை வெறும் உதட்டள வோடு மட்டும் சம்பந்தப்பட்டதாகப் பாவித்து அதைப் பயன்படுத்தி வருகிறது. பரிசேயர்களும் அதையே செய்திருக்கிறார்கள். இன்றைக்கு விசுவாசத்தின் அடையாளத்தைக் காணமுடியாத அநேக சீ. எஸ். ஐ சபை களில் இந்தவிதத்திலேயே ஜெபம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. புற ஜாதி மதங்களிலும் இந்த முறையிலேயே ஜெபம் செய்கிறார்கள். இதன் மூலம் ஒவ்வொரு முறையும் ஒருவர் திரும்பத் திரும்ப ஜெபிக்கும்போது கர்த்தர் அதைக் கேட்க வேண்டும் என்று அவர்கள் எண்ணி வருகிறார்கள். ஆனால், இயேசு கிறிஸ்துவோ மத்தேயு 6:6ல் "மாயக்காரரைப் போல ஜெபம் செய்ய*

*வேண்டாம்” என்கிறார். தொடர்ந்து அதை விளக்கும் இயேசு, மாயக்காரர் கள் மனுஷர் காணும்படியாக ஜெபிக்கிறார்களே தவிர வேறு எந்த நோக்கத்துடனும் ஜெபிப்பதில்லை என்கிறார். சபை வரலாற்றைப் பார்க்கிறபோது இங்கிலாந்து திருச்சபையில் ஆரம்பத்தில் வேதபூர்வமாக ஜெபிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் ஜெப நூலை* (Prayer Book) *அறிமுகப்படுத்தினார்கள். ஆனால், காலம்போகப்போக அவர்கள் வேத சத்தியங்களை நிராகரித்து சரீரப்பிரகாரமான காரியங்களுக்கு திருச் சபையில் இடங்கொடுத்தபோது ஜெபமும் சரீரப்பிரகாரமாக உலகத் தாருடைய ஜெபங்களைப்போல மாறியது. அரசாங்க அதிகாரிக்கு மனு எழுதி அனுப்புவதுபோலோ அல்லது ஒரு வேலைக்கு மனு எழுதி அனுப்புவதுபோலோ ஜெபத்தைப் பாவிக்க முடியாது. இயந்திர வேகத்தில் அந்தக் காரியங்களை இருதயத்தோடு தொடர்பில்லாமல் நாம் செய்து விடுகிறோம். என் நாட்டில் ஒவ்வொரு வருடமும் என்னுடைய பெயர் திருமணம் செய்து வைக்கும் அதிகாரமுள்ளவர் என்று கெசெட்டில் பதியப்படுவதற்காக நான் விண்ணப்பிக்க வேண்டும். அந்தப் பத்திரங்கள் ஒவ்வொரு நவம்பர் மாதமும் என் கைக்கு வரும். அதில் நான் சில இடங்களை மட்டுமே நிரம்பி கையெழுத்துப் போட்டு உடனடியாக அனுப்பி வைக்கவேண்டும். அதை ஒரு சடங்குபோல் ஒவ்வொரு வருடமும் செய்து வருகிறேன். அதைச் செய்யாமல்விட்டால் என்னுடைய பெயர் கெசட்டில் பதிவாகாமல் போய்விடும். என் திருச்சபை மக்களுக்கு திருமணம் செய்து வைக்கும் அதிகாரத்தை நான் இழந்துவிடுவேன். அதனால், பத்திரம் கையில் கிடைத்தவுடன் படபடவென்று நிரப்பிக் கையெழுத்தைப் போட்டு அனுப்பிவிடுவது வழக்கம். இயந்திரத்தைப் போல அதை நான் செய்கிறேனே தவிர இருதய ஈடுபாடு அந்தக் காரியத்தைச செய்வதற்கு அவசியமில்லை. பத்திரத்தில் எழுதியிருப்பதைக் கவனத்தோடு வாசிப்பது அவசியம். அதற்கு நான் மூளையை மட்டுமே பயன்படுத்த வேண்டும். இருதயம் அதற்கு அவசியமில்லை. இந்தவிதத்தில் ஜெபம் இருக்கக்கூடாது; முடியாது. இயந்திரத்தைப் போல கர்த்தருக்கு மனு அனுப்பும் காரியமல்ல ஜெபம்.*

*இயேசு அதனால்தான் ஜெபத்தைப்பற்றி விளக்குகிறபோது மத்தேயு 6ல் “அந்தரங்கத்தில் இருக்கிற பிதா” என்று பல தடவை சொல்லியிருக்கிறார். அந்தரங்கத்தில் இருந்து வருவது ஜெபம். அது அந்தரங்கத்தோடு சம்பந்தப் பட்டது. ரோமர் 8:27ல் “இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சித்தத்தை இன்னதென்று அறிவார்” என்று பரிசுத்த ஆவியைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய சித்தத்தின்படி பரிசுத்த ஆவியான வர் ஜெபிப்பதால் அவருக்கு நம்முடைய இருதயம் நன்றாகத் தெரியும். சில வேளைகளில் நாம் எத்தனையோ விஷயங்களைக் கர்த்தரிடம் தெரிவிக்க ஆசைப்படுகிறபோதும் அவற்றையெல்லாம் வார்த்தைகளில் கொட்ட முடியாமல் தடுமாறுகிறபோது நம்முடைய எண்ணங்களை யெல்லாம் அறிந்திருக்கிற ஆவியானவர் நமக்காக கர்த்தரிடம் விண்ணப்பிக் கிறார் என்கிறார் பவுல் ரோமர் 8:26ல். இதெல்லாம் எந்தளவுக்கு ஜெபம் கர்த்தரில் நாம் வைத்திருக்கும் அன்பின் அடிப்படையிலும், விசுவாசத்*

*தின் அடிப்படையிலும் நீதியோடு இருதயத்தின் ஆழத்தில் இருந்து வரவேண்டியது என்பதை விளக்குகின்றன.*

**நேர்மையான விருப்பம் இருந்தால் மட்டும் ஜெபம் ஜெபமாகிவிடாது**

*இந்துக்களும் வேற்று மதத்தவர்களும் உண்மையான விருப்பத்தை இருதயத்தில் கொண்டு கல்லுச் சாமிகளிடம் ஜெபித்து வருகிறார்கள். அவர்கள் எதைக் கேட்டு ஜெபிக்கிறார்களோ அதை உண்மையாக விரும்பி அதை அடைய வேண்டும் என்ற அக்கறையோடு ஜெபிக்கிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால், அவர்கள் ஜீவனுள்ளவரும், நீதியுள்ளவருமான கர்த்தரிடம் ஜெபிப்பதில்லை. உயிரில்லாத கல்லுச் சாமிகளிடம் ஜெபிக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கையோடு ஜெபித்தாலும் கர்த்தரை விசுவாசித்து அவரிடம் ஜெபிக்காததால் அந்த ஜெபங்களால் பிரயோஜனம் இல்லை. கர்த்தரிடம் ஜெபித்தால் மட்டுமே பலன் உண்டு. பெருங்குரலெடுத்து நம்பிக்கையோடு பாகாலைப் பார்த்து 450 போலித் தீர்க்கதரிசிகள் ஜெபித்தார்கள். அதனால் ஒரு பலனும் ஏற்படவில்லை. ஆனால், எலியா தான் விசுவாசித்த ஜீவனுள்ள கர்த்தரிடம் ஜெபித்ததால் அந்த ஜெபத்துக்கு பலன் கிடைத்தது. கத்தோலிக்கர்கள் நாம் விசுவாசிக்கின்ற கர்த்தரையோ, இயேசுவையோ விசுவாசிப்பதில்லை. அவர்கள் மேரியைக் கடவுளின் உருவமாகக் கருதுகிறார்கள். மேரியிடம் ஜெபித்தால் அந்த ஜெபத்தை இயேசு கேட்பார் என்று நினைக்கிறார்கள். அது முழுத் தவறு. மேரி தெய்வமல்ல; வெறும் பெண் மட்டுமே. இயேசு தன்னுடைய சீடர்களுக்கு ஜெபத்தைப் பற்றிப் போதித்தபோது பிதாவிடம் நேரடியாக ஜெபிக்கும்படிப் போதித்தார். மேரியின் மூலமாக அல்ல. ஆகவே, நாம் கேட்பது மட்டும் உண்மையானதாக இருந்துவிட்டால் போதாது; அது நம்முடைய இருதயத்தில் இருந்து வந்தால் மட்டும் போதாது; அதைக் கேட்க வேண்டிய மெய்யான கர்த்தரிடம் கேட்க வேண்டும். ஜீவனுள்ள கர்த்தரிடம் ஜெபிக்கின்ற ஜெபத்தால் மட்டுமே எப்போதும் பலன் உண்டு.*

**இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும்**

*இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும் என்றால் இயேசுவின் நாமத்தை சொல்லி ஒவ்வொரு ஜெபமும் முடிய வேண்டும் என்பது அர்த்தமல்ல. சிலர் அத்தகைய தவறான முடிவுக்கு வந்திருக்கிறார்கள். கர்த்தரிடம் நாம் ஜெபத்தில் வருகிறபோது இயேசு கிறிஸ்துவின் மத்தியஸ்தப் பணியின் அடிப்படையில், அவருடைய பரிகாரப்பலியின் அடிப்படையில் நாம் அவரை அனுக வேண்டும். கர்த்தருக்கும் நமக்கும் மத்தியஸ்தராக இருக்கிறவர் கிறிஸ்து மட்டுமே. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் அடிப்படையில் கிறிஸ்துவை விசுவாசித்ததன் மூலமாகவே நாம் கர்த்தருடைய விசுவாசத்தைப் பெற்று அவருடைய பிள்ளைகளாக மாறியிருக்கிறோம். நமக்குள் ஜீவிக்கும் கிறிஸ்து மூலமாகவே நாம் கர்த்தரோடு ஐக்கியத்தில் வந்திருக்கிறோம். கிறிஸ்துவின் மூலமாக அவரை முதன்மைப்படுத்தி வழங்கப்படாத எந்த ஜெபமும் பிதாவின் செவிகளை எட்டாது. இந்தக் காரணத்தால்தான் கிறிஸ்துவைத் தேவனாக விசுவாசித்து ஏற்று அவரை முதன்மைப்படுத்தாதவர்களோடு நாம் ஜெபத்தில் கூடிவர முடியாது. ரோமன் கத்தோலிக்கரும், கிறிஸ்துவை விசுவாசித்து நடந்து கொள்ளாத சமயசமரசக்*

*கூட்டத்தாரோடும் நாம் ஜெபத்தில் கூடி வர முடியாது. நாம் ஒரு மனப் பட்டு கிறிஸ்துவின் நாமத்தில் கூடி ஜெபிப்பதானால் கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய அதிகாரத்துக்குப் பணிந்து வாழ்கிறவர்களோடு மட்டுமே நாம் கூடி ஜெபிக்க முடியும்.*

**பரிசுத்த ஆவியின் துணையோடு ஜெபிக்க வேண்டும்**

*"நாம் புத்திரராயிருக்கிறபடியால் அப்பா, பிதாவே என்று கூப்பிடத் தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" என்று பவுல் கலாத்தியர் 4:6ல் சொல்லுகிறார். ஆவியானவர் நம்மில் இருப்பதாலேயே நாம் கர்த்தரை அப்பா, பிதாவென்று அவர் மூலமாக அழைக்க முடிகிறது. நாம் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியான வருக்கு அந்த ஜெபத்தில் தொடர்பிருக்கிறதென்பதை ரோமர் 8ம் அதிகாரத் தில் பவுல் விளக்குகிறார். ஜெபிக்கும்போது நம்மால் வார்த்தைகளில் கொண்டுவர முடியாதவற்றை ஆவியானவர் கர்த்தருக்கு முன் நமக்காக விண்ணப்பிக்கிறார். கர்த்தரை நாம் ஆராதிக்கும்போது ஆவியோடும், சத்தியத்தோடும் ஆராதிக்கும்படி யோவான் 4:23ல் இயேசு சொல்லுகிறார். பரிசுத்த ஆவியானவரின் துணையில்லாமல் நாம் ஜெபிக்க முடியாது. ஆவிக்குரிய எந்தக் காரியத்தையும் நம் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியான வரின் துணையோடேயே செய்ய முடியும். ஆவியானவர் நமக்குள் நிரந்தர மாக ஜீவிக்கிறார். அவரே நாம் கிறிஸ்துவை மகிமைப்படுத்தி வாழத் துணை செய்கிறார். கிறிஸ்துவின் வழியில் நாம் நடக்க உதவுகிறார். அவரில்லாமலும், அவருடைய துணையில்லாமலும் நாம் கர்த்தரிடம் ஜெபத்தில் வரமுடியாது. "எந்த விஷயத்திலும் சகலவிதமான விண்ணப்பத்தோடும் ஆவியினால் ஜெபம் பண்ணி . . . விழித்திருங்கள்" என்று பவுல் எபேசியர் 6:18ல் சொல்லு கிறார். நம்முடைய ஜெபங்கள் ஆவியினால் செய்யப்படுகிற ஜெபங்களாக இருக்கவேண்டும். பெந்தகொஸ்தே இயக்கம் "ஆவியின் ஜெபம்" என்ற பெயரில் வேதத்துக்குப் புறம்பான செயலை செய்துவருகிறது. ஆவியின் ஜெபமென்பது வாழ்க்கையில் பரிசுத்தத்தோடு நடந்து கர்த்தரில் தங்கியிருந்து இருதய சுத்தத்தோடும், உண்மையோடும் பரிசுத்த ஆவியின் தங்கியிருந்து ஜெபித்தலாகும். இதற்காக பெந்தகொஸ்தே இயக்கம் சொல்லுவதுபோல் புறத்தில் நம்மில் ஆவிபோல் ஏதோவொன்று வந்திறங்க வேண்டும், சரீரம் அதனால் மயிர்சிலிர்த்து ஒரு புதிய அனுபவத்தை அடைய வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்கக் கூடாது. கர்த்தரின் புத்திரர்களாக இருந்து ஆவியானவரின் வழியில் தொடர்ந்து அன்றாடம் நடந்து வாழ்கிறபோது நம்முடைய ஜெபங்கள் ஆவியினால் செய்யப்படுகிற ஜெபங்களாக இருக்கும் என்பதைத்தான் வேதம் இந்த முறையில் விளக்குகிறது.*

**பாவத்தை அறிக்கையிட்டு, கர்த்தருடைய இரக்கங்களுக்கான நன்றியறிதலோடு ஜெபிக்க வேண்டும்**

*இயேசுவின் பெயரைப் பயன்படுத்தி செய்யப்படும் ஜெபங்கள் அனைத்தும் மெய்யான ஜெபங்களாகிவிடாது. ஜெபங்கள் உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையில் வரவேண்டியவை. சிந்தித்துப் பார்க்காமல் திடீரென்று ஜெபங்களை ஏறெடுக்க முடியாது. வார்த்தைகளைப் பயன்படுத்தத் தெரிந்துவிட்டால்*

*மட்டும் ஜெபம் செய்ததாகிவிடாது. ஜெபம் செய்யும்போது நாம் மனிதர்களோடில்லாமல் கர்த்தரிடம் பேசுகிறோம். கர்த்தருக்கு நம்முடைய இருதயம் நன்றாகத் தெரியும். அவருக்குத் தெரியாதது ஒன்றுமேயில்லை. அப்படியிருக்கும்போது ஜெபத்தைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அவர் முன் ஏறெடுப்பதில் நாம் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.*

*அநேக கிறிஸ்தவர்களுக்கு இன்று பாவத்தின் கோரம் விளங்குவதில்லை. எத்தகைய கொடிய நோயில் இருந்து கர்த்தர் நம்மை விடுவித்திருக்கிறார் என்பதும், அதற்காக கிறிஸ்து செய்திருக்கும் தியாகங்கள் எத்தனை என்பதும் தெரியாமல் இருக்கிறது. இதற்கெல்லாம் சரியான பிரசங்கங்கள் இன்றைக்கு கொடுக்கப்படாததும் ஒரு முக்கிய காரணம். வெறும் சரீர சுகத்துக்காகவும் அற்ப சுயலாபத்துக்காகவுமே அநேகர் கிறிஸ்துவிடம் வருகிறார்கள். தங்களில் எஞ்சியிருக்கும் பாவத்தின் தன்மையையும், இருதயத்தின் நிலையையும் உணராதவர்கள் மெய்யாக ஜெபிக்க முடியாது. அன்றாடம் கர்த்தருக்கெதிராக தாங்கள் செய்துவிடுகிற பாவங்களுக்காக வருந்தி அவரிடம் மன்னிப்புக் கேட்காமல் ஜெபத்தில் வரமுடியாது. அப்படிப் பாவத்தின் உணர்வும், தெரிந்தும் தெரியாமலும் செய்துவிடுகின்ற பாவத்திற்காக மன்னிப்பும் கேட்காத இருதயம் சுத்தமான இருதயமாக இருக்க முடியாது. கிறிஸ்துவின் திரு இரத்தம் தொடர்ந்து நம்மை சுத்தி கரிக்கின்ற வல்லமையைக் கொண்டிருக்கின்றதென்பதை உணர்கிறவர்கள் மட்டுமே அன்போடு கிறிஸ்துவை நாடிப் பாவ அறிக்கையிட்டு மன்னிப் புக்கேட்டு கர்த்தரோடு இருக்கும் தங்களுடைய ஐக்கியத்தைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொள்ளுவார்கள். லூக்கா 18ல் வரும் ஆயக்காரனைப் போலத் "தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று சொல்லுகிற இருதயத்தைக் கொண்டிராதவர்களுக்கு கிறிஸ்தவ ஜெபத்தின் தன்மை புரியாது.*

*அத்தோடு கர்த்தருடைய இரக்கங்களுக்காக நாம் நன்றியறிதலோடு அவர் முன் ஜெபத்தில் வரவேண்டும். அவருடைய கிருபையின் மகத்துவத்தை உணர்ந்து நன்றி பாராட்டி ஜெபிக்க வேண்டும். இயேசுவின் சிலுவைப் பலியின் தியாகத்தை உணர்ந்து கர்த்தரிம் மனதார நன்றிசெலுத்த வேண்டும். எத்தகைய கிருபையைக் கர்த்தர் நமக்குப் பாராட்டியிருக்கிறார் என்ற பேருணர்வோடும், தாழ்மையோடும் அவரிடம் ஜெபத்தில் வர வேண்டும். கடைக்காரனிடம் பலசரக்குப் பட்டியல் கொடுப்பதுபோல் நம்முடைய தேவைகளை சுயநலத்தோடு ஏறெடுப்பதற்காக மட்டும் கர்த்தரிடம் ஜெபத்தில் வரக்கூடாது. அது மகாபாவம். அதைத்தான் இன்றைக்கு அறிவில்லாமல் அநேகர் செய்துவருகிறார்கள். நம்முடைய ஜெபங்கள் மெய் ஜெபங்களாக இருப்பதற்கு நாம் வேத வசனங்களை சிந்தனையோடு ஜெபங்களில் பயன்படுத்துவது பாவகரமான எண்ணங் களை நாம் கர்த்தர் முன் வார்த்தைகளில் வடித்துவிடுவதில் இருந்து நம்மைக் காக்கும். ஜெபத்தைப் பற்றி இனித்தொடர்ந்தும் படிக்கப் போகிறோம்.*

# கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியம் – 7

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் திருச்சபை இந்த உலகத்தில் பெந்த கொஸ்தே தினத்தில் எருசலேமில் நிறுவப்பட்டு எந்தவிதத்தில் ஏனைய பிரதேசங்களுக்கும், நாடுகளுக்கும் சுவிசேஷம் அறிவிக் கப்பட்டு அங்கும் சபைகள் நிறுவப்பட்டன என்பதைக் கடந்த இதழில் பார்த்தோம். இந்த இதழில் இதுவரை நாம் பார்த்து வந்திருக்கும் வேத சத்தியங்களில் இருந்து படிக்க வேண்டிய மூன்று பாடங்களோடு இந்த ஆக்கம் முடிவு பெறும்.

**1. கர்த்தரின் வேத அதிகாரத்தின்படி திருச்சபைகள் நம்மத்தியில் அமைய நம் காலத்தில் செய்யவேண்டியதை செய்யும் முயற்சிகளில் நாம் ஈடுபடவேண்டும்.**

திருச்சபை அமைப்பு பற்றி வேதம் தெளிவாகப் போதிக்கின்ற வழிமுறைகளைக் கவனத்தோடு பார்த்து வந்திருக்கிறோம். நாம் காலத்தை செலவிட்டு இதையெல்லாம் ஆராய்ந்தது இவற்றைப் படித்துவிட்டு ஓரங் கட்டிவிடுவதற்காக அல்ல. இந்தப் பத்திரிகையை ஆர்வத்தோடு வாசித்து வருகிற வாசகர்கள் நாம் விளக்கியிருப்பது வேதத்தில் இருந்து வெளிப்படு வதாக இருந்தால் அவற்றை சாதாரணமானவையாகக் கருதி ஒதுங்கியிருந்து விடக்கூடாது. வேதம் இந்தளவுக்கு பரிசுத்த ஆவியின் மூலம் கிறிஸ்து அமைக்கும் திருச்சபைப் பற்றி விளக்கியிருக்குமானால் நான் ஏன் அதைப் பற்றி வாசித்துங்கூட அமைதியாயிருக்கிறேன் என்று உங்களையே நீங்கள் கேட்டுப் பார்க்கவேண்டும். சுயநலத்தால் இருதயம் மரத்துப் போனவர் களுக்கு நாம் விளக்கியிருப்பது புரியாது. சுயலாபம் தேடி ஊழியம் செய்து வருபவர்கள் இதெல்லாம் அவசியமில்லை என்று இறுமாப்போடு தொடர்ந்து தங்கள் வியாபாரத்தைத் தொடர்வார்கள். சிந்திக்க மறுத்து ஏமாறத் தயாராக இருக்கும் கூட்டம் இருக்கும்வரை அவர்கள் பாடு கொண்டாட்டந்தான். ஆனால், வேத வைராக்கியத்தோடு மெய்க்கிறிஸ்த வத்தை தமிழினம் அறிந்துகொள்ள வேண்டும்; மெய்த் திருச்சபைகள் தமிழினத்தில் உருவாக வேண்டும் என்று சிந்திக்கிற நீங்கள் எப்படி சும்மா யிருக்க முடியும்?

நீங்கள் இருந்து வரும் சபைகளில் வேதபூர்வமாக ஆராதனையும், திருச்சபை ஊழியங்களும் நடந்துவராவிட்டால் தொடர்ந்தும் அமைதியாக இருந்து அழியப்போகிறீர்களா? நீங்கள் இந்த உலகத்தில் வாழப்போகிற கொஞ்சக் காலத்தில் திருச்சபை சீர்திருத்தத்திற்காக ஏதாவது செய்து மடிவது மேல் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? நீங்கள் திருமண மானவராக இருந்தால் போலிச் சபைகளிலும், ஒரே போதகரைக் கொண்டு

வேத அதிகாரத்துக்கு இடங்கொடுக்காமல் குடும்ப ஊழியம் நடந்து வரும் சபைகளுக்கு உங்கள் குடும்பத்தைப் பலியாக்கப் போகிறீர்களா? வேத இலக்கணங்களைக் கொண்டிராது வேத அடிப்படையில் உழைக்காது ஊழியம் என்ற பெயரில் பாரம்பரியப் பிசாசிற்கு தூபம் காட்டி வரும் வேதவிரோதிகளுக்கு அடிமையாக இருந்து கர்த்தரைக் காட்டிக் கொடுக்கும் எட்டப்பனாக இருக்கப் போகிறீர்களா? வாரா வாரம் பிரசங்கம் என்ற பெயரில் உளறித்தள்ளிக்கொண்டிருக்கும் போதகர்களின் உதடள வோடு நிற்கும் இனிப்புப் பேச்சை அது தவறு என்று தெரிந்தும் காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்க உங்கள் இருதயம் எப்படி இடந் தருகிறது? ஆத்துமாக்களைப் போஷித்து வளர்க்காமல் காணிக்கைக்காக மட்டும் அலைந்துகொண்டிருக்கும் ஆத்தும விரோதிகளை அவர்கள் செய்வதறிந்தும் செய்ய வேண்டியதை செய்யத் தயங்கி சும்மாயிருக்க உங்களால் எப்படி முடிகிறது? சபையார் வளர்ந்து தங்கள் கிருபைகளைப் பயன்படுத்தி கிறிஸ்துவுக்கு உழைக்க அவர்களைத் தயார் செய்யாமல் தன்னையும், மனைவி, பிள்ளைகளையும் வளர்த்துக்கொண்டிருப்பவர் களைப பார்த்துக்கொண்டு சும்மா இருக்க உங்களால் எப்படி முடிகிறது?

என்ன இப்படிக் கடுமையாக சாடுகிறீர்களே, என்று ஆத்திரப்படாமல் சிந்தித்துப் பாருங்கள். சுயநலத்தால் நாம் செய்ய வேண்டியதை வேத அடிப்படையில் செய்ய மறுத்து வாழ்ந்தால் திருச்சபையை நேசிக்கும் கிறிஸ்துவின் முதுகில் குத்துவதென்றல்லவா ஆகிவிடும். தன்னுடைய பெயரில் சபை நடத்தி தன்பெயருக்கு இழுக்கேற்படுத்தி வருகிறவர்களை கிறிஸ்து பொறுத்துக்கொள்ளுவாரா? பரலோகத்தில் இருக்கும் அவருடைய இருதயம் நாம் நடந்துகொள்கிறவிதத்தைப் பார்த்து ஆனந்தப்படவா செய்யும்? ஊழியக்காரர்களைப்பற்றி தவறாகப் பேசக்கூடாது என்று நம் மனத்திற்கு போலிச் சமாதானம் சொல்லி நம்மையே நாம் ஏமாற்றிக் கொண்டு புரட்டர்கள் தொடர்ந்து ஆத்துமாக்களை இருட்டில் வைத்து ஆத்தும துரோகம் செய்துவருவதை அறிந்திருந்தும் அதை நிறுத்த எதையாவது செய்யாமலிருப்பது கிறிஸ்துவுக்கு செய்யும் துரோகம் இல்லையா? திருச்சபை வரலாற்றில் இக்னேஸியஸூம், பொலிகார்ப்பும், வில்லியம் டின்டேலும், மார்டின் லூதரும், ஜோன் கல்வினும், ஜோன் நொக்ஸூம் இன்னும் நூற்றுக்கணக்கான சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன் பெரியவர்களும் நம்மைப் போல் அமைதியாக இருந்திருந்தால் இன்றைக்கு நம்கையில் வாசிப்பதற்குக்கூட வேதம் இருந்திருக்காதென்பது உங்களுக்குத் தெரியவில்லையா? அவர்கள் போலித்தனத்துக்கு எதிராக இரத்தம் சிந்தத் தயாராக இருந்ததால்தான் இன்றைக்கு நாம் திருச்சபையைப் பார்க்க முடிகிறது, வேதத்தை வாசிக்க முடிகிறது. போலித்தனத்தை அடையாளம் கண்டு அதை எதிர்த்து நின்று சத்தியத்தை நிலைநாட்ட அவர்கள் வெட்கப் படவில்லை. நம் காலத்தில் செய்ய வேண்டியதை செய்யத் தவறுகிற கிறிஸ்தவர்கள் எப்படி கிறிஸ்துவின் சேவகர்களாக இருக்க முடியும்? முகத்தாட்சணியம் பார்த்தும், மனிதர்களுக்கு கூழைக்கும்பிடு போட்டும் வாழ்ந்து கிறிஸ்தவர்கள் என்று நம்மை அழைத்துக் கொள்ளலாமா? நண்பர்களே, நெஞ்சில் கொஞ்சமாவது விசுவாசம் இருக்குமானால், வேதம்

*மட்டுமே சத்தியம், அதன்படி மட்டுமே எதுவும் நடக்கவேண்டும் என்பதை நீங்கள் உணர்ந்திருந்தால் நீங்கள் இருக்குமிடத்திலேயே உடனடியாக சீர்திருத்தவாதியாக மாறுங்கள். உங்கள் வாழ்க்கையில் வேதத்தின்படி நடக்க முயற்சி செய்யுங்கள். யார் எதைப் பேசினாலும் பேசட்டும். ஆரம்பத்தில் திட்டப்பார்ப்பார்கள். அது சரிவராவிட்டால் ஊளைக் கண்ணீர் வடித்து நம்மனதை உருகச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவார்கள். அதுவும் சரிவராவிட்டால் நம் பெயரைக் கெடுக்கும் முயற்சியில் இருதய மில்லாமல் ஈடுபடுவார்கள். இதெல்லாந்தான் பிசாசுக்குத் தெரிந்த தந்திரங்கள். தளர்ந்து விடாதீர்கள். தைரியமாக இருங்கள். இனி வேத அதிகாரம் இல்லாத இடத்தில் இருப்பதற்கு நீங்கள் கூசவேண்டும். வேத அதிகாரத்தை மதித்து நடக்கிற கூட்டத்தோடு இணைந்து மட்டுமே உழைக்க வேண்டும். நம் காலத்தில் நாம் செய்ய வேண்டியதை எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் சளைக்காமல் எதிர்த்து நின்று இயேசுவுக்காக செய்து வாழப்பாருங்கள்.*

**2. வேத தகுதி பெற்றவர்கள் மட்டுமே திருச்சபை ஊழியத்தில் ஈடுபட வேண்டும்.**

*நீங்கள் ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களா? அதற்கு வேதம் எதிர்பார்த்து தெளிவாக விளக்கியிருக்கும் தகுதிகள் உங்களிடம் இருக்கின்றனவா? அந்தத் தகுதிகளை திருச்சபை ஆராய்ந்து பார்த்து உங்களை ஊழியத்தில் நியமித்திருக்கிறதா? இல்லாவிட்டால் நீங்கள் வளர்த்துவரும் ஆத்துமாக் களின் முன் உங்களுக்கு வேத தகுதிகள் இருக்கின்றனவா என்று அவர்கள் ஆராய்ந்து பார்க்கும்படி அதற்கான வழிகளை ஏற்படுத்தித் தந்திருக் கிறீர்களா? இந்தனைக்கும் இல்லை என்று நேர்மையுடன் பதில் தருவீர் களானால் நீங்கள் எத்தனை பெரிய தவறைச் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரிகிறதா? இல்லை, ஐயா, நான் எஸ்றா சற்குணத்தின் இறையியல் கல்லூரியில் இறையியல் படித்திருக்கிறேன் அது போதாதா, என்று கேட்கிறீர்களா? முதலில் உங்களை ஊழியத்துக்கு அனுப்பிவைக்கும் பணியை திருச்சபையின் தேவனாகிய இயேசு எஸ்றா சற்குணத்துக்கு எப்போது கொடுத்தார்? இயேசுவைப் பொறுத்தவரையில் அவருடைய சபைக்கு மட்டுமே அந்த அதிகாரம் இருக்கிறது நண்பரே. எஸ்றா சற்குணத்தின் இறையியல் கல்லூரியில் நான்கு வருடம் படித்து முடித்துவிட்டு இரட்சிப்பை இதுவரை நான் இழக்காமல் இருந்ததே ஆச்சரியந்தான் என்று கூறி அங்கு கற்றுக்கொண்ட போதனைகளுக்கெல் லாம் தலை முழுகிய போதகரொருவரை எனக்குத் தெரியும்.*

*வேதம் எதிர்பார்க்கும் ஊழியத்தகுதிகளை இறையியல் கல்லூரிகளால் ஒருபோதும் தர முடியாது. தலைகீழாக நின்றாலும் அதை அவற்றால் செய்யமுடியாது. எபேசியர் 4ம் அதிகாரத்தில் 11ம் வசனத்தில் இருந்து வாசித்துப் பாருங்கள். அங்கே பவுல் என்ன சொல்லுகிறார்? கிறிஸ்து தன்னுடைய ஈவுகளை சபைக்குக் கொடுக்கிறார் என்று சொல்லுகிறார். கிறிஸ்து கொடுக்கும் கிருபையின் வரங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே இடம் அவருடைய திருச்சபைதான். ஏன்? அவருடைய பிள்ளைகள் அங்கேயிருந்து வளர்ந்துதான் தங்களுக்குக் கிறிஸ்து தரும் வரங்களைப் பயன்படுத்தப் பழகிக்கொள்ளுவார்கள். திருச்சபையைக்*

*கண்களால் காணாது, அதில் இருந்து வளரும் அனுபவம் இல்லாமல் ஆத்துமாக்களுக்கு ஒருவராலும் இயேசுவைப் போல் மேய்த்தல் பணியைச் செய்ய முடியாது. கார் ஓட்ட விரும்புகிறவன் அதற்குரிய பள்ளியில் சேர்ந்து பயிற்சிபெற்ற பிறகே லைசன்ஸ் வாங்கிக் கொண்டு அதை ஓட்ட ஆரம்பிக்கிறான். இது சாதாரணமாகவே எந்த உலக விஷயத்திலும் பொது வாக எவரும் செய்கிற காரியம். அதுபோல் திருச்சபை ஆத்துமப் பிரசங்கத்தையும், மேய்ப்புப் பணியையும் செய்கிறவர்கள் திருச்சபை மக்கள் மத்தியில் இருந்து வளர்ந்து அவர்களால் ஆராயப்பட்டு அங்கீகரிக் கப்பட்டிருக்க வேண்டும். இன்றைக்கு போதகர்களும், பிரசங்கிகளும் இந்த முறையில் வளராததாலேயே நாட்டில் திருச்சபை ஊழியம் தலைகீழாக மாறி ஆத்தும வல்லமையின்றி இருக்கிறது. போதகர்கள் என்ற பெயரில் போலிகள் அதிகரித்துவிட்டார்கள் இன்று நம்மத்தியில்.*

*வேதம் காட்டும் வழியில் இன்றைக்கு திருச்சபைகளைப் பார்க்க வேண்டுமா? அதற்கு வேதம் காட்டித்தரும் தகுதிகளைக் கொண்டிருக்கும் ஊழியக்காரர்களை நாம் வளர்த்தெடுக்க வேண்டும். அதற்கு வழிவகுக்கும் முறையில் நல்ல திருச்சபைகளை வேத அடிப்படையில் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். நம் சமுதாயத்தில் அதைச் செய்ய நாம் எதிர்நீச்சல் போட வேண்டியிருக்கும். ஆனால், கர்த்தரின் வேதபோதனை களின்படி நாம் உழைக்க முன்வருகிறபோது கர்த்தர் அதற்குத் துணை செய்து ஆசீர்வதிக்காமல் இருக்கமாட்டார். எதிர்காலத்தில் திருச்சபை ஊழியங்களை நடத்தக்கூடிய ஈவுகளைக் கொண்டிருந்து அவற்றை சபை யில் பயன்படுத்தும் அளவுக்கு சபை மக்களில் சிலரையாவது வளர்த்து வராத திருச்சபைகளும், போதகர்களும் பெருந்தவறு செய்கிறார்கள். கம்பேனி மேனேஜர் போல் அதிகாரம் செலுத்தி திருச்சபை நடத்தி வருகிற வர்களுக்கு நான் சொல்லுவது புரியாது. இன்றைக்கு அநேக போதகர்கள் கம்பேனி மேனேஜர்கள் போலத்தான் நடந்துகொள்கிறார்களே தவிர தாழ்மையும், ஆத்தும தாகமும் உள்ள சேவகர்களாக இருக்கப் பழகிக் கொள்ளவில்லை.*

*1 தீமோத்தேயு 3ம், தீத்துவும் காட்டித் தரும் தகுதிகளைக் கொண்டிராத வர்களை நாம் ஒருபோதும் சபைக்குள்ளும், வெளியிலும் அங்கீகரிக்கக் கூடாது. பூச்சிகள் இல்லாமல் இருக்கிறதா என்று பழத்தை ஆராய்ந்து பார்த்தபின்பே வாய்க்குள் போட்டுக்கொள்ளுகிறோம். பூச்சிகள் நிறைந்த இருதயம் கொண்ட போலிப்போதகர்களை மட்டும் நாம் ஆராய்ந்து பார்க் காமல் அங்கீகரிப்பதெப்படி? ஒருவரையும் ஆராய்ந்து பார்க்கக்கூடாது என்று கர்த்தர் தீர்மானித்திருந்தால் 1 தீமோத்தேயுவையும், தீத்துவையும் ஏன் எழுத்தில் தந்திருக்கிறார்? பவுலை ஏன் ஏனைய அப்போஸ்தலர்கள் சோதித்துப் பார்த்திருக்கிறார்கள்? பவுல் ஏன் பேதுருவைக் குற்றஞ்சாட்டித் திருத்தும் முயற்சியெடுத்தார்? கண்ணை மூடிக்கொண்டு எவரையும் அங்கீகரிக்கும் காரியத்தை நாம் ஒருபோதும் செய்யக்கூடாது. ஒருவருடைய விசுவாசத்தையும், போதனையையும், வாழ்க்கையையும் ஆராய்ந்து பார்த்தபின்பே அவர்களுடைய போதனைகளை நாம் கேட்க வேண்டும். எவரையும் ஆராய்ந்து பார்த்த பின்பே நமது சபைகளில் பிரசங்கம் செய்ய*

அனுமதிக்க வேண்டும். இன்றைக்கு தமிழகத்திலும், ஸ்ரீ லங்காவிலும் இருந்து அநேக பிரசங்கிகள் கடன் வாங்கிக்கொண்டாவது மேற்கத்திய நாடுகளில் இருக்கும் தமிழ் சபைகளில் பேசப் போய்விடுகிறார்கள். திரும்பு கிறபோது பணத்திற்கும் எப்படியாவது வழிசெய்துவிடுகிறார்கள். இவர்கள் எங்கிருந்து வந்தார்கள், எப்படி முளைத்தெழுந்து என்ன சத்தியங்களை பின்பற்றுகிறார்கள்? என்பதை அங்கே இருக்கும் தமிழ் சபைகள் ஆராய்ந்து பார்ப்பதில்லை. ஊழியக்காரன் என்ற பெயரில் வரும் எவரையும் அவை கள் உள்ளே அனுமதிக்கின்றன. டாக்டராகவும், இன்ஜினியராகவும், விரிவுரையாளர்களாகவும் பதவிகளில் இருக்கும் தமிழர்கள் சத்தியம் என்று வருகிறபோது அரிச்சுவடிகூடத் தெரியாதவனைப் போல நடந்து இந்தப் போலிப்போதனை செய்கிற அக்கிரமக்காரர்களிடம் ஏமாந்து போவது பற்றிப் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். சமீபத்தில் நான் கனடாவில் இருந்தபோது இப்படியான போலிகளில் ஒருவர், தான் வாரத்தில் ஒருநாள் பரலோகம் போய் அங்கே இயேசுவைக் கண்டு பேசுவதாகவும், தனக்கு தேவதூதர்கள் குளிப்பாட்டி சோப்புப் போட்டுவிட்டதாகவும் சொல்லித் திரிகிறார். இந்தத் திருகுதாளங்களை வரவேற்று வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழின சபைகளில் வேதம் குப்பையில் எறியப்பட்டிருக்கிறதை நினைத்து என்னால் வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. நாம் சிந்தித்து எதையும் ஆராய்ந்து பார்த்து அது உண்மையானதா? இல்லையா? என்று தீர்மானி த்து நடந்துகொள்ளாதவரை நம் சமுதாயத்தில் மெய்க்கிறிஸ்தவம் ஒரு நாளும் உருவாக முடியாது.

**3. வேதம் காட்டும் வழிமுறைகளைப் பின்பற்றியே திருச்சபை ஊழியங்கள் எங்கும் அமைய வேண்டும்.**

நண்பர்களே, திருச்சபை ஊழியத்தைக் கர்த்தர் தன்னுடைய மக்களின் பாதுகாப்புக்காகவும், வளர்ச்சிக்காவுமே இந்த உலகத்தில் ஏற்படுத்தி வைத்திருக்கிறார். அந்த ஊழியம் கர்த்தருடைய வார்த்தையின்படி நடந்துவராதபோது கர்த்தருடைய மக்களுக்கு ஆபத்து வரும். வேத அடிப்படையில் நடந்துவரும் வரையில்தான் திருச்சபை ஆத்துமாக்களின் பாதுகாவலனாக இருந்து அவர்களைப் போஷிக்கும் பணியை செய்ய முடியும். வேதத்தின் தன்மையை நம்மினம் இன்னும் முழுமையாக அறிந்து கொள்ளாததால் வேதத்தில் இருக்க வேண்டிய நம்பிக்கை அதற்கில்லை. வேதத்தை வெறும் தியானப் புத்தகமாக மட்டுமே இன்றும் நம்மில் பலர் பயன்படுத்தி வருகிறார்கள். அதன் அதிகாரத்தை ஏற்று நடக்காததால் தமிழ் கிறிஸ்தவமும், திருச்சபையும் ஆத்தும வல்லமை இல்லாததாக இருந்து வருகிறது. தனி நபர் ஊழியங்களும், குடும்ப ஊழியங்களும், திருச்சபை சாராத ஸ்தாபன ஊழியங்களும் காளான்கள் போல் பல்கிப் பெருகி நம்மினத்தை வதைத்துக் கொண்டிருக்கின்றன. நம்மினத்தை இருட்டில் வைத்து கர்த்தரின் ஆசீர்வாதங்களை அது அடையத் தடையா யிருந்து வருகின்றன. இன்றைக்கு திருச்சபை சாராத ஸ்தாபன ஊழியத் தால் போலிக் கிறிஸ்தவர்கள் தொகை பெருகி மெய்ச்சுவிசேஷ ஊழியம் அறவே இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலை மாறுவதற்கு என்ன செய்ய வேண்டும்? இதுவரை நாம்

*பார்த்து வந்திருக்கிற வேதம் காட்டுகிற வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்க்கையில் பல தியாகங்களைச் செய்து நாம் உழைக்க முன் வந்தால் மட்டுமே ஒரு சில நல்ல திருச்சபைகளாவது உருவாகி எதிர்காலம் பிரகாச மாக அமையும். அது இலகுவானதாக இருக்காது. இப்படி நான் சொல்லு வதற்கு காரணமிருக்கிறது. நம்மை நாம் முதலில் ஆராய்ந்து பார்த்து வேதம் சொல்லுகிறபடி வாழ்ந்து வருகிறோமா என்று கேட்டுப்பார்க்க வேண்டும். நாமே அப்படி வாழாதபோது மற்றவர்கள் வேதத்தைப் பின்பற்ற நாம் வழிகாட்டுவதெப்படி? நீங்கள் ஒரு சிறு சபைப் போதகராக இருக்கலாம். சிறு தொகையை வருமானமாகப் பெற்று ஊழியம் செய்துவரலாம். தெரிந்தோ தெரியாமலோ இந்த ஊழியத்துக்கு நீங்கள் வந்திருக்கலாம். இனியாவது திருந்தி வேத அடிப்படையில் உங்கள் ஊழியத்தை நடத்த நீங்கள் முன்வராதவரை தமிழினத்தில் மாற்றம் எப்படி வரும்? இதுவரை நாம் பார்த்தவற்றை நீங்கள் மெய்யாகவே படித்து இதுதான் சரியான வழி என்று தெரிந்துகொண்டிருந்தால் அதன்படி நடக்க தியாகத்தோடு உழைக்க நீங்கள் முன்வர வேண்டும். வேத வழிமுறைகளின்படி நடக்காத வரை நீங்களும் கர்த்தருக்கு எதிரியாகத்தான் இருக்கப்போகிறீர்கள்.*

*இருபத்தி மூன்று வருடங்கள்வரை போலிக் கிறிஸ்தவ ஸ்தாபனமொன் றில் ஊழியம் செய்துவிட்டு, கர்த்தரின் வேதம் திருச்சபையைப் பற்றிப் போதிக்க அது தெரியாமல் ஒரு ஸ்தாபனத்திற்காகப் பொய் ஊழியம் செய்துவந்திருக்கிறேனே என்பதை உணர்ந்த ஒரு சகோதரர் அந்த ஸ்தாபனத்தை உதறிவிட்டு சபையொன்றை நிறுவ ஆரம்பித்தது எனக்குத் தெரியும். கர்த்தரின் வார்த்தை பேசுகிறபோது மெய்க் கிறிஸ்தவர்கள் அதற்கு அடங்கி நடக்கப்பார்ப்பார்கள். போலிகள் மட்டுமே அதை உதறித் தள்ளிவிட்டு தங்கள் வழியில் போய்க்கொண்டிருப்பார்கள்.*

*இன்றைக்கு சபை ஊழியம் செய்து வருகிற அநேகர் வேதம் போதிக்கும் திருச்சபை அமைப்பு பற்றியே அறியாதிருக்கிறார்கள். சுவிசேஷம் சொல்ல வேண்டும் என்பது மட்டுமே தெரிந்திருக்கிறதே தவிர அந்தச் சுவிசே ஷத்தை வேதபூர்வமாக எப்படிச் சொல்லுவது என்பதுகூடத் தெரியாது இருக்கிறார்கள். கிறிஸ்துவை ஒருவர் விசுவாசிக்கிறாரா, இல்லையா? என்பதை அறிந்துகொள்ளுகிற பக்குவம்கூட இல்லாமல் இருக்கிறார்கள். விசுவாசித்தவர்களை சபைக்கு அங்கத்தவர்களாக தயார்செய்யவும் அவர் களுக்குத் தெரியவில்லை. சபை அங்கத்தவமே இல்லாமல் பல வருடங் களாக சபை என்ற பெயரில் கடை நடத்திவருகிறவர்கள் ஏராளம். இதெல் லாம் மாறி வேதம் போதிக்கும் கிறிஸ்து வழிப்படி கிறிஸ்துவின் திருச்சபை அமையும் காலம் வரத்தான் வேண்டும். சிதறிப்போன ஆடுகளைப் போல தமிழின ஆத்துமாக்கள் சத்தியத்தை அறிந்துகொள்ள வழி இல்லாமல், சத்தியப் போதனைக்குக் கீழ் இருந்து வளரும் வழி இல்லாமல் இருப்பது பெரும் அவமானம். கர்த்தர் நம்மினத்தின் மேல் கிருபை பாராட்டி தன்னு டைய திருச்சபை வார்த்தையின்படி அமைய சீர்திருத்தவாதிகளை நம்மத்தியில் எழுப்ப நாம் ஜெபிக்க வேண்டும். சத்தியத்தை அறிந்திருக்கிற நாம் சிறுதொகையினராக இருந்தபோதும் ஜெபம் கேட்கும் தேவன் நம் குரலைக் கேட்காமலா போகப்போகிறார்?*

# இங்கிலாந்தில் சீர்திருத்தம்

திருச்சபை சீர்திருத்தம் ஐரோப்பாவிலும், ஸ்கொட்லாந்திலும் உருவாகியவிதத்தில் இருந்து வேறுபட்டவிதத்தில் இங்கிலாந்தில் ஆரம்பித்தது. ஐரோப்பாவில் மார்டின் லூதரின் மூலமாக ஆரம்பமான சீர்திருத்தம் இங்கிலாந்தை அடையாமல் இருந்திருக்க முடியாது. ஆக்ஸ்போர்ட் (Oxford), கேம்பிரிட்ஜ் (Cambridge) பல்கலைக் கழகங்களில் மார்டின் லூதரின் போதனைகளும், ஆக்கங்களும் மிகவும் ஆர்வத்துடன் பேராசிரியர்களாலும், மாணவர்களாலும் விவாதத்துக்குள்ளாயின. கேம்பிரிட்ஜில் லூதரின் போதனைகளை ஆராயப் பண்டிதர்கள் அன்றாடம் கூடிவந்த இடம் "சின்ன ஜெர்மனி" என்று அழைக்கப்பட்டது. இந்தக் குழுவில் தொமஸ் பிளினி (Thomas Biliney), ஹியூ லத்திமர் (Hugh Latimar), மைல்ஸ் கவர்டேல் (Myles Coverdale), மாத்யூ பார்க்கர் (Matthew Parker), வில்லியம் டின்டேல் (William Tyndale) ஆகியோர் இருந்தனர். இவர்கள் அனைவருமே பின்னால் புரொட்டஸ்தாந்து சீர்திருத்தத்தில் பெரும்பங்கேற்றவர்களாக இருந்தனர்.

**எட்டாம் ஹென்றியின்** (Henry VIII) **அரசியல் சீர்திருத்தம்**

இக்காலப்பகுதியில் இங்கிலாந்தின் அரசனாக எட்டாம் ஹென்றி இருந்தான். 1557ல் அவன் மரணமடையும்வரை சீர்திருத்தவாதத்தின் பேரெதிரியாக இருந்தான். இங்கிலாந்தில் சீர்திருத்தவாதம் உருவாக அவன் காரணமாக இருந்தான் என்று சொல்லப்பட்டபோதும் சீர்திருத்த விசுவாசத்தை அவன் அடியோடு வெறுத்தான். அவன் எதைச் செய்திருந்தாலும் சீர்திருத்த ஆராதனை முறைகளிலும், போதனைகளிலும் எந்தவித அக்கறையும் காட்டவில்லை. மார்டின் லூதரின் போதனைகளுக்கெதிராக அவன் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தை வாசித்துவிட்டு போப் லியோ (Pope Leo) அவனுக்கு "சத்தியத்தின் பாதுகாவலன்" (Defender of the Faith) என்ற பட்டத்தைக் கொடுத்தார். அன்றிலிருந்து இன்றுவரையிலும் பிரித்தானிய தேசம் சத்தியத்தின் பாதுகாவலர்களாக தன்னுடைய அரசவம்சத்தைக் கருதிவருகிறது.

ஹென்றி தன்னுடைய சகோதரனாகிய ஆர்த்தருடைய (Arthur) மரணத்திற்குப் பிறகு அவனுக்கு மனைவியாக இருந்த கெத்தரினை (Catherine) திருமணம் செய்து கொண்டிருந்தான். அவர்களிருவருக்கும் பிறந்த பிள்ளைகள் அனைவரும் பிறப்பிலேயே இறந்துபோயிருந்தார்கள். அதனால் ஹென்றி தனக்குப் பிறகு நாட்டை ஆளத் தன் வம்சத்தில் ஒருவரும் இல்லையே என்று வருத்தப்பட்டான். அதன் காரணமாக இருபத்தி நான்கு ஆண்டுகள் இணைந்து வாழ்ந்திருந்த கெத்தரினை விவாகரத்து செய்துவிட்டு ஆன் (Ann) என்ற பெண்ணைத் திருமணம் செய்யத் தீர்மானித்தான். தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக

அவன் போப்பைப் பார்த்து, ஆரம்பத்தில் கெத்தரினைத் தான் திருமணம் செய்துகொள்ள போப் கொடுத்திருந்த அனுமதி கர்த்தருடைய வார்த்தைக்கு எதிரானது என்றும், அதனால் இந்தத் திருமணம் செல்லுபடியாகாது என்றும், அவ்வாறாகக் கெத்தரினுடனான திருமணம் செல்லுபடியாகா தெனில் தான் திருமணமாகாதவன் என்றும் அறிவித்து விவாகரத்திற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும்படிக் கேட்டான். அவ்வாறாக போப் அனுமதிப்பத்திரம் வழங்கினால் அவன் மறுபடியும் திருமணம் செய்துகொள்ள வசதியாக இருந்திருக்கும். போப் ஏழாம் கிளெமென்ட் (Pope Clement VII) ஹென்றியின் கோரிக்கையை நிராகரிக்கவில்லை. ஆனால், ஹென்றியின் கோரிக்கையை நிறைவேற்ற விரும்பாமல் அதை எப்படியோ தள்ளிப்போட்டுக்கொண்டே வந்தார். போரரசனாக இருந்த ஐந்தாம் சார்ள்ஸுக்கு கெத்தரின் உறவுக்காரியாக இருந்ததால் ஹென்றியின் கோரிக்கைக்கு உடன்பட்டால் போரரசனின் கோபத்துக்காளாக வேண்டி வரும் என்ற பயமும் போப்புக்கு இருந்தது. ஐந்தாம் சார்ள்ஸ் (Charles V) அக்காலத்தில் மிகவும் வலிமையுள்ள பேரரசனாக இருந்து வந்தான். அவனே மார்டின் லூதரின் போதனைகளை ஆராயக்கூடிய வேர்ம்ஸ் கவுன்சிலுக்கு (Diet of Worms) தலைமை தாங்கினான். இதனால் ஹென்றிக்கு பெருங்கோபம் ஏற்பட்டாலும் ஒன்றும் செய்ய வழியில்லாமல் கோபத்தோடு உள்ளுக்குள்ளேயே பொறுமிக்கொண்டிருந்தான்.

எட்டாம் ஹென்றி ரோமன் கத்தோலிக்க மத விசுவாசி. அவன் திருமணம் செய்ய ஆசைப்பட்டது ஆன் போலின் (Ann Boleyn) என்ற பெண்ணை. நாளாக ஆக பொறுமையிழந்த ஹென்றி போப்போடும், கத்தோலிக்க மதத்தோடும் தனக்கிருந்த தொடர்பை துண்டித்துக் கொண்டான். அத்தோடு போப்பின் அனுமதியில்லாமல் இங்கிலாந்து திருச்சபையில் கென்டபெரி ஆர்ச் பிஷப்பாக இருந்த தொமஸ் கிரேன் மரை சந்தித்துப் பேசி கெத்தரினுடன் தனக்கிருந்த திருமண உறவு கர்த்த ரின் நியாயப்பிரமாணத்தின்படி செல்லுபடியாகாது என்று அறிவிக்கும் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டான். தொமஸ் கிரென்மர் இதற்கு உடன்பட்டார். அதற்குப் பிறகு இங்கிலாந்து திருச்சபையின் தலைவனாக ஹென்றி தன்னை நியமித்துக்கொண்டான். கத்தோலிக்க மதத்தில் தனக் கெதிராக இருந்த தொமஸ் மூர் (Thomas Moor), ஜோன் பிஷர் (John Fisher) ஆகிய இருவருடைய தலைகளையும் வெட்டித்தள்ளும்படிக் கட்டளையிட்டான். தன்னை இங்கிலாந்து திருச்சபையின் தலைவனாக அறிவித்தும், திருச்சபைக்கும் நாடாளும் மன்னனுக்கும் இடையில் உள்ள புதிய உறவை சட்டமாக்கும்படியும் பாராளுமன்றத்திற்கு கட்டளையிட் டான். மேலும் போப்பின் அதிகாரத்துக்கு வசதியாக இருந்த குருமடங் களையெல்லாம் மூடும்படியும் உத்தரவிட்டான். இத்தகைய நடவடிக்கை களின் மூலம் எட்டாம் ஹென்றி அரசியல் சீர்திருத்தத்தை இங்கிலாந்தில் ஏற்படுத்தினான்.

ஹென்றி இக்காலத்தில் ஒரு முக்கியமான முடிவை எடுத்தான். 1538ம் ஆண்டில் நாட்டிலுள்ள ஒவ்வொரு சபையிலும் ஆங்கிலத்தில் உள்ள வேதப்புத்தகம் இருக்க வேண்டும் என்றும், மக்கள் தங்களுக்கு வசதிப்பட்ட

நேரத்தில் வந்து வேதப்புத்தகத்தைப் பார்க்கவும், படிக்கவும் வசதியாக சபைகள் எல்லா நேரங்களிலும் திறந்துவைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கிரேன்மருக்கும், நாட்டின் முதலமைச்சராக இருந்த குரொம் வெலுக்கும் (Cromwell) கட்டளையிட்டான். இதற்கு இரண்டு வருடங் களுக்கு முன்புதான் வில்லியம் டின்டேல், "கர்த்தாவே, இங்கிலாந்து மன்னனின் கண்களைத் திறவும்" என்று ஜெபித்திருந்தார். நடக்கின்ற காரியங்களெல்லாம் டின்டெலின் ஜெபத்திற்குக் கிடைத்த பலன்களாகவே அநேகர் நம்பினர்.

1533ல் ஆன் போலீன் ஒரு மகளைப் பெற்றெடுத்தாள். அவளே பின்பு முதலாம் எலிசபெத் (Elizabeth I) என்ற பெயருடன் ஆண்டாள். ஆன் ஒரு மகனைப் பெற்றெடுக்காததால் ஹென்றி அவளை வெறுக்க ஆரம்பித் தான். தனக்கு விசுவாசமில்லாமல் நடந்துகொண்டாள் என்று அவள் மீது குற்றஞ்சாட்டி பின்பு அவளுக்கு கொலைத்தண்டனை விதித்தான். அடுத்தபடியாக அவனுக்கு மனைவியாக வந்த ஜேன் சீமோர் (Jane Seymour) அவனுடைய இருதயத்துக்குக் களிப்பூட்டும்படியாக ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். இவனே எட்வர்ட் (Edward) என்ற பெயரில் தந்தை இறந்தபோது ஒன்பது வயதில் அரசனானான். 1553ம் ஆண்டு வரை அரசாண்ட எட்வர்ட் தன்னுடைய பதினாறாம் வயதில் இறந்தான்.

இக்காலத்தில், 1547-1553 வரையுள்ள காலப்பகுதியில் இங்கிலாந்திலும், வெல்சிலும் திருச்சபை சீர்திருத்தம் வெகுவேகமாக முன்னேறியது. தொமஸ் கிரேன்மர் இப்போது மெய்யான புரொட்டஸ்தாந்தியராக மாறியிருந்தார். ஐரோப்பாவில் இருந்த சீர்திருத்தவாதிகளை அவர் வரவேற்றதோடு அரசனின் அதிகாரிகளோடு ஒத்துழைத்து சபைகளில் இருந்த கத்தோலிக்க சிலைகளையும், அடையாளங்களையும் அகற்றினார். அத்தோடு கத்தோலிக்க ஆராதனைப் புத்தகத்தை சபைகளில் இருந்து அகற்றி ஆங்கில ஜெபப் புத்தகத்தை (English Prayer Book) அறிமுகப்படுத்தி னார். 1552ல் சபைகளில் இருந்த ஆங்கில ஜெப புத்தகத்தில் இங்கிலாந்து திருச்சபையின் 42 விசுவாச அறிக்கையும் (42 Articles of Faith) உள்ளடங்கி யிருந்தது. இது இன்றைக்கும் 39 விசுவாச அறிக்கைகளுடன் அச்சில் இருந்து வருகிறது.

**கத்தோலிக்க அரசி மேரியின் கொடூரமான துன்புறுத்தல்**

வாலிபனாக இருந்த ஆறாம் எட்வர்டின் மரணம் பிரித்தானிய தேசத்துக்கு மிகுந்த துன்பத்தைக் கொண்டுவந்தது. இந்தக் காலத்தில் ஐரோப்பாவிலும், இங்கிலாந்திலும் நாட்டரசன் எந்த மத நம்பிக்கைகளைக் கொண்டிருக்கிறானோ அதோடு நாட்டு மக்களின் மத நம்பிக்கைகளும், நடைமுறையும் பொருந்திப்போக வேண்டும் என்பது நடைமுறைச் சித்தாந்தமாக இருந்தது. எட்வர்டின் மரணத்திற்குப் பிறகு புரொட்டஸ் தாந்து விசுவாசத்தைப் பின்பற்றிய லேடி ஜேன் கிரேயை (Jane Grey) அரசியாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அவை வெற்றியளிக்க வில்லை. எனவே, எட்டாம் ஹென்றியின் மகளும், எரகனின் கெத்தரின் (Catherine the Aragon) என்றழைக்கப்பட்டவளுமாகிய மேரி (Mary) அரசி

யானாள். அவள் நாட்டில் மறுபடியும் கத்தோலிக்க மதத்தை நிலைநாட்டும் முயற்சிகளில் ஈடுபட்டாள். பேரரசன் ஐந்தாம் சார்ள்ஸின் மகனான ஸ்பெயினின் பிலிப்பை (Philip of Spain) அவள் மணமுடித்ததும் புரொட்டஸ்தாந்தியர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் பிரித்தானியாவில் தீவிரமடைந்தன. மேரியின் கோபத்துக்குள்ளாகி அழிந்துவிடாமலிருக்க அநேக சபைத்தலைவர்கள் ஐரோப்பாவை நோக்கிப் படையெடுத்தனர். சிலர் ஜெர்மனிக்கும், வேறு சிலர் கல்வினின் ஜெனீவாவுக்கும் போய்ச் சேர்ந்தனர்.

கர்த்தருக்காக இரத்தப்பலி கொடுத்தவர்களைப் பற்றி விளக்கும் ஜோன் பொஃக்ஸின் (John Fox) பிரபலமான நூலான Book of Martyrs ல் மேரியின் காலத்தில் கிறிஸ்துவுக்காக உயிர்ப்பலியளித்தவர்களைப் பற்றி விளக்கப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் 300க்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் கத்தோலிக்க பிஷப்புகளால் உயிரோடு நெருப்பில் கொளுத்தப்பட்டனர். பொஃக்ஸ் மிகுந்த அக்கறையோடு இவ்வாறாக உயிரிழந்தவர்களைப் பற்றிய விபரங்களை நேரில் பார்த்தவர்களிடம் இருந்தும் அரசாங்கக் குறிப்புகளில் இருந்தும் பெற்றுத் தன்னுடைய நூலில் விபரித்து எழுத்தியிருக்கிறார். மேரியின் கொடுஞ்செயலால் உயிரிழந்தவர்களில் முதன்மையானவர்கள் இங்கிலாந்தில் வூஸ்டர், குளொஸ்டர் ஆகிய பிரதேசங்களின் பிஷப்பாக இருந்த ஹியூ லத்திமர் (Hugh Latimar), இலண்டனின் பிஷப்பாக இருந்த நிக்கோலஸ் ரிட்லி (Nicholas Ridley), கென்டபெரியின் ஆர்ச் பிஷப்பாக இருந்த தொமஸ் கிரேன்மர் (Thomas Cranmer) ஆகியோர். இவர்கள் மூவரும் ஆக்ஸ்போர்டில் உயிரோடு கொளுத்தப்பட்டனர். மரணத்தை சந்திக்குமுன் ஹியூ லத்திமர் தன்னுடைய நண்பர்களைப் பார்த்து, “ஆறுதலடையுங்கள் ரிட்லி, ஆண்மையுடன் நடந்து கொள்ளுங்கள். கர்த்தரின் கிருபையால் இங்கிலாந்தில் நாம் இன்று ஏற்றி வைக்கப்போகிற மெழுகுவர்த்தி ஒருபோதும் அணையாது என்று நம்புகிறேன்” என்றார்.

ஹியூ லத்திமருக்குப்பின் குளொஸ்டர் பிரதேசத்தின் திருச்சபை பிஷப்பாகப் பணியேற்ற ஜோன் ஹூப்பர் (John Hooper) தான் பணிபுரிந்த கெத்தீட்ரலுக்கு முன்பாக உயிரோடு எரிக்கப்பட்டார். இன்னொரு சீர்திருத்தவாதியான மென்செஸ்டரில் பணியாற்றிய ஜோன் பிரெட்போர்ட் (John Bradford) லண்டனில் ஸ்மித்பீல்ட் (Smithfield) என்ற இடத்தில் எரித்துக் கொல்லப்பட்டார். வேல்ஸ் தேசத்தில் பிஷப்பாக இருந்த ரொபட் பெர்ரர் (Robert Ferrar) கார்மார்த்தனில் (Carmarthen) எரிக்கப்பட்டார்.

மேரி இங்கிலாந்தின் அரசியானவுடனேயே கென்டபெரியின் ஆர்ச் பிஷப்பான கிரேன்மர் இலண்டனில் சிறைவைக்கப்பட்டார். பின்பு ஆக்ஸ்போர்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கே அவர் திருச்சபையில் தொடர்ந்து பணிபுரியவில்லை என்று காட்டுவதற்கான படிப்படியான சடங்குகளுக்கு உட்படுத்தப்பட்டார். உதாரணத்திற்கு, அப்போது இலண்டனில் கத்தோலிக்க மத பிஷப்பாக இருந்த போனர், இருபத்தி மூன்று வருடங்களுக்கு முன்பு கிரேன்மர் இங்கிலாந்து திருச்சபை பிஷப்பாக நியமிக்கப்பட்டதன் பலனை நீக்குவதற்காக அவருடைய கைவிரல்களையும்

நகங்களையும் ஒவ்வொன்றாக இரத்தம் சொட்டச் சொட்ட விராண்டி யெடுக்கச் செய்தார். இதைச் செய்து முடித்தவுடன் கத்தோலிக்க பிசப்பும் அவருடைய அடியாட்களும் தங்களுடைய மனதை மாற்றிக்கொண்டது போல் நடித்து கிரேன்மரை நல்லவிதமாக நடத்த ஆரம்பித்தார்கள். கிரேன்மரை ஒரு வசதியான இருப்பிடத்தில் தங்கவைத்து காற்றோட்ட முள்ள இடங்களில் உலாவுவதற்கான வசதிகளையும் செய்துகொடுத்து, அவரோடு கனிவோடு பேச ஆரம்பித்தார்கள். இதெயெல்லாம் உண்மை யென்று நம்பிய கிரேன்மர், அவர்களுடைய வற்புறுத்தலின்படி தான் புரொட்டஸ்தாந்து விசுவாசக் (சீர்திருத்தவாத) கோட்பாடுகளைக் கைவிட்டுவிட்டதாக எழுதப்பட்டிருந்த ஓர் அறிக்கையில் கையெழுத் திட்டுக் கொடுத்துவிட்டார். இருந்தாலும் மேரிக்கு அது திருப்தியளிக்க வில்லை. எட்டாம் ஹென்றி தன்னுடைய தாயை விகாவரத்து செய்வதற்கு உடந்தையாக இருந்து கிரேன்மர் அதற்கு அனுமதியளித்ததை அவள் மறக்க வுமில்லை, அவளால் அதைப் பொறுத்துக்கொள்ளவும் முடியவில்லை. புரொட்டஸ்தாந்து கோட்பாடுகளைக் கைவிட்டுவிட்டேன் என்று கிரேன் மர் கையெழுத்திட்டுத் தந்தது போதாது என்று அவரை உயிரோடு கொளுத்தும்படி மேரி கட்டளையிட்டாள்.

1556ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் நாள் காலையில் ஆக்ஸ்போர்டில் உள்ள புரோட் வீதியில் கிரேன்மரைக் உயிரோடெரிப்பதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்பட்டன. 150 விறகுக்கட்டைகள் இதற்காக அடுக்கி வைக்கப்பட்டன. எரிப்பதற்கு முன் ஒரு பிரசங்கத்தை அளிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அன்று மழைபெய்தபடியால் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்த சபையில் பிரசங்கத்தை அளிக்க முடிவாயிற்று. கிரேன்மர் அங்கே ஒரு மேடையில் நிறுத்தப்பட்டார். பிரசங் கம் முடிவடைந்தபின் கத்தோலிக்க எதிரிகள், கத்தோலிக்கத் தாயிடம் மறுபடியும் திரும்பிவிட்டேன் என்று கூட்டத்திற்கு அறிவிக்கும்படி கிரேன் மரிடம் சொன்னார்கள். ஆனால் தன்னுடைய எதிரிகளும், கூட்டத்தாரும் திடுக்கிட்டுப் போகும்படி கிரேன்மர் பெருந்தைரியத்தோடு, “என்னுடைய சீர்திருத்தவாத நம்பிக்கைகளைக் கைவிட்டுவிட்டேன் என்று கையெழுத்துப் போட்டுக்கொடுத்தபோது என்னுடைய கரம் என்னுடைய இருதயத்தை மீறி நடந்துகொண்டது. அதனால் அவ்வாறு எழுதிக்கொடுத்த என்னுடைய கரத்தை முதலில் தண்டிக்க வேண்டும். என்னை எரிக்கத் தீர்மானித் திருப்பீர்களேயானால் என்னுடைய கரத்தை முதலில் எரியுங்கள். போப் பைப் பொறுத்தவரையில் அவர் இயேசு கிறிஸ்துவின் எதிரி, அந்திக் கிறிஸ்து. அவருடைய போதனைகள் அனைத்தும் போலிப்போதனைகள். அவரை நான் மறுதலிக்கிறேன்” என்று தைரியத்தோடு உரத்த சத்தமிட்டுக் கூறினார். “அவனுடைய வாயை அடையுங்கள” என்று கத்தோலிக்க குருக்கள் அலறினார்கள். அதன்பிறகு கிரேன்மர் வெகுவேகமாகத் தன்னை எரிக்கப் போகின்ற இடத்தை நோக்கி நடந்தார். சரீரத்தைச் சுற்றி எதிரிகள் வைத்த தீ பற்றி எரிந்தபோது தன்னுடைய வலது கரத்தை நீட்டி அது முதலில் எரியும்படிப் பார்த்துக் கொண்டார். இந்தக் கரந்தான் காட்டிக் கொடுத்தது என்று சொன்னபடி கிறிஸ்துவுக்காக கிரேன்மர் உயிர்துறந்தார்.

# சீர்திருத்த கிறிஸ்தவ சத்தியங்களை விளக்கும் நூல்கள்

- சீர்திருத்த விசுவாசம்
- திருச்சபை சீர்திருத்தம்
- பரிசுத்த வேதாகமம்
- தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு (ஜேம்ஸ் அடம்ஸ்)
- கிறிஸ்தவன் யார் (அல்பர்ட். என். மார்டின்)
- குடும்ப ஆராதனை
- கிறிஸ்தவ இறையியல் (அறிமுகம்)
- வேதாகமத்தை விளங்கிக் கொள்ளுவது எப்படி
- வியாக்கியானப் பிரசங்கம்
- ஏன் பிரசங்கம்!
- சுவிசேஷக் கோட்பாடும்,
  புதிய சுவிசேஷக் கோட்பாடும்,
- ஆதிசபையின் அற்புத வரங்கள் (ஜனவரி 2006)
- வில்லியம் கேரி (ஜனவரி 2006)
- பத்துக் கட்டளைகள் (ஜூன் 2006)
- சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் (ஜூன் 2006)

நூல்களின் விலை மற்றும் தபால் செலவுபற்றிய விபரங்களுக்கு கீழ்வரும் முகவரிகளோடு தொலேபேசி மூலமோ எழுதியோ தொடர்புகொள்ளுங்கள்.

**இவாஞ்சேலிக்கள் பாப்திஸ்து சபை**
**57/2 டி. பி. கே மெயின் வீதி பைகாரா, மதுரை 625004**
**தமிழ்நாடு, இந்தியா**
**தொலைபேசி எண்: 9994181010**

**கிருபை இலக்கிய சேவை**
**19. இராஜசிங்க வீதி, கொழும்பு 6**
**ஸ்ரீ லங்கா**
**தேலைபேசி எண்:**

# ஜோன் நியூட்டன்

## இரண்டாம் பாகம்

கடந்த வருடம் ஜோன் நியூட்டன் (John Newton) கர்த்தரை அடைந்த இருநூறாவது வருடமாகும். இங்கிலாந்தில் அடிமை வியாபாரத்திற்கெதிராகப் போராடி வெற்றிகண்ட வில்லியம் வில்பர்போர்ஸ் (William Wiberforce) ஜோன் நியூட்டனின் நெருங்கிய நண்பர். இருவரும் இந்தப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டவர்கள். இங்கிலாந்தில் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்ட இருநூறாவது ஆண்டும் இந்த ஆண்டுதான். ஆராதனைப் பாடல்கள் எழுதிப் புகழ் பெற்ற வில்லியம் கவுப்பர் (William Cowper) ஜோன் நியூட்டனின் இன்னுமொரு நெருங்கிய நண்பர். இருவரும் இணைந்து பல பாடல் களை எழுதியுள்ளனர். கப்பல்களில் பணிபுரிந்து பின்பு அடிமை வியாபாரக் கப்பல்களில் வேலை செய்து தானும் அடிமையாகி பாவத்தையும், துன்பத்தையும் அவற்றின் அடிமட்டம்வரைப் போய் ருசிபார்த்து கர்த்தரை அறியாமல் வாழ்ந்த நியூட்டனை இறையாண்மையுள்ள கர்த்தர் தன்னுடைய கிருபையால் இரட்சித்துப் பயன்படுத்தினார். அவருடைய மனந்திரும்புதல் பற்றிய சாட்சி கர்த்தரின் அளப்பரிய கிருபையை உலகத்திற்கு இன்றும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. நியூட்டன் எழுதிய நூல்களும், பாடல்களும் அவரை இன்றும் கிறிஸ்தவ உலகம் நினைவுகூரும்படிச் செய்துகொண் டிருக்கின்றன. இன்றைக்கும் கிறிஸ்தவர்களெல்லாம் பாரெல்லாம் கர்த்தரைப் பாடிப் புகழும் அவரெழுதிய “Amazing Grace How Sweet The Sound” என்ற பாடலை எவரால் மறக்க முடியும்.



*ஜோன் நியூட்டன் கர்த்தரின் கிருபையால் மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும் அடைந்தபிறகு அதுவரை அவிசுவாசம் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்படுத்தியிருந்த அக்கிரமங்களையெல்லாம் படிப்படியாகக் கலைந்துபோடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். வாழ்க்கையில் பாவத்தின் அடித்தளத்தை ருசிபார்த்திருந்த நியூட்டன் அதன் கோரத்தை உணர்ந்தவராக இருந்ததால் அதன் சுவடுகூட தன்னில் இருக்கக்கூடாது என்று தீவிரத்தோடு அதற்கெதிராக போராடத் தீர்மானித்ததில் ஆச்சரியமில்லை. இன்றைக்கு பாவத்திற்கெதிரான அத்தகைய தீவிரத்தை அநேக கிறிஸ்தவர்களில் காணமுடியாதிருக்கிறது.*

*கிறிஸ்துவை நேசித்துப் பின்பற்றிய நியூட்டனுக்கு கிறிஸ்துவுக்குத் தன் வாழ்நாள் முழுவதும் உழைக்க வேண்டும் என்றும், கிறிஸ்தவ ஊழியத்தில் ஈடுபட வேண்டும் என்றும் ஆர்வம் இருந்தது. அவர் லிவர்பூலில் வாழ்ந்த காலங்களில் அத்தகைய ஊழியப்பணியில் ஈடுபட எடுத்த முயற்சிகள்*

*ஒன்றும் நிறைவேறவில்லை. இரண்டு திருச்சபை ஆர்ச்பிஷப்புகளும், ஒரு பிஷப்பும் அவரை ஊழியத்துக்கு பிரதிஷ்டை செய்ய மறுத்துவிட்டனர். அதனால் பிரசங்கம் செய்யும் வாய்ப்புக்கிடைக்காததால் அவர் எழுத்துப் பணியில் ஈடுபட்டார். தான் எழுத வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிராமல் கிறிஸ்துவை அறிவிக்க வேண்டும் என்பதில் அவருக்கு இருந்த தீவிரமே இதில் அவரை ஈடுபட வைத்தது. இந்த ஆரம்ப கிறிஸ்தவ வாழ்க்கையில் அவர் எழுதியவற்றில் சில பிரசுரமாயின; வேறு சில அச்சிடப்படாமல் பலரும் வாசிக்கும்படி விநியோகமாயின. தனிப்பட்ட முறையில் நியூட்டன் எழுதி விநியோகித்த கடிதங்கள் எதிர்பாராதவகை யில் செயல்பட்டன. லோர்ட் டோர்ட்மவுத் என்ற சுவிசேஷ இயக்கத்தைச் சேர்ந்த ஒரு முக்கியஸ்தரிடம் அவருடைய கடிதங்கள் வந்துசேர்ந்தன. அவற்றைப்படித்து எழுதியது யார் என்று அறிந்துகொண்ட அந்த மனிதன் லிங்கனின் பிஷப்பைக் கொண்டு இங்கிலாந்து திருச்சபையில் ஜோன் நியூட்டன் ஊழியம் செய்யும்படி அவருக்கு பிரதிஷ்டை செய்து வைத்தார். இதனால் ஜோன் நியூட்டனுக்கு பிரசங்கம் செய்யும் உரிமை கிடைத்தது. அத்தோடு லோர்ட் டோர்ட்மவுத் பக்கிங்கம்சயரில் இருந்த ஒல்னி என்ற இடத்தில் இங்கிலாந்து திருச்சபையின் பிரசங்கியாக பணிபுரிய அவருக்கு வசதி செய்து தந்தார். தன்னுடைய 39ம் வயதில் 1764ம் ஆண்டில் ஜோன் நியூட்டன் சுவிசேஷத்தை அறிவிக்கும் போதகராக பணிபுரிய ஆரம்பித்தார். அதே வருடம் அவர் எழுதியிருந்த எட்டுக் கடிதங்களும் பதினான்காக திருத்தப்பட்டும், விஸ்தரிக்கப்பட்டும் நூலாக* The Authentic Narrative *என்ற தலைப்பில் பிரசுரமாயின.*

*நியூட்டன் பணிபுரிந்த இங்கிலாந்து திருச்சபை இருந்த ஒல்னி ஒரு சிறிய சந்தை டவுனாக இருந்தது. அதில் முக்கால் கிலோ மீட்டர் தூர முள்ள ஒரேயொரு தெருவும் அதற்கு இரண்டுபக்கமும் ஓலைகளால் வேயப்பட்ட கூரைகொண்ட வீடுகளும் இருந்தன. ஊர் மக்கள் நெசவு வேலை செய்து இயன்றதைச் சம்பாதித்து அதில் வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஊர் மக்கள் வறுமையில் வாடியவர்களாகவும், ஊர் குப்பைகள் நிறைந்து அழுக்குப்படிந்தும் இருந்தது. அந்த ஊர் மக்களைப்பற்றியும், தன்னைப் பற்றியும் வெளியுலகம் தெரிந்துகொள்ளாமல் போனாலும் அந்த ஊர் மக்களுக்குப் பயனுண்டாகும்படி தன்னைக் கர்த்தர் பயன்படுத்தி னால் அதுவே போதும் என்று எண்ணினார் நியூட்டன். 1764ம் ஆண்டு மே மாதம் 24ம் நாள் அவர் தன்னுடைய முதல் பிரசங்கத்தை அந்த ஊர் சபையில் அளித்தார். அதுபற்றிக் குறிப்பிடுகின்ற நியூட்டன், "சபையில் சத்தியம் தெரிந்திருந்தவர்கள் என் பிரசங்கத்தை வரவேற்றனர். ஏனையோர் அதை சட்டை செய்யவில்லை" என்று சொல்லுகிறார். கூட்டத்தில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் வெறும் பெயர் கிறிஸ்தவர்களே. ஊரில் 2,500 பேர் வரையில் சபையில் ஒருநாளும் காலெடுத்து வைத் திராதவர்கள். அவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க ஒரு கடிதத்தை எழுதத் தீர்மானித்தார் நியூட்டன். ஒல்னி மக்கள் கர்த்தரிடம் வருவதற்காக ஜோன் நியூட்டனோடு இணைந்து ஜெபிப்பதற்கு ஒரு சிறு குழுவினர் இருந்தனர். நியூட்டனின் வீட்டில் கூடி ஞாயிறு மாலையும்,*

செவ்வாய் இரவும் வேதத்தைப் படித்து ஒல்னி மக்களுக்காக ஜெபித்த அவர்களை இராஜாக்களைவிட விலைமதிப்புள்ளவர்களாக நியூட்டன் கருதினார். 1772ல் ஒல்னி மக்களில் ஒரு சிறுதொகையினர் சபையில் இணைந்ததாக நியூட்டன் எழுதுகிறார். 1776ல் சபையில் வயதான பலர் கர்த்தரிடம் போயிருந்தபோதும் இந்தப் பன்னிரண்டு வருடங்களில் கர்த்தர் அநேக கிருபையின் அற்புதங்களை சபைமக்கள் மத்தியில் செய்திருந்ததாக நியூட்டன் குறிப்பிடுகிறார்.

ஒல்னியில் இருந்த அந்தப் பன்னிரண்டு வருடங்களில் மூன்று வருடங்கள் நியூட்டனுக்கு வில்லியம் கவுப்பரோடு நல்ல உறவு ஏற்பட்டது. செவ்வாய் இரவு கூடிய கூட்டத்தில் பாடுவதற்காக வில்லியம் கவுப்பர் கீர்த்தனைகளை எழுதி உதவினார். வில்லியம் கவுப்பர் அருமையான கீர்த்தனைகளை ஆராதனைக்குப் பயன்படும்படியாக எழுதியிருக்கிறார். ஒல்னியில் பதினாறு வருடங்களைக் கழித்தபின்பு இலண்டனின் நடுமத்தியில் இருந்த வூல்நோத்தின் செயின்ட் மேரி திருச்சபைக்குப் பணிபுரிய வருமாறு வந்த அழைப்பை நியூட்டன் ஏற்றுக்கொண்டார். அவர் இலண்டனுக்குப் பணிபுரியபோனபோது ஐம்பத்தி நான்கு வயதாகியிருந்தது. எண்பது வயதாகி கண் பார்வை மங்கிப்போன நிலையிலும் கர்த்தரின் கிருபையால் அவர் இலண்டன் சபையில் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். 1806ம் ஆண்டு அக்டோபர் மாதம் அவர் தன்னுடைய கடைசிப் பிரசங்கத்தை செயின்ட் மேரி சபையில் அளித்தார். “நீங்கள் எப்படியிருக்கிறீர்கள் ஐயா?” என்று கேட்பவர்களிடம், “கர்த்தர் எந்த நிலைமையில் இருக்க அனுமதித்திருக்கிறாரோ அப்படியே இருக்கிறேன்” என்று நியூட்டன் பதில் தந்தார். 1807ம் ஆண்டு டிசம்பர் 21ம் நாள் நியூட்டன் இறைவனை அடைந்தார். நியூட்டனின் மனைவி அவர் மரிப்பதற்கு பதினேழு வருடங்களுக்கு முன் மரித்தார்.

**கிறிஸ்தவ முதிர்ச்சி**

கிறிஸ்தவ விசுவாசத்தைப் பொறுத்தவரையில் அது சிறிது சிறிதாகவே வளர்ச்சியடையும் என்பதை ஜோன் நியூட்டன் தன்னுடைய போதனைகளில் வலியுறுத்தியிருக்கிறார். தன்னுடைய மறுபிறப்பைப் பற்றிப் பேசும்போது கடலில் ஏற்பட்ட அனுபவத்தின் பிறகு இரண்டு மூன்று வருடங்களிலேயே தனக்கு மறுபிறப்பின் அனுபவ வளர்ச்சி ஏற்பட்டதாகக் கூறுகிறார். ஆகவே எப்போது மறுபிறப்பை அடைந்தீர்கள் என்ற கேள்விக்கு இந்த நாளில்தான் நடந்தது என்று குறிப்பிட்டு ஒரு நாளைத் தன்னால் சொல்ல முடியாது என்கிறார் நியூட்டன். மறுபிறப்பு (Regeneration) பரிசுத்த ஆவியின் மூலமாக உடனடியாக இரகசியமாக ஒரு மனிதனின் இருதயத்தின் ஆழத்தில் ஏற்பட்ட போதும் மனமாற்றம் (Conversion) படிப்படியாகவே வெளிப்படையாக அந்த மனிதனுக்குப் புலப்பட்டு மற்றவர்களுக்கும் தெரிய வரும் என்கிறார் நியூட்டன். மறுபிறப்பு உடனடியாக நிகழ்கிறதாக இருந்தாலும் மனமாற்றம் அப்படி உடனடியாக புலப்படுவதில்லை என்கிறார் ஜோன் நியூட்டன். ஆகவே, மறுபிறப்பு நிகழ்ந்த நாளைப் பற்றி கவலைப்படாமல் நாம் படிப்படியாக கிறிஸ்துவில் தொடர்ந்து வளர்ந்து வருகிறோமா என்றும் அத்தகைய

*வளர்ச்சி நம்முடைய விசுவாசத்திலும், பரிசுத்த வாழ்க்கையிலும் வெளிப்படுகிறா என்பதிலுமே அதிக கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் நியூட்டன்.*

**நியூட்டனும் கிறிஸ்தவ நூல்களும்**

*நியூட்டனின் எழுத்துக்கள் பல்லாயிரக் கணக்கானவர்களைப் பாதித்தன. முக்கியமாக அவருடைய கடிதங்களே அநேகருடைய வாழ்க்கையில் ஆசீர்வாதமாக இருந்திருக்கின்றன. இன்றும் நியூட்டனின் கடிதங்களும் நூல்களும் அச்சில் இருந்து அநேகருக்கு ஆவிக்குரிய பலன்களைத் தந்து கொண்டிருக்கின்றன. ஜோன் நியூட்டனின் ஆலோசனைகளால் பயன்பெற்றவர்களில் இருவர் பாப்திஸ்து போதகராக இருந்த ஜோன் ரைலன்டும், வேதநூல்களுக்கு விளக்கவுரை எழுதியுள்ள தொமஸ் ஸ்கொட்டும். ஒருவர் கல்வினிசப் போதனைகளைப் பின்பற்றிக்கொண்டு சுவிசேஷத்தையும் எப்படிச் சொல்ல முடியும்? என்ற கேள்விக்கு பதில் தேடியலைந்துகொண்டிருந்த ஜோன் ரைலண்டுக்கு நியூட்டனின் ஒரு நூலைக் கொடுத்து வாசிக்கும்படிச் செய்து அவருடைய தடுமாற்றத்தை நீக்கினார். அதன் பிறகு ரைலன்டு வில்லியம் கேரியின் இந்திய மிஷனரி ஊழியத்தில் பங்கேற்றிருந்ததை வரலாறு அறியும். அதேபோல் ஆரம்பத்தில் நியூட்டனோடு கசப்புடன் இருந்த ஸ்கொட் அவர் தந்த ஒரு நூலை வாசித்துப் பயனடைந்து நியூட்டனுடன் நட்புப் பாராட்டினார். கிறிஸ்தவ நூல்களை வாசிப்பதன் அவசியத்தை நியூட்டன் வலியுறுத்தத் தவறவில்லை. இருந்தபோதும் நூல்கள் வேதத்தின் அதிகாரத்தைக் கொண்டிருக்க முடியாது என்பதையும் அவர் விளக்காமலிருக்கவில்லை.*

*வில்லியம் வில்பர்போசின் அடிமைத்தனத்துக்கு எதிரான போராட்டத்தை ஆதரித்து ஒரு நூலை நியூட்டன் எழுதி உதவினார். மூவாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டு அது விநியோகிப்பட்டது. அது இங்கிலாந்து அரசு பின்னால் அடிமைத்தனத்திற்கு எதிராக சட்டம் கொண்டு வருவதற்கு தூண்டுகோலாக இருந்திருக்கிறது. நியூட்டன் வில்லியம் கவுப்பருடன் இணைந்து அநேக கீர்த்தனைகளை எழுதியிருக்கிறார். 1772ல் நியூட்டன்* Amazing Grace *என்ற கீர்த்தனையை எழுதினார். 1779ல் ஒல்னி கீர்த்தனைகள் என்ற தலைப்பில் அவர் 350 கீர்த்தனைகளை வெளியிட்டார். அவற்றில் 281 ஜோன் நியூட்டனுடையது. இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் இந்தக் கீர்த்தனைப் புத்தகம் பல பதிப்புகளாக வெளிவந்தன.*

**போதக ஆலோசனையளிக்கும் திறமை**

*நியூட்டன் அருமையான போதகராக இருந்தார். ஆத்துமாக்களை அவர் தனிப்பட்டவிதத்தில் ஆழமாக அறிந்துகொண்டிருந்தார். ஆத்மீக அனுபவத்தின் நிச்சயத்தை அறிந்துகொள்ளுவதில் தடுமாறிக்கொண்டிருந்தவர்களுக்கு அவரளித்த ஆலோசனைகள் ஆசீர்வாதமானவை. அவருடைய ஆலோசனைகள் எப்போதும் முதலில் ஒருவர் நிச்சயமாக கிறிஸ்தவ அனுபவத்தைப் பெற்றிருக்கிறாரா என்பதை அறிந்துகொள்வதில் இருந்து ஆரம்பித்தது. பாவத்தின் சாயலும், சோதனைகளும் இல்லாத ஒரு பரிசுத்த*

*வாழ்க்கையை எவரும் தேடினால் அது கர்த்தரிடம் இருந்து வருகிற பரிசுத்த வாழ்க்கையல்ல என்றார் நியூட்டன். நியூட்டன் பலருக்கும் பலவிதங்களில் மிகுந்த முதிர்ச்சியுடனும், அநுபவத்துடனும், விவேகத் துடனும் தன்னுடைய கடிதங்களின் மூலம் போதக ஆலோசனைகளை வழங்கியுதவியிருக்கிறார். அவருடைய ஆலோசனைகள் பொதுவானவை யல்ல. தனக்குத் தெரிந்தவர்களுக்கு அவரவருடைய தேவைகளுக்கும், நிலைமைக்கும் தேவைப்பட்டபடி தகுந்த ஆலோசனைகளை வழங்குவதில் அவர் திறமைசாலியாக இருந்தார். கடிதங்களின் மூலம் மட்டுமல்லாமல் கீர்த்தனைகள் மூலமும் அவர் அருமையான வேத ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்.*

*கிறிஸ்தவ ஆலோசனைகளை வழங்கும்போது ஒருவர் இலகுவாக பாவத் தைப் பற்றியும், அதன் அவலத்தைப் பற்றியும் பேசி விசுவாசியின் பலவீனத் தில் அதிக கவனம் செலுத்தி அவரை அதிகம் தன்னுடைய பலவீனத் திலேயே கவனம் செலுத்தும்படிச் செய்துவிட முடியும். அப்படிச் செய்வது முழுத்தவறு. ஜோன் நியூட்டன், பாவி கர்த்தரிடம் கிறிஸ்துவால் மட்டுமே வர முடியும் என்பதை எப்போதும் வலியுறுத்துகிறார். கிறிஸ்துவைத் தவிர வேறு எவராலும் ஒருவரைக் கர்த்தரிடம் அழைத்து வரமுடியாது என்பது அவருடைய போதக ஆலேசனைகளில் நிறைந்திருக்கும். நம்முடைய சமா தானத்திற்கும் அதனை ருசிப்பதற்கும் கிறிஸ்து அவசியம் என்றும், நம்முடைய இரட்சகரை நோக்கிப் பார்த்தே தேவ சமாதானத்தை வாழ்க்கை யில் அநுபவிக்க முடியும் என்றும் நியூட்டன் வலியுறுத்தினார். கிறிஸ்துவின் திருஇரத்தம் நம்முடைய சகல பாவங்களையும் கழுவியெடுக்கிறது என்பதே நமக்கிருக்கும் பேராறுதல் என்று நியூட்டன் கூறுகிறார். ஒரு பாவம் நம் முடைய ஆத்துமாவை அதள பாதாளத்திற்கு தள்ளிவிடும், ஆனால், இயேசு வின் திருஇரத்தம் அவரை விசுவாசிக்கின்ற அனைவருடைய குற்றங்களி லிருந்தும், குற்றவுணர்விலிருந்தும் விடுவிக்கும் என்று எழுதுகிறார் நியூட்டன்.*

**நியூட்டனின் மானுடம்**

*நியூட்டனின் வாழ்க்கையை ஆராயும்போது அவர் கிறிஸ்தவ ஊழியத் தில் பயிற்சி பெற்றிருப்பவர்களைவிட தகுதியில் குறைந்தவராகவும், சாதா ரணமானதொரு ஊழியத்தை செய்துவந்தவராகவும் நம் கண்களுக்குப் புலப்படும் வாய்ப்பு இருக்கிறது. அது தவறு. பழைய ஏற்பாட்டு எபிரெய மொழியில் இருக்கும் வேதத்தையும், கிரேக்க புதிய ஏற்பாட்டையும் வாசித்து ஆராய்ந்து வேதப்பகுதிகளுக்கு தகுந்த விளக்கமளிக்கும் ஆற்றலைக் கொண்டிருந்தார் நியூட்டன். இறையியல் நூல்களையும், சபை வரலாற்று நூல்களையும் அவர் அதிகம் கற்றுத் தேர்ந்திருந்தார். 1779ல் அமெரிக்காவில் பிரபல்யமான பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டமளிக்க முன் வந்திருந்தது என்றால் ஜோன் நியூட்டனின் பாண்டித்தியத்தைப் பற்றி எண்ணிப்பாருங்கள். அந்தப் பட்டத்தை நியூட்டன் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ள மறுத்தார். அதற்குக் காரணம் அவர் வெறும் சாதாரண மனிதனாக, போதகராகக் கிறிஸ்துவுக்குப் பணிபுரிவதில் மட்டும் கவனம் செலுத்தியதுதான்.*

*நியூட்டன் மக்களின் போதகராக இருந்தார். ஆர்வமிக்க உரையாடலில் ஈடுபடுவதில் அவர் வல்லவராக இருந்தார். விருந்துபசாரம் செய்வதிலும் அவர் சிறந்தவராக இருந்தார். அழைக்கப்பட்டவர்களும், அழைக்கப்படாத வர்களும் அவருடைய வீட்டுக்கு எப்போதும் எந்நேரமும் வரலாம். வில்லியம் கவுப்பர் மனநிம்மதியில்லாது தவித்துக்கொண்டிருந்த காலத்தில் நியூட்டனும், அவருடைய மனைவியும் ஒருவருடத்திற்கு அவரைத் தங்களு டைய வீட்டில் வைத்துக் கவனித்துக் கொண்டார்கள். நியூட்டனின் உற்சாகமான நடவடிக்கையும், நகைச்சுவையும் அவரை எல்லோரும் விரும் பிப் பழகச் செய்தன. ஆத்துமாக்களின் மேல் நியூட்டன் அதிக அன்பு வைத்திருந்தார். அவருடைய வாழ்க்கையில் அதை எல்லோரும் உணரும் படியாக இருந்தது. போலித்தனமாகப் பழகுவது நியூட்டனின் அகராதியில் இருக்கவில்லை. துன்பப்படுகிறவர்களுக்கும், தடுமாற்றத்துக்குள்ளாயிருப்ப வர்களுக்கும் அவருடைய இல்லம் அடைக்கலமாக இருந்தது என்று நியூட் டனின் வாழ்க்கை சரிதத்தை எழுதிய ரிச்சர்ட் செசில் குறிப்பிட்டிருக் கிறார். மனிதர்களுக்கு மனிதனாக இருந்தவர் ஜோன் நியூட்டன். நியூட்டன் தன்னுடைய கல்லறைக் கல்லில் பின்வரும் வாசகங்களே பொறிக்கப்பட வேண்டும் என்று இறப்பதற்கு முன் சொல்லியிருந்தார்.*

“ஒரு காலத்தில் அவிசுவாசியாகவும், உலக இச்சைகொண்டவனாகவும் ஆபிரிக்காவில் அடிமைகளின் சேவகனாகவும் இருந்த ஜோன் நியூட்டனாகிய என்னை மகா கிருபையுள்ள இயேசு கிறிஸ்து பாதுகாத்து, காப்பாற்றி, மன்னித்து அநேக காலம் நான் அழிப்பதற்கு பாடுபட்ட சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நியமித்தார்.”


# சிறப்புச் சலுகையில் நல்ல நூல்கள்

மூன்று நல்ல நூல்களை வாசகர்கள் சிறப்புச் சலுகையாக முப்பது ரூபாய் மட்டும் (ரூபாய் 30/-) நன்கொடை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

**பரிசுத்த வேதாகமம்**
**பிரசங்கம் ஏன்!**
**கிறிஸ்தவன் யார்!**

இந்த நூல்களை வாசகர்கள் கீழ்வரும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இவாஞ்சலிக்கள் பாப்திஸ்து சபை
57/2 டி. பி. கே. மெயின் வீதி, பைகாரா, மதுரை 600425
தொலைபேசி எண்: 9994181010

# நீங்கள் ஊழியர்களின் மனைவிகளா, இல்லை . . .

**ஊ**ழியர்களுக்கு வாய்க்க வேண்டிய மனைவிகளைப் பற்றி கர்த்தருடைய வேதம் அமைதியாக இருந்துவிடவில்லை. திருச்சபை ஊழியத்துக்கு முக்கிய இடத்தைத் தந்து அதன் மூலம் தனக்கு மகிமை தேடிக்கொள்ளுகிற கர்த்தர் திருச்சபை ஊழியர்களுக்கான தகுதிகளை மட்டும் விளக்காமல் அவர்களுடைய மனைவிகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகளையும் தெளிவாக விளக்கியிருக்கிறார். இன்னுமொருவிதத்தில் சொல்லப்போனால் தகுதியுள்ள ஊழியர்கள் திருச்சபை ஊழியத்துக்கு எந்தளவுக்கு அவசியமோ அந்தளவுக்கு தகுதியுள்ளவர்களாக அவர்களுடைய மனைவிகளும் இருக்க வேண்டும் என்பது கர்த்தரின் உறுதியான தீர்ப்பு. இல்லாவிட்டால் வேதம் ஊழியர்களின் மனைவிகள் பற்றிப் பேசாமலேயே இருந்திருக்கும்.

நம்மினத்தில் இன்றைக்கு விசுவாசமுள்ள ஊழியர்களின் பஞ்சம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். அதேநேரம் அநேக ஊழியக்காரர்களின் மனைவிகள் வேத இலக்கணங்களைக் கொண்டிராதவர்களாக இருப்பதும் கர்த்தரின் திருச்சபை ஊழியத்துக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்தாக இருக்கிறது. சபை மக்கள்மேல் அதிகாரம் செலுத்தி போதகனாகிய தன் கணவனுக்கு அவமரியாதையைத் தேடித் தரும் மனைவிகளையும், ஆத்துமாக்களை இழிவாகப் பேசி அவர்களோடு சண்டையிடும் மனைவிகளையும், கணவனின் காதுகளில் மந்திரம் ஓதி ஆத்துமாக்களுக்கெதிராகக் கணவனைத் தூண்டி வருகிற மனைவிகளையும், ஏன் பிரசங்க மேடை ஏறி அதிகாரம் செலுத்துகிற மனைவிகளையும் பற்றி ஆத்துமாக்கள் அறிந்திருந்திருக்கிறார்கள். அதையெல்லாம் மனதில் வைத்துப் பொருமிக் கொண்டிருக்கிறவர்கள் அநேகர். இதையெல்லாம் கண்டும் காணாதுமாய் கணவன்மார்கள் இருந்துவிடுகிறார்கள். சபை சபையாய் ஒரே போதகன் அதிகாரம் செலுத்தி வருவதால் அவர்களுக்கு ஒருவரும் தாழ்மையோடு புத்திசொல்லித் திருத்தமுடியாமல் இருக்கிறது. அப்படி உதவ வருகிறவர்களை அவர்கள் எதிரிகளாகப் பாவித்து தட்டிவிடுவது எல்லா இடங்களிலும் நடக்கின்ற ஒன்று. அதுவும் அவர்கள் மேல் போலிக்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி சபை நடவடிக்கைகூட எடுத்திருக்கிறார்கள் சிலர். தன்னுடைய மனைவியைப் பற்றி ஆத்துமாக்கள் குறை கூறுவதைக் கேட்பது எவருக்குமே கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும் ஊழியத்தில் இருக்கும்போது குறைபாடான மனைவியைக் கொண்டிருப்பவர்கள் ஆத்துமாக்களின் அன்பையும், நம்பிக்கையையும் ஒருபோதும் அடைய முடியாது என்பதையும், அவர்களுக்கு ஆத்தும ஆலோசனை வழங்கும் தகுதியை இழந்துவிடுகிறோம் என்பதையும் உணர்வது அவசியம்.

நம்மினத்தில் ஊழியத்தில் இருப்பவர்களுக்கு இப்படித் தகுதியில்லாத மனாவிகள் வாய்த்துவிடுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. தமிழர்கள் மத்தியில் இருக்கும் Arranged marriage முறையினால் யாரோ சிபாரிசு செய்கிற பெண்ணை ஊழியக்காரன் திருமணம் முடித்து விடுவது ஒரு முக்கிய காரணம். ஆராய்ந்து பார்க்காமலும், தனக்கு வரப்போகிறவளைப் பற்றி ஒன்றுமே தெரியாமலும் ஊழியக்காரன் அவளை மணந்துகொள்ளுகிறான். அதுவும் ஒருவன் திருமணத்துக்கு முன் போதகனாக வந்துவிட்டால் மரத்திலிருந்தாவது பறித்து ஒருத்தியை உடனடியாக மணமுடித்து வைத்துவிட வேண்டுமென்பது தமிழினத்து ஊழியக் கோட்பாடு. ஏனெனில், ஊழியக்காரன் மனைவி இல்லாமல் ஊழியம் செய்யக்கூடாதாம். ஊழியம் செய்கிறவனுக்கு மனைவி தேவை என்பது உண்மைதான், அதற்காக காலத்துக்கும் இணைந்து வாழப்போகிற ஒருத்திக்கு கண்ணைக் கட்டிக்கொண்டா தாலி கட்டுவது?

அதுமட்டுமா, வாழ்க்கையில் பல கனவுகளோடு திருமணத்துக்கு ஒத்துக் கொள்கிற அந்தப் பெண்ணும் ஊழியத்தில் செய்ய வேண்டிய தியாகங் களையும், பிரச்சனைகளையும், துன்பங்களையும் அறியாது அதில் நுழைகிறாள். திருமணமாகி வருடங்கள் ஆக ஆக மணவாழ்க்கையில் பிரச்சனைகள் ஆரம்பமாகின்றன. அத்தோடு ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறவனுக்கு மனைவியாக இருக்கிற முதிர்ச்சியும் அந்தப் பெண்ணுக்கு இல்லாததால் ஆத்துமாக்கள் மத்தியில் அவள் தவறாக நடந்துகொள்ளுகிற ஆபத்தும் ஏற்படுகிறது. அதனால் “வாய் சரியில்லாதவள்”, “மூட்டி வைக்கிறவள்”, “கோள் சொல்லுகிறவள்”, “சண்டைக் கோழி”, “அடங்காப்பிடாரி” என்று பெயர் வாங்கியிருக்கிற ஊழியக்காரர்களின் மனைவிகள் ஏராளம். இதையும்விட விசுவாசத்தையே வாழ்க்கையில் அடையாமல் சீ. எஸ். ஐ, மெத்தடிஸ்ட், லூத்தரன் போன்ற பாரம்பரிய சபைகளிலும், பெந்தகொஸ்தே சபைகளிலும் இருந்து வளர்ந்திருக்கின்ற பெண்களை, அவர்கள் சபைக்குப் போகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக விசுவாசிகள் என்று தவறாக நம்பி யாருடைய சிபாரிசாலோ திருமணம் முடித்து பின்னால் அவளுக்கு விசுவாசிக்குரிய அடையாளங்களே இல்லை என்றறிந்து இரகசியமாக உள்ளுக்குள்ளேயே பொருமிக்கொண்டிருக்கும் கணவன்களும் அதிகம்.

இப்படிப் பெற்றோர்கள், உறவினர்கள், சபைத்தலைவர்கள் பேசித் தீர்மானிக்கும் திருமண முறை, வயது வந்தாயிற்று எனவே காலத்தைக் கடத்தாமல் எவனையோ அல்லது எவளையோ எப்படியாவது கட்டியே ஆக வேண்டும் என்ற பத்தாம்பசலித்தன சமுதாய எண்ணப்போக்கு, கிறிஸ்தவம் என்ற பெயரில் மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும் அனுபவ பூர்வமாக அறிந்திராமல் பரவிக்காணப்படும் போலிக் கிறிஸ்தவம் ஆகியவை இன்றைக்கு சாதாரணமாகவே கிறிஸ்தவர்களுடைய திருமண வாழ்க்கையைப் பாதித்துக்கொண்டிருக்கிறது. ஊழியத்தில் இருப்பவர்களை மட்டும் இது பாதிக்காமல் இருக்க முடியுமா?

ஊழியக்காரர்கள் மெய்யான விசுவாசத்தைக் கொண்டிருந்து

*அவர்களுடைய மனைவிமார் மெய்யான விசுவாசிகளாக இருக்க வேண்டும். அப்படியில்லாத நிலையில் அவர்கள் ஒருபோதும் ஊழியத்தில் இருக்கக்கூடாது. அதைத்தொடர்வதும் பெரிய அநியாயம். மெய்யான விசுவாசமுள்ள ஊழியக்காரனின் மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கிறது என்பதை இனி ஆராய்வோம்.*

**1. எல்லாக் கிறிஸ்தவப் பெண்களைப்போல விசுவாசத்தில் உறுதியாய் இருந்து மற்றவர்களுக்கு உதாரணமாய் இருக்க வேண்டும்.**

*விசுவாசி என்று பெயரளவில் எவரும் இருந்துவிடக்கூடாது. இயேசு கிறிஸ்துவில் இருக்கும் விசுவாசம் வாழ்க்கையில் நடைமுறையில் இருந்தாக வேண்டும். நடைமுறை வாழ்க்கையில் தினசரி வேத வாசிப்பும், ஜெபமும், சபைவாழ்க்கையில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகவும் இருக்க வேண்டும். ஓய்வுநாளில் ஒரு ஆராதனைக்கு மட்டும் போக்குக்குப் போய் விட்டு மாலை ஆராதனைக்கு வீட்டிலிருந்துவிடுகிறார்கள் சில ஊழியர் களின் மனைவிகள். அவர்கள் சபை ஜெபக்கூட்டத்துக்கும் போவதில்லை. இதெல்லாம் பெருந்தவறு. போதகனும், அவனுடைய மனைவியும் இந்த விஷயங்களில் சபை ஆத்துமாக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். வாய்ச்சவடாலைவிட வாழ்ந்துகாட்டுவது ஆத்துமாக்களை பரிசுத்தத்தில் வளரச் செய்யும். ஊழியர்களின் மனைவிகளின் விசுவாச வாழ்க்கை சபையார் பார்த்து ஆச்சரியப்பட்டு வாழ்ந்தால் இப்படியல்லவா வாழவேண்டும் என்று சொல்லும்படி இருக்க வேண்டும். வீடு சரியில்லாத வன் சபையை நடத்த லாயக்கில்லாதவன். முதலில் வீட்டைத் திருத்திக் கொண்டு ஊழியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.*

*தினசரி வீட்டாராதனை நடத்துவதில் மனைவி அதிகம் சிரத்தையாக இருக்க வேண்டும். அதில் அக்கறை காட்டி கணவனுக்கு உதவ வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை செய்துவைத்து கணவனிடம் இருந்து கற்றுக் கொள்ளுவதில் அக்கறையாக இருக்க வேண்டும். சபை ஆராதனை, ஜெபக் கூட்டம், வேதப்பாடங்களில் விசுவாசத்தோடு கலந்துகொண்டு கிருபை யிலும், வேத அறிவிலும் வளர வேண்டும். இதையெல்லாம் ஒரு மனைவி யில் பார்க்க முடியாவிட்டால் அவளுடைய கணவனின் ஊழியம் சமுத் திரத்தில் எதிர்நீச்சல் போடுவதுபோல்தான் இருக்கும். விசுவாசமில்லாத மனைவியை வைத்துக்கொண்டு எங்களுக்கு உபதேசம் செய்கிறான் என்று சபையார் அவனைக் கேலி பேசுவார்கள்.*

**2. கணவனுக்கு அடங்கி நடப்பதில் சபையார் முன் நற்சாட்சி பெறுவதோடு அதில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாய் இருக்க வேண்டும்.**

*பவுல் எபேசியர் 5:22-24ல் சொல்லுவது போலவும், 1 பேதுரு 3:1-6 வசனங்களில் விளக்குவது போலவும் ஊழியர்களின் மனைவிகள கண வனுக்குக் கட்டுப்பட்டு அவர்களின் ஆத்மீக வழிகளைப் பின்பற்றி வாழ வேண்டும். கிறிஸ்து சபைக்குத் தலையாக இருப்பது போல் வீட்டுக்கு கணவனே தலைவன் என்பதை மனைவிகள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. அம்மா, ஆட்டுக்குட்டியென்று வீட்டுக்கு வெளியில் இருப்பவர் களின் ஆலோசனைப்படி வாழ்ந்து கணவனுக்குத் துரோகம் செய்யக்*

கூடாது. கணவன் பேச்சு பெரிதென்று மதித்து, கணவன் பெயர் சபை மக்கள் முன் உயரும்படி நீதிமொழிகள் 31ல் பேசப்படும் பெண்ணைப் போல வாழ்வது ஊழியர்களின் மனைவிகளின் கடமை. மனைவி ஒரு போதும் கணவனுக்குக கொடுக்கப்பட்டிருக்கிற பொறுப்புகளைச் செய்யப் பார்த்து கணவன் பெயருக்கு இழுக்குத் தேடித்தந்துவிடக்கூடாது. சாராள் ஆபிரகாமுக்கு அமைந்து நடந்து நற்பெயர் பெற்றாள். இன்றைக்கு அநேக ஊழியர்களின் மனைவிகள் இந்த விஷயத்தில் பெருந்தவறு செய்கிறார்கள். மனைவிகள் இப்படி நடந்துகொள்ளுவதைப் பார்த்தும் பார்க்காதிருக்க கணவன் ஆண்மையில்லாதவன். ஆணைப்போல நடந்துகொள்ளுகிற மனைவிகளை நம் சமுதாயம் பாராட்டுவதில்லை. தலைவிரிகோலமாகப் போய்த் தன்னை அலங்கோலப்படுத்திக் கொள்ளுகிறவளாகத்தான் கருதும். மனைவிக்குப் பயந்து வாழ்கிற அநேக ஊழியர்கள் இருக்கிறார்கள். அப்படி வாழ்வதைவிட சேலையைச் சுற்றிக்கொள்ளலாம். மனைவிக்கு ஆலோசனை சொல்லி, தன் பேச்சுப்படி அவளை வாழவைக்க முடியாதவர்கள் ஊழியத்தில் இருந்து உடனடியாக விலகிவிட வேண்டும். உன்னையும், ஏய்த்து, சபையையும் ஏய்த்து, இயேசு கிறிஸ்துவையும் இந்த விஷயத்தில் ஏமாற்றப்பார்ப்பது பெருந்தவறு. கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற மனைவி களே! இயேசுவின் போதனைப்படி நல்ல மனைவியாக கணவனுக்கு அடங்கி வாழுங்கள். இல்லாவிட்டால் நியாயத் தீர்ப்பு நாளில் உங்களை ஆண்டவர் சும்மாவிடமாட்டார்.

**3. கணவனின் ஊழியத்தில் அக்கறைகாட்டி அதற்குப் பங்கம் வந்துவிடாபடி வீட்டில் அமைதி குடியிருக்கும்படி அதைத் திறமாய் நடத்த வேண்டும்.**

ஊழியத்தில் இருக்கும் கணவனுக்கு எத்தனையோ பொறுப்புக்களும், கஷ்டங்களும், தொல்லைகளும் இருக்கும். தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டு கர்த்தரை விசுவாசித்து கணவன் தன் பணிகளைச் செய்துவர வேண்டுமானால் மனைவி பிள்ளைகளை நல்லபடியாக கவனித்து வளர்த்து வீட்டில் அமைதி இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். கணவனை வேலைக்காரன்போல் நடத்தி அநாவசியத்துக்கும் விரட்டிக் கொண் டிருக்கிற மனைவிகள் இருக்கிறார்கள். மனைவி வீட்டை நடத்துவதற்காக அழைக்கப்பட்டவள். அவளுடைய பொறுப்பு வீட்டுவேலைகளை நல்ல படியாக செய்து நேரத்துக்கு உணவைத் தயாரித்து, பிள்ளைகளின் தேவைகளைக் கவனித்து வீடு ஒழுங்காக இருக்கும்படிப் பார்த்துக் கொள்வதுதான். அதை மனைவிகள் சாதாரணமாக எண்ணிவிடக்கூடாது. கர்த்தர் அந்த ஊழியத்தை ஏற்படுத்தி மனைவிகளுக்கே அதைக் கொடுத்திருக்கிறார். ஊழியவேலைகளை செய்துவிட்டு கணவன் வீட்டுக்கு வருகிறபோது வீடு அல்லோலகல்லமாக இருக்கக்கூடாது. அதில் அமைதி இருக்கவேண்டும். மனைவி இதை முறையாக செய்ய கணவன் அவளுக்கு துணையாக இருக்க வேண்டும். எல்லா வசதிகளையும் செய்துதர வேண்டும். விட்டை நடத்தமுடியாதவன் சபையை நடத்த முடியாது என்று கர்த்தர் பவுல் மூலம் சொல்லுகிறார். மனைவி வீட்டில் அமைதி காத்து, பிள்ளைகளை நல்லபடி வளர்த்தெடுக்கும்படி வீட்டை மேற்பார்வை செய்து நிர்வகிப்பதையே பவுல் இந்த வார்த்தைகளின் மூலம் விளக்குகிறார்.

### 4. ஊழியனின் மனைவி நல்லொழுக்கத்தோடும், அடக்கத்தோடும் நடந்துகொள்ள வேண்டும்.

*பொதுவாகவே எல்லாப் பெண்களும் ஒழுக்கத்தோடும், அடக்கத்தோடும் நடந்துகொள்ளும்படி வேதம் எதிர்பார்க்கிறபோது ஊழியர்களின் மனைவிகள் இந்தவிஷயத்தில் மற்றவர்களைவிடக் கவனமாக நடப்பது அவசியம். கணவனுக்கு மட்டும் அடங்கி நடக்காமல் ஊழியர்களின் மனைவிகள் பொது இடங்களில் ஏனைய ஆண்களுக்கு முன்னாலும் அடக்கத்தோடு நடந்துகொள்ள வேண்டும். பெண்கள் கூடிவரும் இடங்களிலும் எல்லோருக்கும் முன்னுதாரணமாய் இருக்கும்படி நடந்துகொள்ள வேண்டும். கர்த்தர் எல்லோரையும் ஊழியம் செய்யும்படி அழைத்திருக்கிறார், ஆணுக்கும் பெண்ணுக்கும் அதில் வித்தியாசம் காட்டக்கூடாது என்று அதிகப்பிரசங்கித்தனமாய் பேசி சபை மேடைகளில ஏறிப் பேசி, பாடி, பிரசங்கம் செய்து மனைவிகள் தங்களை அவமானப்படுத்திக் கொள்ளக் கூடாது. பெண்கள் செய்யக்கூடிய ஆத்மீக ஊழியங்கள் அநேகம் இருக்கின்றன. ஆனால், ஆணுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதை பெண் செய்யப்பார்ப்பது ஆணாக ஆசைப்படுவதற்கு சமம். அதைக் கர்த்தர் வெறுக்கிறார். ஊழியர்களின் மனைவிகள் இந்த விஷயத்தில் உலகப்பிரகாரமாக நடந்து கொள்ளாமல் கிறிஸ்தவப் பெண்களுக்குரிய அடக்கத்தோடு நடந்துகொள்ளவேண்டும்.*

### 5. ஊழியர்களின் மனைவிகள் தங்களுடைய பேச்சில் கவனமாக இருக்க வேண்டும்.

*“பொம்பளை சிரிச்சாப் போச்சு; புகையிலை விரிந்தால் போச்சு” என்பது கிராமத்துப் பழமொழி. விரிகின்ற புகையிலையால் எந்தளவுக்குப் பலனில்லையோ அதேபோல் வாய்விட்டுப் பொது இடத்தில் சிரிக்கிற பெண்ணாலும் மதிப்பில்லை என்பது இதற்குப் பொருள். பெண்கள் அடக்கமாக இருந்து அமைதியாகப் பேச வேண்டும் என்பதே வேதபோதனை. அதுவே பெண்களுக்கு அழகு. வெட்டிப்பேச்சு பேசுவதிலும், அவதூறு சொல்லுவதிலும், கேலி பேசுவதிலும், மற்றவர்களைப்பற்றி இழிவாகப் பேசுவதிலும் பெண்கள் ஒருபோதும் ஈடுபடக்கூடாது. அத்தகைய பெண்களை மனைவியாகக் கொண்டிருப்பவன் தன்னை அவமானப்படுத்திக் கொள்ளுகிறான். அவனுடைய ஆண்மைக்கே அது சவால். அத்தகைய மனைவிகளைக் கொண்டிருப்பவர்கள் அவர்களைக் கண்காணித்து புத்திசொல்லித் திருத்த வேண்டும். 1 தீமோத்தேயு 3:12ல் “அந்தப்படியே ஸ்திரிகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும்” என்று பவுல் ஊழியர்களின் மனைவிகளுக்கிருக்க வேண்டிய தகுதி பற்றி விளக்குகிறார். 1 தீமோத்தேயு 2:11ல், ஸ்திரியானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்” என்று பவுல் கூறுகிறார். கனிவான பேச்சோடு, உண்மையைப் பேசி ஊழியர்களின் மனைவிகள் நடந்துகொள்ள வேண்டும். ஊழியத்தோடு வருகின்ற பெரிய பொறுப்பால் தலைக்கனத்துக்கு இடங்கொடுத்து தடுமாறிப்போய் தவறாகப் பேசி நடக்கிற பெண்ணாக ஊழியக்காரனின் மனைவி இருக்கக் கூடாது. பிறர் கணவனை மதிக்கும்படி மனைவியின் பேச்சு இருக்க வேண்டும்.*

## கல்லுக்குத் தீனி

எனக்கு நினைவு தெரிந்து
அங்கே மழை பெய்து
ஐந்து வருடங்கள் இருக்கும்
கீற்றுக் குடிசை வீடுகளின்
அடுப்புப் புகையும், கரியும்
தாங்க முடியாது ஊரில்
தண்ணீருக்குக் காத தூரம்
போக வேண்டும் குடத்தோடு
கண்ணைக் கரிக்க வைத்து
தூசு பறக்கும் ஊரில்
விளைச்சளை அறியாத ஊர் மண்
விடுகிறது பெருமூச்சு
வானத்தைப் பார்த்து,
என் கதையைக் கேட்கிறாயா
என்பது போல்.
அன்றாடம் கோடை வெய்யிலால்
சுருண்டு மாளுகிறவர்கள்
அங்கே அதிகம்,
அன்றாடக் கஞ்சிக்கு வாடும்
ஜீவன்கள் ஆயிரம் பேர் ஊரில்,
இத்தனைக்கும் மத்தியில்
குலுகுலுவென்ற கற்கோவிலில்
குடியிருக்கும் சிவனின் குடும்பத்திற்கு
நடக்கிறது திருவிழா நாளும்
தேங்காய், பழம், பஞ்சாமிர்தம்,
கொழுக்கட்டை என்று ஆரவாரத்தோடு.
இருப்பது பட்டினி, கல்லுக்குத் தீனி
இவர்கள் புத்தி ஏன் இப்படிப் போகுது?

– சுபி

# எண்ணங்கள்!


வேதத்தின் கருத்துக்களைத் தெளிவாகக் கொடுத்துவரும் திருமறைத்தீபத் தொகுப்புகள் மிக அழகு. பொக்கிஷமான நூல் வரிசைகளில் திருமறைத்தீபம் விளங்குகிறது. நண்பர் ஒருவர் வாயிலாக சிலவற்றை வாசித்தேன். பத்திரிகையை என்னுடைய முகவரிக்கும் அனுப்பி உதவுங்கள். வேத அறிவில் முன்னேற உதவும் - ***கேப்ரியல் செல்வகுமார், தமிழ்நாடு***

திருமறைத்தீபம் பத்திரிகை என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு முக்கியமான ஊன்றுகோலாக விளங்கி வருகிறது. "வாழ்க்கையில் தீர்மானம் எடுப்பது எப்படி", "சிலுவைக்குறி போடலாமா?" போன்ற ஆக்கங்கள் எனது ஆவிக்குரிய கண்கள் திறக்க உதவியது. மேலும், "எனக்கு நானே ராஜா" என்ற செய்தி நான் இருக்கின்ற பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற சுயாதீன சபைகளின் நிலைமையை அப்படியே எடுத்துக்காட்டுவதாய் இருந்தது. தேவன் தன்னுடைய ஞானத்தையும், ஆவியையும் அளவில்லாமல் கொடுத்து இன்னும் வெவ்வேறுவிதமான சத்தியங்களை உங்கள் மூலமாக வெளிப்படுத்தி தமிழ் கிறிஸ்தவ மக்களை உயிர்ப்பிக்கும்படி தேவனிடத்தில் ஜெபிக்கிறேன். - ***ஏ. எஸ். டி கிரிஸ்டோபர், தமிழ்நாடு***

அக்டோபர்-டிசெம்பர் 07 திருமறைத்தீபம் பத்திரிகை கிடைத்தது. அதில் அறிவித்துள்ளபடி எனக்கு முன்னைய இதழ்களைத் தயவுசெய்து அனுப்பிவையுங்கள். அது எனக்குப் பிரயோஜனமாக இருக்கும். சத்தியத்தைத் தமிழ் மக்களுக்கு தூரதேசத்திலிருந்து அறிவிக்க வேண்டும் என்ற உங்களுடைய பாரம் பாராட்டத்தக்கது. பத்திரிகையை வெளியிட உதவுகிற எல்லோருக்காகவும் ஜெபிக்கிறேன். தொடர்ந்து எனக்குப் பத்திரிகையை அனுப்பிவையுங்கள். - ***ஜீ. சாம் எட்வின், தமிழ்நாடு***

## முன்னைய இதழ்கள் பற்றிய அறிவிப்பு:

*முதல் முதலாக பத்திரிகையைப் பெற்று வாசிக்கின்ற வாசகர்கள் ஆரம்பத்திலிருந்து வெளியிடப்பட்ட இதழ்களையும் அனுப்பிவைக்க முடியுமா, என்று அடிக்கடி எழுதிக் கேட்டு வருகிறார்கள். உண்மையில் அப்படி எனக்குத் தெரிந்த எந்தப் பத்திரிகையும் ஆரம்பத்திலிருந்து வெளியிடப்பட்ட இதழ்களை அனுப்பித் தருவதில்லை. அப்படி மறுபதிப்புச் செய்து அனுப்பிவைப்பதென்பது அதிகமான செலவேற்படுத்தும் காரியம். அச்சிடும் செலவு மட்டுமல்லாமல், தபால் செலவும் மிக அதிகம். கர்த்தருடைய கிருபையினால் இந்த ஊழியத்தில் ஆர்வமுள்ள ஒருவரின் உதவியால் நாம் பழைய இதழ்களை மறுபடியும் அச்சிட்டு வைத்திருக்கிறோம். படிக்க வேண்டும் என்று கேட்டு எழுதுகிறவர்களுக்கு அவற்றை அனுப்பி வருகிறோம். இருக்கின்ற இதழ்கள் அனைத்தும் முடிவடைந்தவுடன் மறுபடியும் அவற்றை அச்சிடும் எண்ணம் எங்களுக்கு இல்லை. இருப்பவற்றை நாம் பல வருடங்களுக்குத் தொடர்ந்து வைத்திருப்பதையும் விரும்பவில்லை. ஆகவே, ஆரம்பத்திலிருந்து வெளிவந்த இதழ்கள் இல்லாத வாசகர்கள், அவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் தயவுசெய்து உடனடியாக சரியான முகவரியை பின்கோட்டுடன் எழுதி எங்களுக்கு அனுப்பி வைக்கவும். 2008ம் ஆண்டுக்குப் பிறகு பழைய இதழ்களை அனுப்பிவைப்பதை நிறுத்திக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறோம். - ஆசிரியர்.*




பத்துக் கட்டளைகள் இன்றைக்கு தெளிவாக சபைகளில் போதிக்கப்படுவதில்லை. கிறிஸ்தவர்கள் அதன் போதனைகளை அறியாதிருக்கிறார்கள். அது அவசியமில்லை என்று எண்ணுபவர்களும் உண்டு. பரிசுத்த வாழ்க்கைக்கு அடித்தளமான பத்துக் கட்டளைகளின் போதனைகளை விளங்கி அதன்படி வாழ்ந்து கர்த்தரை மகிமைப்படுத்த இன்றே வாங்கி வாசியுங்கள்.


**கிடைக்குமிடம்:**

இவாஞ்ஜெலிக்கள் பாப்திஸ்து சபை

57 / 2, டி. பி. கே மெயின் ரோடு, பைகாரா, மதுரை 625004

தொலைபேசி எண்: 9994181010

கிருபை இலக்கிய சேவை

19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6, ஸ்ரீ லங்கா

மலர் 14 ஜனவரி - மார்ச் 2008 இதழ் 1


1. சத்தியப் போர்!

2. கிறிஸ்தவக் கோட்பாடுகள்

3. கிறிஸ்துவின் வழியில் திருச்சபை ஊழியம் - 7

4. இங்கிலாந்தில் சீர்திருத்தம் (திருச்சபை வரலாறு)

5. ஜோன் நியூட்டன் (இரண்டாம் பாகம்)

6. நீங்கள் ஊழியர்களின் மனைவிகளா, இல்லை . . .

7. கல்லுக்குத் தீனி - கவிதை

8. எண்ணங்கள்!


Terau Print